யேசுகிறிஸ்து

இயேசுகிறிஸ்து

ஆசிரியர்

வித்துவான் : வை. சுப்பிரமணியன்,

தலைமைத் தமிழாசிரியர்

நகராண்மை உயர்நிலைப்பள்ளி

சேலம்

வேந்தன் பதிப்பகம்

குகை, சேலம்

உரிமையுடையது.

விலை 0—15—0

முதற்பதிப்பு. 1954

ஸ்ரீ இலக்ஷ்மிவிலாஸ் பிரஸ், சேலம்

முகவுரை

நல்லாரைக் காண்பதுவும்; நல்லார்சொற் கேட்பதுவும்; நல்லார் குணங்கள் உரைப்பதுவும்; அவரோடிணங்கியிருப்பதுவும் நன்று; என்பது நல்வழி. உலகப் பெருமக்களுள் ஒருவராகத்தோன்றி மக்களிடையே வாழ்ந்து, அன்பு, அகிம்சை, பொறுமை முதலிய நற்பண்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் இயேசுகிறிஸ்து. இப்பெருமகனாரின் வாழ்வு நிகழ்ச்சிகளை அறிவதால் மக்கள் பல நற்பழக்கங்களை மேற்கொள்ளுவர். ஒழுக்கமே மக்களது நல்வாழ்விற்கு அடிப்படையாக இருப்பதால் இத்தகைய பெரியார்களின் வாழ்வு நிகழ்ச்சிகளை மாணவர்கள் அறிவது இன்றியமையாததாகும்.

இச்சிறுநூலை என்னை எழுதுமாறு தூண்டிய வேந்தன் பதிப்பகத்தாருக்கும்; நூல் எழுதுங்கால் உடனிருந்துதவிய துரை பழனிவேலன், B. A., அவர்கட்கும்; நன்முறையில் அச்சிட்டுதவிய ஸ்ரீ இலக்ஷ்மிவிலாஸ் பதிப்பகத்தாருக்கும் எனது நன்றி.

இதனைக் கண்ணுறும் தமிழாசிரியர்களும்; தலைமை ஆசிரியர்களும் கல்வித்துறையினரும் இந்நூலை ஆதரித்து மாணவர்களுக்கு வழங்கி இப்பணியில் என்னை மேலும் மேலும் ஊக்குவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்

சேலம்,
9—11—54

இங்ஙனம்,
வை. சுப்பிரமணியன்.

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	மதமார்க்கங்கள்	1
2.	மரியம்மை	3
3.	கிறிஸ்துவின் பிறப்பு	8
4.	இளம்பருவம்	12
5.	பாலஸ்தீனம்	21
6.	முழுக்குமுனிவர்	24
7.	முதல்சீடர்கள்	30
8.	முதல்யாத்திரை	36
9.	பிறந்தநாட்டில் நடந்தவை	39
10.	பன்னிரண்டு சீடர்கள்	44
11.	மலைச்சொற்பொழிவு	50
12.	அற்புத நன்மைகள்	54
13.	எடுத்துக்காட்டுக்கதைகள்	67
14.	இயேசு சபை	73
15.	எதிர்ப்புக்காரர்கள்	80
16.	செருசலேம்	89
17.	கடைசி இராப்போசனம்	93
18.	சிலுவைப்பாடு	98

இயேசுகிறிஸ்து

1. மதமார்க்கங்கள்

மதங்களின் நோக்கம்

உலகப் பெரியாராகிய காந்தியடிகள் எல்லா மதங்களையும் அன்பாக நேசித்தார். சிறந்த சைவ ராகிய திரு. வி. க. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை முதலிய அறிஞர்கள் புத்தர், கிறிஸ்து, நபி, போன்ற பல மதத் தலைவர்களையும் புகழ்ந்து காவியங்களும் கவிதைகளும் பாடியுள்ளனர். எல்லா மதங்களின் நோக்கமும், ஒழுக்கத்தையும் சமூகக்கட்டுப்பாட்டையும் பாதுகாத்து மக்கள் வாழ்க்கைக்குத்துணை புரிவதேயாகும்; என்ற இச் சீரிய உண்மையை

பூமியிலே கண்டம் ஐந்து மதங்கள் கோடி
புத்தமதம் சமணமதம் பார்சி மார்க்கம்
சாமிஎன ஏசுபதம் போற்றும் மார்க்கம்
சனாதனமாம் இந்துமதம் இஸ்லாம் யூதம்
நாமமுயர் சீனத்துத் தாவு மார்க்கம்
நல்லகண் பூசிம்தம் முதலாப் பார்மேல்
யாமறிந்த மதங்கள்பல உளவா மன்றே
யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங் கொன்றே.

என்ற தேசீயக்கவி பாரதியின் பாடல் தெளிவாக வற்புறுத்துகின்றது. ஆதலின் எல்லாமதத் தலைவர்களும் தன்னலமற்ற பரந்த மனப் பான்மையுடைய சிறந்த சான்றோர்களென்பதில் சிறிதும் ஐயமில்லை. அத்தகைய சான்றோர்களின் உண்மை வரலாற்றைக் கற்பதால் அவர்களது இயல்புகளையும் போதனைகளையும் தெளிவாக அறியலாம். இத்தகைய உண்மைகளை உணர்ந்துவிட்டால் மதத்தின் பேரால் ஆவேசக்காரர்கள் தூண்டிவிடும் வெறிச்செயல்களுக்கு மக்கள் மனங்கொடார். எனவே மதங்களின் நோக்கத்தை அறிய மதத்தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் போதனைகளையும் அறிய வேண்டுவது இன்றியமையாததாகும்.

இன்று உலகில் பல கோடி மதங்கள் காணப்படினும் மிகுதியான மக்கள் கடைப்பிடித்து நிற்பது சிற்சில மதங்களேயாம். தற்போது உலகில் மிகுதியான மக்கள் கிறிஸ்தவர்களாக வாழ்கின்றனர். நாம் இன்று காலக்கணிதங்களை கி. மு., கி. பி. எனக் கணிக்கிறோம். இதன் பொருள் கிறிஸ்து பிறப்பதற்குமுன்; கிறிஸ்துபிறந்ததற்குப்பின் என்பது. இங்ஙனம் வரலாறுகளுக்கு எல்லைக்கல்லாக விளங்கும் அளவு பெருமைவாய்ந்த இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றினை நாம் நன்கு அறிந்துகொள்ளுவது இன்றியமையாததாகும். மக்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கு கிறிஸ்து ஒரு முன் மாதி

ரியாக வாழ்ந்தார் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே தாழ்ச்சியும், பொறுமையும், அடக்கமும் நிறைந்த அவரது மனித வாழ்வு மக்களுக்கு வழிகாட்டியாகுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. கல்வி வளர்ச்சிக்கும் வேறுபல முன்னேற்றங்களுக்கும் கிறித்தவ மதத்தவர்கள் பெருந்தொண்டு புரிந்துள்ளனர் என்பது உலகம் அறிந்ததே. ஆகலின் அம் மதத்தைத் தோற்றிவளர்த்த இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றினை இனி நாம் அறியத் தொடங்குவோம்.

2. மரியம்மை

இளம்பருவம்

இற்றைக்கு ஆயிரத்துத்தொளாயிரம் ஆண்டுகட்கு முன்னர் பாலஸ்தீனநாட்டில் ஒழுக்கத்திலும் தெய்வ பக்தியிலும் சிறந்த சுவக்கின், அன்னம்மாள் என்ற இரு பெற்றோர்கள் வாழ்ந்துவந்தனர். அவர்கட்குப்பல நலங்கள் வாய்த்திருந்தும் மக்கட்பேறின்மை அவர்களது மனத்தை வருத்தியது. தூய இல்லறம் புரிந்த அவ்விருவரும் தமக்கு மகப்பேறு கிடைக்கவேண்டுமென இறைவனை வழுத்தி வந்தனை புரிந்து வந்தனர். அவர்களது வேண்டுதல் விரைவில் நிறைவேறவில்லை. எனினும் அவர்கள் நம்பிக்கையில் குறைவுபடாமல் முதுமைப் பருவத்திலும்கூட

தமது விருப்பம் நிறைவேற வேண்டுமென இறைவனைத் தொழுதுவந்தனர்.

தூய இப்பெற்றோர்களின் வேண்டுதலுக்கு இறைவன் அருள்சுரந்ததுபோல தூய்மையே உருவான மிரியம் அல்லது மரியம்மை என்னும் பெண் மகவு பிறந்தாள். மிரியம் என்ற சொல்லின் பொருள் பெருமையுடையவள் அல்லது சமுத்திரத்தின் நட்சத்திரம் என்பது. நெடுங்காலம் தவமிருந்து அரிதாகப் பெற்ற மகவைப் பெற்றோர்கள் மிகவும் பாராட்டிச் சீராட்டிவளர்த்தனர். மரியம்மையும் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாகச் சிறப்புற, வளர்ந்தாள். 'விளையும்பயிர் முளையிலே தெரியும் என்ற பழமொழிக்கேற்ப அவ்வம்மை சிறுவயதிலேயே சிறந்த அறிவைப்பெற்றிருந்தாள். தம்மகளுக்கு ஒழுக்கம், கல்வி, தெய்வபக்தி முதலியவைகளைக் கற்பிக்கத் தொடங்கியபோது தம்மைவிட மேன்மையாகத் தம்மகள் அறிந்திருப்பதைக்கண்டு பெற்றோர்கள் வியப்புற்றனர். அதனால் பெற்றோர் மரியம்மையிடத்து மிக்க மதிப்பும் மரியாதையும் காட்டிவந்தனர்.

தேவாலயம்

மரியம்மை மிகச்சின்னஞ்சிறுமியாக இருக்கும் பொழுது ஒருநாள் அவளது பெற்றோர்கள் அவளைத் தேவாலயத்துக்கு எடுத்துச் சென்றனர். அங்கு

பூசனை நடக்கும்போது தம் அருமை மகளை இறைவனுக்குக் காணிக்கையாக வழங்கினர். அப்பொழுது மரியம்மை தேவாலயத்தின் படிகளை ஏறிக்கடந்து இறைவன் சந்நிதியை அடைந்தாள். அதைக்கண்ட பெற்றோர்பெரிதும் மகிழ்ந்தனர். இறைவனுக்குக் காணிக்கையாக வழங்கப்பட்ட மக்கள் தேவாலயத்திலேயே வளரவேண்டுமென்பது முறை. ஆகலின் மரியம்மையின் பெற்றோரும் தம் அருமை மகளைக் கோயில் வளர்ப்பிலேயே விட்டுவைக்க வேண்டிருந்தது. பெற்றோர் தம்மகளைப் பிரிதற்கு வருத்த முற்றனர் எனினும் இறைவன் கோயிலில் வாழும் மற்றை யூதச்சிறுமிகளோடு மரியம்மையையும் இருக்கும்படி விட்டுப்போயினர். நெடுக்காலம் தவமிருந்து பெற்ற பெருமணியைக் கடலில் இட்டவர்போல மரியம்மையின் பெற்றோர் தம்மகளின் பிரிவால் வருந்தி வாடினர்.

மரியம்மை ஆலயத்தில் வாழ்ந்தபோது சிறந்த நூல்களைக் கற்பதிலும் கடவுளை எண்ணித் துதிப்பதிலும் மலர்மாலை தொடுப்பதிலும், பூசனை புரிவதிலும், இன்னிசைபாடுவதிலும் ஈடுபட்டாள். உலகைப் பாதுகாக்க இரட்சகர் வருவார் என தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களை நன்கு மனப்பாடம் செய்தாள். "தீர்க்க தரிசனத்தின்படி இரட்சகர் உலகில் தோன்றும்போது அவ்விரட்சகர்க்கும் அவரது தாயாருக்கும் தான் ஒருசிறு

ஊழியக்காரியாகவாவது இருக்கும்பேறு கிடைக்காதா?" என ஏங்கினள். ஒழுக்கத்திலும் அறிவிலும் தெய்வபக்தியிலும் சிறப்புற வளர்ந்துவந்த மரியம்மைக்கு வயது பதினன்கு துவங்கியது.

திருமணம்

கன்னிமரியம்மை தேவாலயத்தை விட்டு நீங்கி இல்லறமாகிய நல்லறம்புரியும் காலம்வந்தது. நற்குணமும், நல்லொழுக்கமும் சிறந்து, அமைந்த வாழ்வுடைய சூசையப்பருக்கு மரியம்மையை மணம் செய்துகொடுக்க ஏற்பாடு நடந்தது. மரியம்மையும் சூசையப்பரை மணந்துகொள்ள மனம் இசைந்தார். திருமணம் சிறப்புற நடைபெற்றது. தாவீது மன்னர் வழியில் வந்த சூசையப்பர் அதேவழியில் தோன்றிய மரியம்மையைப் பெறுதற்கரிய பேருகக் கருதி வாழ்க்கைத்துணைவியாக ஏற்ருர்.

சூசையப்பர் பாலஸ்தீன நாட்டின் வடபாலுள்ள மலைகள் நிறைந்த கலிலேயாநாட்டின் ஒரு பகுதியாகிய நாசரேத்து என்னும் சிற்றூரில் தச்சுவேலை செய்துவந்தார். அவர் அருளால் பெரியவராக இருப்பினும் பொருளால் எளியவராகவே விளங்கினர். தெருக்கோடியில் இயற்கையாக நின்ற கற்பாறையோடு சேர்த்து இணைத்துக்கட்டப்பட்ட சிறுவீட்டில் வாழ்ந்துவந்தார். தச்சுத்தொழிலில் தனது கணவனுக்குக் கிடைக்கும் சிறு வருமானத்தைக்கொண்டு

மரியம்மை அன்பும் ஆதரவும் நிறைய சிக்கனவாழ்வு வாழ்ந்தாள். ஏழையான தன் கொழுநரை நன்கு மதித்து மரியாதை செய்துவந்தாள். கிடைத்தவரு மானம் மிகவும் சொற்பமே என்பது உண்மையா யினும் மனமொத்த அவரது இல்வாழ்வில் எல்லாம் நிறைந்து நின்றது. 'இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை' என்பது தமிழ் முதுமொழியன்றோ!

தேவதூதன்

ஒருநாள் மரியம்மை இரவு நெடுநேரம்வரை தனது இல்லக் கடமைகளனைத்தையும் செய்து முடித்துவிட்டு இறைவனை வணங்க முற்பட்டாள். ஊரவர் யாவரும் ஆழ்ந்த துயிலில் இருக்கும் அவ் வமயம் மரியம்மை மட்டும் சிறுவிளக்கொளியின் முன் இறைவனை வணங்கிக்கொண்டிருந்தாள். அதுபோது அவள் முன்னிலையில் தெய்வ அழகுபடைத்த தேவ தூதன் ஒருவன் தோன்றினன். அவன் மரியம்மை யின்முன் முழந்தாட்படியிட்டு அன்னையே! இறை வன் உம்முடனேகூடி நிற்கிறார். விரைவில் நீர் ஒரு திருமகனைப்பெறுவீர். அவருக்கு 'சேசு' என்று பெயர்சூட்டுங்கள். அவரை உலகம் 'தேவசுதன்' எனப்போற்றும் அவரால் உலகின் பாவங்கள் நீங் கும். என்றுகூறி மறைந்தான். இத்தகைய அதிச யச் செய்தியை மரியம்மை கேட்டு மகிழ்ந்தாளே ஒழிய அதைத்தன் கணவராகிய சூசையப்பர் முதல் வேறு யாருக்கும் கூறவில்லை. காரணம் அச்செய்தி தனக்

குப் பெருமை தருவதாக இருப்பதால் வேறுயாரிடமும் கூறலாகாதெனக் கருதினள்.

சில நாட்கள் கழித்து மரியம்மை மலைநாடாகிய யூதேயாவிலுள்ள 'அயின்கரீம்' என்னும் ஊருக்குச்சென்று தன் உறவினர்களில் ஒருத்தியாகிய எலிசபெத் அம்மையாரோடு மூன்றுமாதகாலம் தங்கியிருந்தார். மரியம்மைக்குத் தேவகுமாரனாகிய இயேசு பிறப்பதை அறிவித்த தேவதூதன் நல்வாழ்க்கை நடத்தும் எலிசபெத் அம்மைக்கும் அதனை அறிவித்திருந்தான். ஆதலால் எலிசபெத் அம்மையார் மரியம்மையை மிகவும் பெருமைப்படுத்திப் போற்றிப் பாதுகாத்து வந்தாள்.

மரியம்மை மீண்டும் நாசரேத்தூர் வந்தபோது சூசையப்பர் தம்மனைவி கருப்பமுற்றிருப்பதை அறிந்தார். ஒருநாள் தேவதூதன் சூசையப்பருக்கும் மரியம்மையின் கருப்பத்திலிருக்கும் தேவகுமாரனின் பெருமையை எடுத்துரைத்தான். அதிலிருந்து சூசையப்பர் தம்மனைவியை மிகவும் மரியாதையோடு போற்றிப்பாதுகாத்துவந்தார்.

3. கிறிஸ்துவின் பிறப்பு

குடிமதிப்புக் கணக்கு

இங்ஙனமிருக்கையில் ஒருநாள் நாசரேத்தூக்கு மக்களின் குடிமதிப்பைக் குறிக்க அந்நாட்டு அரசனு

கிய 'அகுத்தூர் செசார்' கட்டளையின்படிப் பல அரசாங்க அதிகாரிகள் வந்தனர். அவர்கள் தமது குடிகளை ஒழுங்கு முறையாகக் குடிமதிப்புக் கணக்குப்பதிவுசெய்துகொள்ள வேண்டுமென்று கட்டளையிட்டனர். தாவீதுமன்னரின் வழிவந்த யூதர் குடிமக்களாயிருப்போர் தங்கள் முன்னோர்கள் இருந்த ஊருக்குச்சென்று குடிமதிப்புக் கணக்கு எடுக்கும் அதிகாரியிடம் தமது பெயரைப் பதிவுசெய்து கொள்வதோடு தாங்கள் செசாரையே அரசராகக்கொண்டிருப்பதாகவும் கூறவேண்டுமென் உத்தரவிட்டனர்.

பெத்லேம் செல்லுதல்

இங்ஙனம் மன்னன் விதித்த ஆணைக்கு இணங்கி நாசரேத்தூரிலிருந்தும், பிறஊர்களிலிருந்தும் யூதக் குடிகள் தாவீதரசன் நகரமாகிய 'பெத்லேம்' நகரத்திற்குக் குடிமதிப்புக் கணக்குப் பதிவுசெய்யப் புறப்பட்டுச் சென்றனர். யூதராகிய சூசையப்பரும் மரியம்மையும் அக்கூட்டத்துடன் தாமும் கூடிப் 'பெத்லேம்' நகரம் நோக்கிப் புறப்பட்டனர். மரியம்மை கருப்பமுற்றவராக இருந்தமையால் மலையும் காடும் நிறைந்த அக்கரடு முரடான பாதையில் நடந்து செல்ல இயலாதெனக்கருதினர். சூசையப்பர் தமது மனைவியை ஒரு கழுதையின்மேல் அமர்த்திக் கொண்டு அக்கழுதையின் தலைக்கயிற்றை ஒருகரத்திலும், மற்றொரு கரத்தில் ஊன்றி நடத்தற்குரிய தடி ஒன்றையும் பிடித்துக்கொண்டு வழிநடந்தார். அவர்

கள் பெத்லேம் நோக்கிப்பயணமான காலம் மழைப் பருவமாக இருந்தமையால் வழிமிகவும் தொல்லை தருவதாக இருந்தது. வழியில்தங்கிச் செல்வதற் குரிய, சத்திரங்களோ வீடுகளோ இல்லை. தேவை யான உணவுப்பொருள்களும் வழியில் கிடைக்காதா கையால் புறப்படுமிடத்திலிருந்து தாமே சுமந்து செல்லவேண்டும். இத்தகைய கடுமையான வழிப் போக்கு செல்வச்செருக்கின்றி எளியவாழ்வு நடத் தும் சூசையப்பருக்கும் மரியம்மைக்கும் எவ்வளவு தொல்லை கொடுத்திருக்குமென்பதை நன்கு அறிய லாம். மலையும், ஆறும், கல்லும், முள்ளும் நிறைந்த வழியில் ஐந்து நாட்கள்பயணம் செய்து, ஆறும் நாள் மாலையில் பெத்லேம் நகரின் அருகேவந்து சேர்ந் தனர். மக்களின் கூட்டம் இரவு நேரம் வருவதற்குள் ஊர்சென்று சேர்ந்துவிடவேண்டுமென்று விரைந்து சென்றது. விரைந்து செல்வோருக்கு வழிதந்து விலகி நிற்கும் இயல்புடைய சூசையப்பர், கருப்பவதி யாகிய தமதுமனைவியின் தளர்ச்சி நோக்கிப் பொறு மையாகக் கழுதையை நடத்திக்கொண்டுவந்தார்.

கிறிஸ்துவின் பிறப்பு

ஒரேகாலத்தில் பெத்லேம் நகருக்கு மிகுதியான மக்கள்வந்து சேரவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட் டதால், ஊரில் மக்கள் தங்குவதற்கும் வசதியில்லாமற் போய்விட்டது. ஒழிந்திருந்த வீடுகளையெல்லாம் செல்வர்கள் மிகுதியான பணத்தைக்கொடுத்து

வாடகைக்கு வாங்கி விட்டனர். பொருளற்ற ஏழை மக்கள் திண்ணைகளிலும், தாழ்வாரங்களிலும், பொது விடங்களிலும் நிறைந்து விட்டனர். இதனுல் ஊரெங்கும் தங்கியமக்கள் அமைதியிழந்து பெருங்கூச்சலும் பேரிரைச்சலுமிட்டு ஓயாது சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இத்தகைய நிலையில் சூசையப்பரும் மரியம்மையும் தங்குவதற்கு இடக்தேடி நகரினுள் நுழைந்தனர் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் ஒருவரும் அவர்கள் தங்குவதற்கு இடங்கொடுக்கவில்லை. எனவே அவர்கள் இரவு தங்குவதற்கு ஊரின் அருகே வரும்போது மலைவழியில்கண்ட ஒருமலைக் குகையை நோக்கித் திரும்பிப் போயினர். அக்குகையில் இடையர்கள் மாடுகளை அடைத்து வைப்பது வழக்கமாதலால் அதுமிகவும் தூய்மையற்றதாகத் தீநாற்றம் வீசிக்கொண்டிருந்தது. எனினும் தங்குவதற்கு வேறு இடமின்மையால் சூசையப்பரும் மரியம்மையும், ஈரமும் சக்தியும் கொண்ட அத்தொழுவத்தில் சிறுவிளக்குடன் தங்கினர். சூசையப்பர் அத்தொழுவத்தின் ஒருபக்கத்தில் விளக்கை மாட்டிவிட்டுத் தாம்கொண்டுவந்திருந்த பாய் ஒன்றை விரித்து அதில் மரியம்மையை இருக்கும்படிச் செய்தார். இவ்வாறு அவர்கள் தங்கியபோது அத்தொழுவத்தில் காளை மாடொன்றும் தங்கியிருந்தது. இரவு உணவிற்குப்பின் மரியம்மை இறைவனைத்தொழுது செபித்தாள். அன்று நள்ளிரவில் உலகம்புகழும் பெருமகனுகிய கிறிஸ்து பெருமான் மரியம்மையின்

மகனைக அத்தொழுவத்தில் பிறந்தார். மரியம்மை தேவதூதனல் தனக்குப் பிறக்கும் மகனே தேவ குமாரன் என்பதை அறிந்திருந்தாளாதலால் உடனே தனது மகவுக்குத் தலைகுனிந்து தேவமாதா வணக்கம் செலுத்தினள்.

4. இளம்பருவம்

யாத்திரீகர்கள்

குழந்தை பிறந்த நாற்பதாவது நாள் மகவைக் கோவிலுக்கு எடுத்துச்சென்று யூதர்குலவழக்கப் படிப் பலசடங்குகள் செய்தனர். யூதகுடும்பங்களில் பிறக்கும் முதற்பிள்ளையை இறைவனுக்கு அர்ப் பணிப்பது என்றதொரு வழக்கம் உண்டு. அவ்வழக் கப்படி, இயேசுகிறிஸ்துவையும் பெற்றோர்கள் இறை வனுக்கு அர்ப்பணித்தனர். அதுபோது குழவியைக் குருவானவர் வானில் உயர்த்திப்பிடிப்பார். பெற் ரோர் அதற்காக ஐந்து வெள்ளி நாணயங்களைக் கொடுத்து மகவைப்பெற வேண்டுமென்பது முறை. அம்முறைப்படிப் பெற்றோரும் ஐந்து வெள்ளி நாண யங்களைக் கொடுத்துத் தம் மகவைப்பெற்று வீடு திரும்பினர்.

இயேசுகிறிஸ்து பிறந்த சில நாளில் கீழ்த்திசை யிலிருந்து மூன்று பெரியோர்கள் இயேசுவைக்காண செருசலேம் நோக்கிவந்தனர். அவர்கள் தாம் ஒரு நாள் இரவு வானத்தை நோக்கி ஆராய்ந்து கொண்

டிருந்ததாகவும், அதுபோது உலகில் சான்றோர்கள் தோன்றியதற்கு அறிகுறியான தாரகை ஒன்று கிழக்கில் தோன்றியதாகவும், அத்தாரகையின் குறிப்பைப்பின்பற்றிச் செருசலேம் வந்ததாகவும், கூறினர். காவலர்கள் அவர்களை அந்நாட்டு மன்னனாகிய எரோதன்பால் அழைத்துச் சென்றனர். எரோதன் அவ்வியாத்திரீகர்களைக்கண்டு விசாரித்த போது அவர்கள் தாம்பார்ப்பதற்கு வந்த குழந்தை எதிர்காலத்தில் பெருமைவாய்ந்து விளங்குவதோடு யூதர்களின் அரசனாகவும் விளங்கும் எனக்கூறினர். அதுகேட்ட எரோதன் குழந்தையின்பால் பொறாமைகொண்டான். அக்குழவி உயிருடன் இருந்தால் தன் அரசுக்குத்தீமை வருமோஎன்று கருதினன். ஆகலின் அக்குழந்தையைத்தேடி எவ்வாறாவது கண்டுபிடித்து விரைவில் கொன்றுவிடுவது என்றும் முடிவுசெய்தான். அத்துடன்தான் குழந்தையைத்தேட முற்பட்டால் உரியவர் எங்காவது ஒளித்துவிடவும் கூடும்; ஆகலின் இவ்வியாத்திரீகர்களைக் கொண்டே கண்டுபிடிப்பதுதான் சிறந்தது என்றும் கருதினன்.

யாத்திரீகர்களிடத்தில் தன்கருத்தைக் கூறினல் அவர்கள் தன்னை இகழ்வாக மதிப்பார்கள் என்று எண்ணினன். எரோதன் வஞ்சனையாக யாத்திரீகர்களே! யானும் அக் குழந்தையைக் கண்டுமகிழ விரும்புகிறேன். நீங்கள் குழந்தையைப் பார்த்த

வுடன் திரும்பவும் என்னிடம் வந்து குழந்தை இருக்குமிடத்தைக் கூறிச்செல்லுங்கள் என்று வேண்டிக் கொண்டான்.

மாட்டுத்தொழுவம்

அரசன் கருத்தை ஏற்றுக்கொண்ட யாத்திரீகர்கள் மேலும் குழந்தை இருக்குமிடத்தைத் தேடினர். மீண்டும் ஒருநாள் தாரகை அவர்கள் கண்ணில் தென்பட்டது. அவர்கள் அத்தாரகையின் குறிப்பைப் பின்பற்றிச்சென்றனர். அத்தாரகை அவர்களை அழைத்துக்கொண்டுவந்து இயேசுபிறந்துள்ள மாட்டுத் தொழுவத்திற்கு நேராக நிறுத்திற்று. அவர்கள் முதலில் உலக இரட்சகர் மாட்டுத்தொழுவத்திலா? பிறப்பார் என்று ஐயுற்றனர். எனினும் தாரகையின் குறிப்பின்படி தொழுவத்திற்குள்ளே சென்றனர். அம்மூவரும் உள்ளே சென்று இயேசுவை அவரதுதாயாகிய மரியம்மையோடு சேர்த்து வணங்கி நின்றனர். தேடிவந்த குழந்தையைக் கண்டு மகிழ்ந்த அம்மூவரும் தாம் கொண்டுவந்திருந்த காணிக்கைப் பொருள்களைப் படைத்து பெற்றோர்களிடம் விடைபெற்றுச் சென்றனர். அவர்கள் எரோதன் வாழும் செருசலேம் சென்றுதங்கிப்பின் தம் நாடாகிய பாலஸ்தீனம் செல்லக் கருதினர். மன்னன் எரோதனும் யாத்திரீகரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். கடவுளின் கட்டளை

யால் யாத்திரீகர்கள் மூவரும் செருசலேம் வராமல் தம் நாடு திரும்பினர்.

இங்ஙனமிருக்கையில் ஒருநாள் சூசையப்பர் கனவில் தேவதூதன் தோன்றி, "உடனே குழந்தையையும், மரியம்மையையும் அழைத்துக்கொண்டு எகிப்து தேசத்திற்குச் சென்றுவிடும். நாம் மீண்டும் கூறுமளவும் நீர் அங்கேயே இரும்" என்று கூறி மறைந்தான். உடனே விழித்தெழுந்த சூசையப்பர் தேவதூதன் கட்டளையை மரியம்மைக்கும் கூறி எகிப்து தேசத்துக்குப் புறப்பட்டுச்சென்று தங்கினர்.

ஏரோதன் யாத்திரீகர்களின் வரவை எதிர்பார்த்து ஏமாந்தான். யூதர்களுக்கு அரசனாகும் குழந்தை பெத்லேம் நகரத்திலும் அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளிலும்தான் பிறக்கும் என்பதை வேதபாரகர் மூலம் மன்னன் அறிந்திருந்தான். ஆதலால் தன் போர் வீரர்களை அனுப்பிப் பெத்லேம் ஊரிலும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள இரண்டு வயதிற்கு மேற்படாத குழந்தைகளையெல்லாம் பிடித்துக் கொண்டுவந்து கொல்லும்படிக் கட்டளை யிட்டான். இக்கொடுங்கோலன் கட்டளையால் நிரபராதிகளான பச்சிளங் குழந்தைகள் பலர் மடிந்தனர். பல தாய்மார்களின் கண்ணீரும், அழுகைக் குரலும் பெருகிற்று. கொடுங்கோலனாகிய ஏரோதன் சிலகாலம் சென்றபின் இறந்தான். அதன் பின் ஒருநாள் சூசையப்பர் கனவில் தேவதூதன்

தோன்றி உரைத்த கட்டளைக்கிணங்க சூசையப்பர் மீண்டும் மனைவியோடும் மகனோடும் நாசரேத்தூரை யடைந்து அச்சமின்றி வாழ்ந்துவந்தார்.

பாஸ்காப் பண்டிகை

இயேசு கிறிஸ்துவின் இளம்பருவ வாழ்க்கையைப்பற்றிச் சரிவர அறிந்துகொள்ள முடியவில்லை. அக்காலத்தில் பன்னிரண்டு வயது நிறைந்த யூதச் சிறுவர்களை செருசலேமிலுள்ள தேவாலயத்தில் நடக்கும் பண்டிகைக்கு அழைத்துச்செல்வது வழக்கம். இயேசுவுக்கு ஆண்டுகள் பன்னிரண்டு நிறைந்தன. அக்கால முறைப்படி இயேசு கிறிஸ்துவின் பெற்றோர்களும் தம் மகனை எருசலேம் ஆலயத்தில் நடந்த பாஸ்காப் பண்டிகைக்கு அழைத்துச் சென்றனர். அப்பண்டிகையின்போது நாட்டுப்புறங்களிலிருந்து ஏராளமான மக்கள் வருவார்களாதலின் அவர்களுக்கெல்லாம் சிறந்த போதனைகள் கூறவும் பிறவற்றிற்குமாகத் தெய்வ நூல்வல்ல புலவர்கள் வந்திருந்து சொற்பொழிவாற்றுவார்கள். பண்டிகைக்கு வந்து சேர்ந்த மரியம்மையும், சூசையப்பரும், கிறிஸ்துவும் இராப்போசனம் முடித்துக்கொண்டு உறங்கத்தொடங்கினர். வழிநடந்த களைப்பால் பெற்றோர்கள் நன்கு உறங்கினர். ஆங்காங்கு அறிவுச் சொற்பொழிவுகள் நடப்பதை அறிந்த கிறிஸ்துவுக்கோ உறக்கம் வரவில்லை. பண்டிகையின் காரணமாக அங்கு ஏராளமான வேடிக்கைகள் நடைபெற்

றன. கிறிஸ்து அவைகளொன்றினும் மனம் செலுத்தாமல் அறிவுப் போதகங்களைக் கேட்பதையே விரும்பினர். எழுந்துசென்று சொற்பொழிவு கேட்கலாயினர். பண்டிகை மிகவும் சிறப்பாக நடந்தது. நாட்கள் மூன்று கழிந்தன. பாஸ்காப் பண்டிகை காலங்களில் செருசலேம் வரும் ஆண்களும் பெண்களும் தனித்தனி கூட்டமாக தங்குவது அக்கால வழக்கமாக இருந்தது. தாயோடு மகன் இருப்பானெனத் தந்தையும், தந்தையோடு பிள்ளை இருப்பான் எனத் தாயும் கருதினர். ஆகலின் ஒருவரும் கிறிஸ்துவைத் தேடவில்லை. அறிவுப் பசிமிக்க கிறிஸ்துவோ ஊண் உறக்கமின்றி அறிஞர்கள் கூறும் நல்லுரைகளைக் கேட்டுக்கொண்டேயிருந்தார்.

அவையத்து முந்தியிருத்தல்

பண்டிகை முடிந்ததும் கலிலேயா நாட்டுப் பக்கங்களிலிருந்து வந்தவர்கள் யாவரும் கூட்டமாக ஊருக்குத் திரும்பினர். அவர்களுடன் சூசையப்பரும் மரியம்மையும் நாசரேத்துக்குப் பயணமாகிப் போய்க்கொண்டிருந்தனர். ஒருநாள் பகல் முழுவதும் வழி நடந்தனர். இரவு வேளை வந்ததும் தம் மகனைத் தேட முற்பட்டனர். இயேசுவைக் காணவில்லை. பலவிடங்களிலும் தேடிப்பார்த்தனர் கிடைக்கவில்லை. முடிவில் ஒருவேளை இயேசு கோவிலில் இருக்கலாம் என்றுமரியம்மை கூறினர். உடனே

சூசையப்பரும் மரியம்மையும் மீண்டும் எருசலேம் கோவிலுக்குத் திரும்பிவந்து தேடினர். அங்குதம் மகனான இயேசுநாதர் அவையகத்து முந்தியிருந்து தெய்வநூல்வல்ல பேரறிஞர்களுடன் வாதிட்டு உரை விளக்கம் செய்து கொண்டிருந்தார். அதைக்கண்டு பெற்றோர் பெருமகிழ்ச்சி அடைந்தனர். எளியவ ராகிய தம்மோடு கூடிவாழும் தம்மகன், அறிஞர்க்கு அறிஞராகிய தெய்வ நூற்புலவர்களுடன் வாதிட்டு அவர்களுக்கு விளக்கம் கூறும் அளவு அறிவுடைய வனாயிருப்பது கண்டு வியந்தனர். மரியம்மையார், மகனே! ஏன் இவ்வாறு செய்தாய்? நாங்கள் உன்னை எங்கெங்கு தேடினோம்?, என்று வினவி னார். அதன்பின் மூவரும் கலிலேய நாட்டிலுள்ள தமது இல்லத்திற்குத் திரும்பிச்சென்று சேர்ந்தனர்.

பணிவுள்ள நன்மகன்

பேரறிஞர்களுடன் வாதிட்டு உரையாடும் அள வுக்கு அறிவுபடைத்த தம்மகன் இனி எளியதொழி லாகிய தச்சு வேலை செய்யும்போது தம்முடன் ஒத்து ஊழியம் செய்வானா? என்று பெற்றோர்கள் ஐயுற் றனர். ஆனால் இயேசுகிறிஸ்துவோ மிகப்பணிவும் அடக்கமும் பொருந்தப் பெற்றோர்களின் கருத்த றிந்து தந்தைக்குத் தச்சுத்தொழிலும், அவற்றிற் குக் கூலி பெறுவதிலும், தாயார்க்குத் தண்ணீர் கொண்டுவருதல், உணவுசமைத்தல், முதலிய குற் றேவல் வகைகளிலும், உதவிசெய்து வந்தார்.

கிறிஸ்து பிள்ளைப்பருவம் கடந்து நல்ல இளைஞராக வளர்ந்தபின்னும் சிறுபிள்ளையைப்போலவே தம் தாயாருக்குத் தொண்டு புரிந்து வந்தார். தந்தையாராகிய சூசையப்பருக்குக் கிழப்பருவம் வந்து உடல் தளர்ந்துவிட்டது. அதுகண்ட இயேசு தம்தந்தையை ஓய்வாக இருக்கும்படிச்செய்து பொருள் தேடிக் குடும்பத்தைக் காப்பாற்றினார். எப்பொழுதும்போலத் தாயாருக்கும் உதவிகள் செய்து வந்தார். வேலையெல்லாம் முடித்தபின் இரவு நேரங்களில் நண்பர்களுக்கும் அறிவறியாத நாட்டுப்புற மக்களுக்கும் பற்பல நீதிக்கதைகளை எடுத்துக் கூறுவார். இங்ஙனம் வாழ்ந்து வரும் காலத்து முதுமையின் காரணமாக இயேசுவின் தந்தையாகிய சூசையப்பர் உயிர்துறந்தார். அதனால் இயேசுதாமே தச்சுத்தொழில் செய்து பொருள்தேடித் தமக்கும் தாயாருக்கும் உணவுதேடினார். அதுகண்ட மக்கள் இயேசு ஒரு நன்மகன், எத்துணை அடக்கம்! எத்துணை அறிவு! தொழிலில் எத்துணை அக்கரையாகப் பணிபுரிகின்றார்! தாயாரிடம் எத்துணைப் பணிவாக நடந்துகொள்ளுகிறார்! இவரே நன்மகன்! இவரைப் போல ஊரிலுள்ள பிள்ளைகள் யாவரும் நடந்து கொண்டால் மண்ணுலகம் பொன்னுலகமாக மாறிவிடுமே! என்று போற்றிப் புகழ்ந்தனர். சிலர் தம் மக்களுக்கு அறிவுகூற முற்படும்போது இயேசுவின் செயல்களைக்காட்டி நீ இயேசுவைப்போல நடந்து கொள் அவையே மனிதருக்கடுத்த நல்ல ஒழுங்கு முறைகளாகும் என்று கூறினர்

தொண்டர்

இயேசு உலகமக்களின் வாழ்க்கைகளை நன்கு கவனித்தார். பலர் வறுமையால் வாடுவதையும், சிலர் செல்வச்செருக்கோடு திரிவதையும், தாம் அறிவறிந்தும் அதன்படி நடவாது பிறருக்குப் போதிக்கும் அறிஞர்களையும், முரடர்களையும், வேடதாரிகளான பக்திமான்களையும், கடவுட் பற்றற்றவர்களையும் மூடர்களையும் கண்டார். அவர்களனைவரையும் திருத்தி நல்லவராக்க வேண்டுமென விரும்பினர். இயேசு தாம் உலகமக்களுக்குப் போதகம் செய்யப்போக வேண்டுமென்பதைத் தாயாரிடம் கூறினர். மரியம்மையாரும் தனது மகனாகிய இயேசு கிறிஸ்துவின் ஆர்வத்தையும் உளக்கருத்தையும் நன்குணர்ந்தவராதலின் தடுத்து நிறுத்துதல் தகாது என்றுகருதினர். இயேசுவின் பிரிவிற்கு மரியம்மையார் மிகுதியாக வருந்தினர் எனினும், இறுதியாக அவருக்கு விடையளித்து வழியனுப்பினர். தன்னலம் மறுத்து உலக நலத்திற்காகத்-தம்மகனை நீதிபோதகத்திற்காக-அனுப்பிய பெருமை மரியம்மைக்கு உரியதாயிற்று. இங்ஙனம் இயேசுகிறிஸ்து குடும்பத்தை விட்டு உலக போதகத்திற்குப் புறப்படும்போது அவருக்கு வயது முப்பதாகியிருந்தது. அவரது இப்பகுதி வாழ்க்கையை மறைந்த வாழ்க்கை என்று கூறுவார்கள்.

5. பாலஸ்தீனம்

இயற்கையமைப்பு

இயேசுவைப்பற்றி நாம்நன்கு அறியத்தொடங்கு முன் அவர்வாழ்ந்து வந்த பாலஸ்தீன நாட்டின் அக்கால நிலைமையையும் ஓரளவு உணர்வது இன்றியமையாததாகும். பாலஸ்தீனம் மலைகள் நிறைந்த நாடு. அந்நாட்டின் நடுவே வளம்மிக்க யோர்தான் நதி வடக்கிலிருந்து தென்முகமாக ஓடிச்சவக்கடலில் கலக்கிறது. நதியின் மேற்குப்பகுதியில் வடக்கே கலிலேயாவும், இடையில் சமாரியாவும், தெற்கே யூதேயாவும், நதியின் கிழக்குப்பகுதியில் இத்தாலியா, திரோக்கோனித், பெரேயா என்ற ஆறு மாவட்டங்களாக நாடு பகுக்கப்பட்டிருந்தது.

ஆட்சிநிலை

எரோதனது ஆட்சிக்குப் பின்னர் அவனது மக்களாகிய ஆர்க்கிலாஸ், அந்திப்பாஸ், பிலிப்பு, என்ற மூவரும் நாட்டை மூன்று பங்காகச்செய்து ஆண்டுவந்தனர். அவர்களுள் ஆர்க்கிலாஸ் என்பவன் யூதேயா, சமாரியா என்ற இரண்டு மாவட்டங்களையும் பத்து ஆண்டுகள் ஆண்டு வந்தான். அதன் பின் அக்காலத்து உரோமப்பேரரசனாக இருந்ததை பீசயஸ்கெரிசார் என்பவன் ஆர்க்கிலாசைத் துரத்திவிட்டு அவனது நாட்டைத்தன் நாட்டோடு இணைத்துக்கொண்டு அந்நாட்டுக்கு ‘போஞ்சுபிலாத்து’

என்றதொரு புதுத்தலைவனையும் நியமித்தான். அந்திப்பாஸ் என்பவன் கலிலேயா, பெரேயா என்னும் மாவட்டங்களை ஆண்டுவந்தான். அம்மன்னனது காலத்தில்தான் இயேசுகிறிஸ்து வெளிப்படையாக நின்று பொதுமக்களுக்குப் போதனைகள் செய்யத் தொடங்கினர்.

ஆதியில் பாலஸ்தீன நாட்டை யூதர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். அதன்பின் அசீரியர் என்பவர் யூதர்களை அடக்கிச் சிறைப்படுத்தினர். அதன்பின்னும்கூட நூறு ஆண்டுகள் வரை யூதர்களே அரசர்களாக இருந்து வந்தனர். ஒருசமயம் இருயூத சகோதரர்கள் அரச பட்டத்திற்காகப் போட்டியிட்டனர். அதன்காரணமாகப் பாலஸ்தீனம் உரோமையர்களது ஆட்சிக்குக் கீழ்ப்படிய நேரிட்டது. உரோமையர்கள் யூதர்களைத் தமக்குக்கப்பம் கட்டவேண்டுமென்று வற்புறுத்தியதோடு அம்மாகாணத்திற்கு யூதசாதியானல்லாத வேறுசாதியானகிய எரோதன் என்பவனை அரசனகவும் நியமித்தனர்.

மக்கள் நிலை

யூதர்கள் அந்நிய ஆட்சியை வெறுத்தனர். எரோதனுக்காக நாட்டில் வரிவசூலிக்கும் யூத அதிகாரிகளையும்கூட மக்கள் வெறுத்துப் பழித்தனர். யூதர்கள் எரோதனையும் உரோமையர்களையும் எதிர்த்துக் கலகஞ்செய்ய எப்போதும் தயாராக

இருந்தனர். அக்காலத்தில் 'மெசையா' என்னும் 'உலக இரட்சகர் அவதரிப்பார்' என்றும் அவரால் உரோமையர்களின் அடக்குமுறை ஆட்சி நீங்கி யூத மன்னர்களது உரிமை ஆட்சி வரும் என்றும் பேசப் பட்டுவந்தது. ஆதலின் யூதசாதியார் எப்போது மெசையா அவதாரம் செய்வார்? தமது அடிமைத் தளை நீங்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த னர். அப்போது நான்தான் மெசையா! நான் கூறுவதைப்பின் பற்றுங்கள்! என்று யாராவது பொய்யாகக் கூறினுல்கூட அவர்கள் ஆராயாமல் பின்பற்றத் தயாராக இருந்தார்கள். இங்ஙனம் அக்கால ஆட்சி மிகச்சீர்கேடுற்றிருந்தது. நாட்டுக் குடி மக்களும் செம்மையான வாழ்க்கை நடத்திய தாகக் காணப்படவில்லை

அக்கால மக்களுள் குறிப்பிடத்தக்கவர்களாகிய பரிசேயரென்பார், வெளிக்குப்பகட்டான வாழ்வும் அகத்தே வெறுக்கத்தக்க ஒழுக்கமும் உடையராக வாழ்ந்து வந்தனர். அவர்கள் ஏழைகளையும் பாமரர் களையும் சபிக்கப்பட்டவர்கள் எனக்கூறி இகழ்ந் தனர். ஓய்வு நாட்களில் ஒன்றும் செய்யலாகாது; கைதட்டுவது முடிச்சுப்போடுவது போன்ற சிறு செயல் செய்வதும் பெருங்குற்றமாகும் என்று கூறினர். விரதம் இருக்கும்போது வாடிய முகத் துடன் தம் வருத்தத்தைப் பிறரறியக் காட்டிப் பக்தி செய்வதே மேலான முறை என்பது அவரது கொள்

கைகள். அக்கால மக்கள் பரிசேயரை விளிக்கும் போது 'எஜமான்' என்ற பொருளைத்தரும் 'ரபீ' என்ற சொல்லாலேயே அழைக்கப்பட்டனர். அத ஞல் அக்கால மக்களிடத்து பரிசேயருக்கு நல்ல செல் வாக்கு இருந்ததென்பது வெளிப்படை. பொதுவாக பரிசேயர்கள் பாமரர்களை நன்கு வசப்படுத்தும் வெளிவேடக்காரர்களாவார்கள். சதுசேயரென்பார் உலக வாழ்வுதான் உண்மையானது; கண்ணில் கண் டதுதான் மெய்; மோட்சம் நரகம் என்பதெல்லாம் உண்மையற்றன; உலக இன்பமே உண்மையா னவை; என்று கூறி டாம்பீக வாழ்வு நடத்தினர். மற்ருரு சாதியாராகிய எரோதியர் உயர்ந்த பதவி களில் உள்ள மக்களுக்கு இச்சகம் பேசி காலத்திற் குத்தக்கவாறு கருத்தை மாற்றிக்கொள்ளும் போலி வாழ்க்கையினர். இவர்களும் உழைக்காமல் பொருள் தேடி இன்ப வாழ்வு நடத்தினர். இயேசுநாதர் வெளிப்பட்டுப் போதகம் செய்யும்காலத்து இத்த கைய மக்கள்தான் நாட்டின் முதன்மையான குடிக ளாக வாழ்ந்துவந்தனர்.

6. முழுக்குமுனிவர்

யோர்தான் நதிக்கரை

பாலஸ்தீன நாடு இத்தகைய சூழ்நிலையில் இருந்தபோது முழுக்கு முனிவராகிய அருளப்பர் என்ற சாது ஒருவர் யூதேயா நாட்டிலுள்ள மலைகளி

லும், வனாந்தரங்களிலும் திரிந்துவந்தார். அவர் ஒட்டகத்தின் மயிரால் செய்யப்பட்டதொரு சட்டையை அணிந்து விகாரத் தோற்றமுடையவராய்க் காணப்பட்டார். காட்டில் கிடைத்த தேன் முதலிய உணவுகளை உண்டு வாழ்ந்துவந்தார். அவர் ஒருசமயம் யோர்தான் நதிக்கரை யருகே வந்து மக்களை நோக்கிப் போதகம் செய்யத் தொடங்கினர். அவரது போதகத்தை மிகுதியான மக்கள் கூடிக் கேட்டுவந்தனர். அவர் அவர்களை நோக்கி 'மரங்களின் வேரருகே கோடாரி வைக்கப்பட்டிருக்கிறது. கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டப்பட்டு தீயினல் கொளுத்தப்படும்' என்று கூறினர். இதன் பொருள் தீயவாழ்க்கை நடத்துவோர் உடனே இறைவனல் தண்டனை பெறுவார் என்பது. அது கேட்டு மக்கள் 'நாங்கள் என்ன செய்யவேண்டும்' என்று கேட்டார்கள். அதற்கு அருளப்பர் 'இரண்டு சட்டைகளை யுடையவன் இல்லாதவனுக்குக் கொடுப்பானக; ஆகாரத்தை வைத்திருப்பவனும் அவ்வாறே செய்க' என்று கூறினர்.

அருளப்பர் இத்தகைய பற்பல நீதிகளையும், நல்வழிகளையும் மக்களுக்குக் கற்பித்துவந்ததோடு இனி நன்மகனுக – உண்மையான நடத்தையுடையவனுக – நடந்துகொள்வேன் என்று உறுதியளிக்கும் சடங்காகிய ஞானமுழுக்கு (ஞானஸ்நானம்) மக்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தார்.

அருளப்பர்

இங்ஙனம் மக்களுக்கு அருளுரையை வழங்கிய அருளப்பர், மரியம்மைக்கு உறவின்முறை யுடையவரும், அவரது விருப்பத்திற்குரியவருமான எலிசபெத் அம்மையின் புதல்வராவார். எலிசபெத் அம்மையும் சக்கிரியாஸ் என்ற அவரது கணவரும் இறைவனை நோக்கி 'ஆண்டவரே உலக இரட்சகராகத் தோன்றும்' பெரியார் எமக்கு மகவாகத் தோன்ற வேண்டும் என்று வரமிருந்தனர். ஆனால் ஒருநாள் ஒரு தேவதூதன் சக்கிரியாசின் முன்தோன்றி உமக்கு ஓர் மகன் பிறப்பான்; அவன், இரட்சகர் உலகில் தோன்றுவதற்குமுன் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு உரியவனாவான்; என்று கூறினான். சக்கிரியாஸ் அவைகளை நம்பவில்லை. உடனே தேவதூதன் 'யான் கூறிய செய்தி உண்மை என்பதை நீர் நம்பவில்லை இன்றிலிருந்து நீர் ஊமையாயிருப்பீர்' என்று கூறி மறைந்தான். சக்கிரியாஸ் உடனே ஊமையானார். தேவதூதன் கூறியதை உண்மையென நம்பினார். சிலநாளில் அவருக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அவர்தான் தற்பொழுது யோர்தான் நதிக்கரையருகே அனைவருக்கும் ஞானமுழுக்குக் கொடுக்கும் அருளப்பர் ஆவார். அருளப்பர் இளமையிலேயே சிறந்த அறிவுடையவராக வளர்ந்தார். பிள்ளைப்பருவம் கடந்து இளைஞரான உடனே தாய் தந்தையைப் பிரிந்து காட்டுக்குச்சென்று வாழ்ந்து

வந்தார். மக்களே சென்றறியாக் கடுங்கானில் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளைக் கழித்தார். கடவுளை நோக்கித் தவம்செய்தார். ஏறத்தாழ கிறிஸ்துபிறந்த ஆண்டில்தான் இவரும் பிறந்திருக்கவேண்டும்.

அருளப்பர், மக்களிடையில் உலகில் இரட்சகர் விரைவில் தோன்றுவார். ஆகையால் நீங்கள் சன்மார்க்கராக - அறமுடையவராக - வாழுங்கள் என்று எல்லோர்க்கும் போதித்து வந்தார். இங்ஙனம் அருளப்பர் மக்களுக்குப் போதனை செய்யும் செய்தி பாலஸ்தீன நாடுமுழுவதும் பரவிவிட்டது. எங்கும் இரட்சகர் விரைவில் தோன்றப்போகிறாரென்று அருளப்பர் கூறும் போதகங்கள் பேசப்பட்டன. ஆதலால் பெருந்திரளான மக்கள் அருளப்பரைக் காணவே யோர்தான் நதிக்கரைக்குச் சென்றவண்ணமிருந்தனர். மக்கள் அருளப்புரையே இரட்சகர் என்று கருதினர். ஆனால் அருளப்பரோ, இரட்சகர் நான் அல்லேன், அவர் வருவதற்குப் பாதை செப்பனிடுபவன் என்று தன்னைக்கூறிக்கொண்டார். அருளப்பர்பல அருளுரை வழங்கிக்கொண்டே யோர்தான் நதிக்கரையில் வடக்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். வரவரக்கூட்டம் மிகவும் பெருகுவதாயிற்று.

ஞானமுழுக்கு

ஒருநாள் அருளப்பர் நாசரேத்தூருக்கு இருபது கல் தொலைவிலுள்ள பெத்தாபரோ என்னுமிடத்தில்

சொற்பொழிவு செய்ததோடு மக்களுக்கு ஞான முழுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். அது போது இயேசு அங்குவந்து சேர்ந்தார். பொது மக்களோடு தாமும் ஒருவராய் நின்று அருளப்பரிடம் இயேசு ஞானமுழுக்குப்பெற்றார். அருளப்பர் இயேசுவை நோக்கி தாங்கள்கூட என்னிடம் ஞான முழுக்குப்பெற வேண்டுமா! என்றபோது 'ஆம் எல்லாம் முறைப்படி நடக்கட்டும்; தடை செய்யாதீர்' என்று கூறினர். அருளப்பர் பலவகையிலும் இயேசுதான் 'மெசையா' என்று கண்டு கொண்டார். உடனே தமது சொற்பொழிவில் நாம் நெடு நாளாகத் தேடிக்கொண்டிருந்த மெசையா இன்று நம்மில் ஒருவராக இருக்கிறார் என்று கூறினர்.

நதிக்கரையில் அருளப்பரது சொற்பொழிவை மக்கள் கேட்டுக்கொண்டிருந்த அதே சமயத்தில் இயேசு கல்லும் முள்ளும் நிறைந்த கடும்வனத்துள் சென்று மறைந்து விட்டார்.

சோதனை

அங்கு நாற்பது நாட்கள் சோறு நீரின்றி கடவுள் சிந்தனையோடு தவமிருந்தார். உலகின் துன்பங்களைப்போக்கும் முறைகளைப்பற்றிச் சிந்தித்தார். முதலில் அவரது மனத்தில் பல குழப்பங்களும் சோதனைகளும் தோன்றி வருத்தின. அவர் அத்தகைய சோதனைகளுக் கெல்லாம் தளர்ச்சியுறாது

உறுதியாக நின்று தேர்ந்தார். தாம் உலகினருக்கு எத்தகைய உறுதி மொழிகள் கூற வேண்டுமென் பதை உறுதி செய்து கொண்டார். மனக்குழப்பங் களிலும் மற்றவைகளிலும் உறுதியாக நின்று வெல் வதற்கு இயேசுவின்பால் இருந்த கடவுள் நம் பிக்கையே அவருக்கு உதவியாக இருந்தது. இங் ஙனம் இயேசு நாற்பது நாட்கள் வனாந்தரங்களில் தனித்திருந்து பல உண்மைகளைக் கண்டறிந்தார். பின் மீண்டும் முழுக்குமுனிவர் மக்களுக்கும் தனக் கும் ஞானமுழுக்குக் கொடுத்த அதே இடத்திற்கு வந்தார். அதைக்கண்ட முழுக்குமுனிவர் தம் சொற் பொழிவைக்கேட்டுக் கொண்டிருந்த மக்களை நோக்கி, அதோசெல்கிறவர் உங்களால் தேடப்பட்டவர்; அவரே உண்மையான தேவசுதன் என்று கூறினர். முழுக்கு முனிவர் இயேசுவை உண்மையாக அறிந்து கொண்டாராகையால் மக்களை அவரிடம் திருப்பி விடுவதற்கு விரும்பினர். அக்காலத்துப் பரிசேயர் களில் சிலர் அருளப்பரை 'மெசையாவா' என்று அறிந்து வரச் சில ஆட்களை அனுப்பியிருந்தனர். அதற்கு அருளப்பர் நான் மெசையா அல்லேன் என்று கூறினர். அவர் தனது இருசீடர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது அவ்வழியே இயேசு போய்க்கொண்டிருந்தார்.

7. முதல் சீடர்கள்

வந்துபாருங்கள்

உடனே முழுக்குமுனிவர் தன்னருகிலிருந்த இளைஞனது கையை இறுகப் பிடித்துக்கொண்டு அதோபார் தேவனது ஆட்டுக்குட்டி! என்று கூறினார். இதன் பொருள் ஆட்டுக்குட்டி தன் அழகாலும் பண்பாலும் எல்லோராலும் விரும்பப்படும் பொருளாக இருப்பது போல; இயேசு, தேவனாலும் விரும்பத்தக்க இயல்புடையவர் என்பதாகும். உடனே அவரருகேயிருந்த இரண்டு சீடர்களும் இயேசுவைப் பின்பற்றிச் சென்றனர்.

அவர்கள் இயேசுவை மிகவும் நெருங்கிச்சென்ற போது இயேசு அவர்களைத் திரும்பிப்பார்த்து என்ன தேடுகிறீர்கள், என்று கேட்டார். அதற்கு அவர்கள் 'குருவே தாங்கள் எங்கே வாழ்கிறீர்கள்' என்று அன்போடு கேட்டார்கள். அதற்கு இயேசு வந்து பாருங்கள் என்று கூறி முன்னே நடந்தார். உடன்வந்த இருவரும் தாம் பெரும் பேறு பெற்றதாகக் கருதினர். இயேசு தம்மைத் தமது இருப்பிடத்திற்கு, வர அனுமதித்துவிட்டார் என்பதை உறுதியாக நம்பினார்கள். இயேசு சிறிதுதூரம் நடந்து சென்று ஆற்றின் கரையோரத்தில் அமைந்திருந்த தம்குடிசைக்கு அவர்களை அழைத்துச் சென்றார். அன்று பிற்பகல் நான்கு மணியிருக்கும். அச்

சீடர்கள் அன்று பிற்பகலும் இரவும் அவரோடு கூட அச்சிறு குடிசையிலேயே தங்கிப் பல செய்திகளைக் கேட்டறிந்தனர். இவ்விருவரில் ஒருவர் அருளப்பரும், மற்றொருவர் பிலவேந்திரர் என்பவருமாவார். (ஞானமுழுக்குக் கொடுக்கும் அருளப்பர் வேறு; இயேசுவின் சீடராகிய அருளப்பர் வேறு) முதல் சீடர்களாகிய இவ்விருவரும் இயேசுவின்பால் பல ஐயங்களைக் கேட்டுணர்ந்தனர். அவர்கள் இறுதியாக உலகிற்கு வரவிருந்த 'மெசையா' (தேவ குமாரன்) இயேசுவே என உறுதியாக நம்பினார்கள். அவர்கள் இவ்வுண்மையை வேறு பலருக்கும் சென்று கூறுவதற்காகப் போனார்கள்

மெசையாவைக்கண்டோம்

பிலவேந்திரர் சீமோன் என்ற தனது முதல் சகோதரனைக்கண்டதும் 'மெசையாவைக் கண்டோம்' என்று கூவினார். சீமோன் பிலவேந்திரரைப் பல எதிர்க்கேள்விகளெல்லாம் கேட்டார். பிலவேந்திரர் அவற்றிற்கெல்லாம் விடையளித்தார். இறுதியாகப் பிலவேந்திரர் சீமோனை நோக்கி வீணே கேட்டுக்கொண்டிருக்க வேண்டாம். நீர் நேரில் கண்டால் உமது ஐயங்கள் எல்லாம் நீங்கிவிடும் வாரும்; என்று அவரை இயேசு இருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார்.

இயேசு புதிதாய் வந்தவரை நோக்கி 'நீ யோனாவின் மகன் சீமோன் அல்லவா? இன்று முதல்

உனக்குக் கெபாஸ் என்ற பெயர் வழங்கட்டும்' என்ருர். கெபாஸ் என்பதற்கு இராயப்பன் என்று பொருள். இயேசு, புழுவின் மகன் என்ற பொருளுள்ள சீமோன் என்ற பெயரைமாற்றிக் கற்பாறை எனப்பொருள்படும் இராயப்பன் என்ற பெயரை வழங்கினர். அருளப்பர், பிலவேந்திரர், இராயப்பர் முதலிய மூவரும் கலிலேயா நாட்டினர். முழுக்கு முனிவர் கூறும் சொற்பொழிவுகளைக் கேட்பதற்காகத் தங்கள் மனைவி மக்களை விட்டு வந்து சேர்ந்தவர்கள். எதிர்பாரா வகையில் அவர்கள் இயேசுவுக்குச் சீடர்களானர்கள். அவர்கள் மூவரும் மீன் பிடிக்கும் தொழில் செய்யும் செம்படவக்குடியினைச் சேர்ந்தவர்களாவார்கள்.

நாசரேத்தூர் இயேசு

மூன்று நாட்களுக்குப்பின் அடுத்த புதன் கிழமை அருகேயுள்ள கானவூரில் திருமணம் ஒன்று நடைபெற்றது. அத்திருமணம் இயேசுவின் உறவினர்களில் ஒருவருடையதாகும். மணவீட்டார் மரியம்மையையும் அவரது மகனராகிய இயேசுவையும் திருமணத்திற்கு வரும்படி மிகவும் வேண்டிக் கொண்டார்கள். அதற்கிணங்கி அத்திருமணத்தில் மரியம்மையார் சிறப்பாகப் பங்கெடுத்துக்கொண்டார். இயேசு மறுநாள் வெள்ளிக்கிழமை திருமணத்திற்கலந்து கொள்வதற்காகக் கானவூர் சென்று கொண்டிருந்தார். அவ்வழியில் நன்மனமுள்ள

பிலிப்பு என்ற ஒருவர் வந்தார். அவர் இயேசுவை உற்று நோக்கினர். உடனே இயேசு அவரைப் பார்த்து 'என்னைப்பின்பற்றி வருக' என்று கூறினர். உடனே பிலிப்பு அவருடைய சீடர்களில் ஒருவராக அவரைப்பின்பற்றினர். ஒருநாள் பிலிப்பு தன் நண்பராகிய நத்தானியேல் என்பவரிடம் சென்று நண்பரே; தீர்க்கதரிசனங்களில் கூறியுள்ள மெசையா வந்துவிட்டார். அவர்தான் நாசரேத்தூர் இயேசு என்று கூறினர். அதுகேட்ட நத்தானியேல் 'நாசரேத்தூரிலிருந்து நன்மை பிறக்குமா? அது ஒருபோதும் இல்லை' என்றுகூறி மறுத்தார். பிலிப்பு நீர் நேரில் வந்து பாரும். உம் கருத்து தவறானதென்பதை நீரே ஒப்புக்கொள்ளுவீர்' என்று கூறி அவரை இயேசுவிடம் அழைத்துச் சென்றார். நத்தானியேலின் வருகையைக் கண்ட இயேசுநாதர் 'இதோ கபடற்ற உண்மையான இஸ்ராயேலன்' என்று கூறினர். அதுகேட்ட நத்தானியேல் 'தாங்கள் என்னை எவ்வாறு அறிந்தீர்கள்' என்றார். அதற்கு விடையாக 'பிலிப்பு உன்னை அழைப்பதற்கு முன்னே; நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்' என்று இயேசு கூறினர். இம்மொழியைக் கேட்டவுடன் நத்தானியேல் இயேசுவை மெசையா என்று நம்பினர். உடனே 'ரபீ' நீர் உண்மையாகவே சர்வேசுரனுடைய குமாரன், இஸ்ராயேலரின் அரசர் என்று கூறி வணங்கினன். அதுகேட்ட இயேசு

'நான் அத்திமரத்தின் கீழ் உன்னைக்கண்டேன்' என்று சொன்னதற்கே மதிப்புவைக்கிறாய். இன்னும் இவைகளினும் பெரியசெயல்களைக் காண்பாய் என்று கூறினார். அன்று முதல் நத்தானியேலும் இயேசுவுக்குச் சீடரானார்.

கானவூர்த் திருமணம்

மூன்றும் நாளாகிய புதன்கிழமை ஆறுசீடர் களுடன் இயேசு கானவூர்த் திருமணத்தில் கலந்து கொண்டார். திருமணம் மாலைநேரத்தில் நிகழ்ந்தது. திருமணம் நிறைவேறியவுடன் விருந்து நடந்தது. திருமணவீட்டார் ஏழைகள். இயேசு அத்திருமணத் திற்கு வந்திருந்தமையால் மிகுதியான பெருமக்கள் திருமணத்தில் கலந்து கொண்டனர். விருந்தினருக் காகத் தயாரித்திருந்த திராட்சைச் சாறு போதா மலிருந்தது. அதுகண்ட மணவீட்டார் வந்த விருந் தினர்களை உபசரிக்க முடியவில்லையே! என்று வருந் தினர்கள். பிறரது வருத்தம் காணப்பொறாத மரி யம்மையார் தம் மகனிடம் வந்து 'திராட்சைரசம் போதவில்லையாம்' என்று கூறினாள். சற்றுநேரம் பொறுத்து இயேசுநாதர் பணிவிடைக்காரர்களை நோக்கி அங்கிருந்த மூன்று குடம் நீர் கொள்ளுமள வுள்ள பெரியதாகிய ஆறு கற்சாடிகளைக் காட்டி 'சாடிகளைத் தண்ணீரால் நிரப்புங்கள்' என்று கூறி னார். அங்ஙனமே பணிவிடைக்காரர்கள் சாடிகளை

நீரால் நிரப்பினர். உடனே இயேசுநாதர் திராட்சைச்சாறு பரிமாறுபவர்களை நோக்கி 'இப்பொழுது இதில் மொண்டு பந்தித்தலைவனிடம் கொடுங்கள் என்று கூறினர். பந்தித்தலைவன் தான் வழங்கும் திராட்சைச் சாற்றை முதலில் ஒருமுறை சுவை பார்த்தல் வழக்கம். அதன்படி மணமகனது நண்பனுகிய பந்தித்தலைவன் திராட்சைச் சாற்றைச் சிறிது சுவை பார்த்தான். அச்சாறு முந்தி வழங்கப்பட்டதினும் பன்மடங்கு சுவையுடையதாயிருப்பதைக் கண்ட அவன் எந்த மனிதரும் முந்திச்சுவையுள்ள சாற்றை வழங்கி அதன்பின் பற்றுக்குறைக்குச் சுவை குறைந்த சாற்றை வழங்குவர். ஆனல் நீங்களோ சுவையுள்ள சாற்றை இதுவரைக்கும் வழங்காமல் வைத்திருந்தீர்கள் என்று வேடிக்கையாக மொழிந்தான். சற்று நேரத்திற்குள் இயேசுநாதரால் செய்யப்பட்ட அற்புதம் வெளிப்பட்டு விட்டது. அனைவரும் வியந்தனர். அதன்பின்னர் இயேசுகிறிஸ்து தம்தாயாரையும். சீடர்களையும் அழைத்துக்கொண்டு கப்பர்நாவூம் சென்றார். அதுசமயம் செருசலேம் நகரில் சிறப்பாக நடைபெறும் பாஸ்குத்திருநாள் நெருங்கியிருந்தது. அத்திருநாளுக்குச் செருசலேம் செல்லும் யாத்திரைக்கூட்டத்துடன் இயேசு தாமும் புறப்பட்டார்.

8. முதல் யாத்திரை

தந்தையின் வீடு

பலநாள் வழிநடந்து செருசலேத்திலுள்ள கோவிலையடைந்தார். அங்கு மக்கள் கூட்டம் மிகுதியாக இருந்தது. கோவிலின் வெளிப்புறத்திலிருந்த பெரியதொரு மண்டபத்தில் பூசைப் பொருள்களாகப் பயன்படும் பூ, சாம்பிராணி, புறா, முதலிய பொருள்களை விற்பதால் உண்டாகும் இரைச்சலும்; அங்கு தங்கியிருந்த ஆடுமாடுகள் கதறும் இரைச்சலும்; வணிகர்கள் பணங்களை மாற்றும் இரைச்சலும் கூடி, பெரும் சந்தைக்கூச்சலைப் போல் இருந்தது. அமைதியாக இறைவனை வணங்க வேண்டிய இடத்தில் இத்தகைய பெருங்கூச்சல் இருப்பதைக்கண்டு இயேசு வருந்தினர். இறைவனது ஆலயத்திற்கு அவமதிப்புசெய்வதை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அங்கு கிடந்த சில கயிற்றுத்துண்டுகளை ஒன்றாகச் சேர்த்து முறுக்கிக்கொண்டு கடைக்காரர்கள் மீது பாய்ந்து அடிப்பதுபோல் கையை ஓங்கித் துரத்தினர். வணிகர்களின் மேசைகளைப்புரட்டித்தள்ளி நாணயங்களை வாரி இறைத்தார். ‘இவைகளை இங்கிருந்து அப்புறப்படுத்துங்கள். என் தந்தையின் வீட்டை வியாபாரவீடு ஆக்காதேயுங்கள்’ என்று கூறினர். கூடியிருந்த கூட்டம் நாலாபக்கங்களிலும் ஓடிற்று. எவரும் இயேசுவை எதிர்த்து உரையாட அஞ்சினர்.

இத்தகைய தொல்லேக்கு ஆட்பட்டவர்களும் கூட இயேசுவின் பக்திக்காக மனமார மகிழ்ந்தனர். எனினும் பரிசேயர் முதலியோர் இயேசு செய்ததைக் குற்றமாகக் கருதினர். அதற்காக அவரைக் கேள்விகள் கேட்கவேண்டுமெனவும்; அவர்செய்த குற்றத்திற்காகத் தண்டனே யளிக்கவேண்டுமெனவும் பேசிக்கொண்டனர். ஆனல் இயேசு அவைகளே ஒருசிறிதும் பொருட்படுத்தவில்லே.

நிக்கோதேமு

இயேசு மேலும் சிலநாட்கள் செருசலேத்தில் தங்கியிருந்தார். அதுபோது அவர் மக்கள் நடமாட்டம் குறைந்த ஒரு தெருவின் சிறுவிடுதியில் தங்கியிருந்தார். அதுசமயம் அக்காலத்து மக்களால் உயர்குலத்தவராகக் கருதப்பட்ட நிக்கோதேமு என்ற பரிசேயரொருவர் இரவோடிரவாய் இயேசுநாதர் இருக்கும் விடுதிக்கு வந்தார். அவர் சற்று கோழைமனம் படைத்தவர். பகலில் இயேசுவைக் கண்டு உபதேசம் பெற்ருல் உயர்குலத்தவனுகிய தன்னே மற்றையோர் இகழ்வார்களோ, என்று அஞ்சினர். ஆனல் இயேசு அவனுக்கும் அன்போடு பற்பல நல்லுரைகள் கூறினர். அன்றிலிருந்து நிக்கோதேமு இயேசுவுக்கு அன்பராக மாறினர்.

யாக்கோப்பின் கிணறு

சில நாட்களுக்குப்பின் இயேசு தமது ஐந்து சீடர்களுடன் எருசலேமிலிருந்து கலிலேயாவுக்குத்

திரும்பினர். அவர் வழிநடந்தபோது களைத்துப் போயிருந்தார். இயேசுநாதர் மிகவும் களைத்துப்போயிருக்கிறரென்பதையுணர்ந்த அவரது சீடர்கள் வழியில் நிழல்தரும் இடமாகஇருந்த யாக்கோப்பின் கிணற்றருகே இயேசுவை இருக்கும்படிச் செய்துவிட்டு உணவு வாங்கிவருவதற்காக அருகேயிருந்த ஊருக்குச்சென்றனர்.

அது சமயம் சமாரியக்குடியைச் சேர்ந்த தாழ் குலப் பெண்ணொருத்தி அக்கிணற்றுக்குத் தண்ணீர் மொண்டுசெல்ல வந்தாள். இயேசு அவளை நோக்கித் தமக்குத் தண்ணீர் வார்க்கும்படிக் கேட்டார். அப்பெண் அதற்கிசையாது, யூதராகிய தங்களுக்குச் சமாரியப் பெண்ணுகியயான் நீர் வார்த்தல் ஆகாது என்று கூறினள். இயேசுநாதர் சற்றுநேரம் அப் பெண்ணோடு உரையாடினர். அதுசமயம் இயேசு அவள் வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைத் தெளிவாக எடுத்துக்கூறினர். அவைகளைக் கேட்டு வியந்த அம்மாது 'தாங்கள் மெசையா எனப்படும் கிறிஸ்து நாதரோ' என வினவினள். ஆம் 'உன்னோடு பேசுகிற நானே அவர்' என்றுகூறினர். அதுசமயம் கிறிஸ்துவின் சீடர்கள் ஊரிலிருந்து உணவுபெற்று வந்தனர். சீடர்களின் வரவையும் அறிந்த அச்சமாரிய மாது ஓடோடியும் தன் ஊர் சென்று கிறிஸ்து நாதரின் அற்புதச்செயல்களைப் பலருக்கும் எடுத்துக்கூறினள். ஊரிலிருந்து ஏராளமான மக்கள் யாக்கோப்பின் கிணற்றருகே யிருக்

கும் இயேசுவைக்காண வந்துகூடினர். அவர்களைக் கண்ட இயேசு உணவு உண்பதையும் மறந்து பற்பல போதகங்களைக் கூறினர். அங்கு கூடியிரு சமாரியரின் வேண்டுகோளுக்கிணங்கிய இயேசுநாதர் அங்கேயே இரண்டு நாட்கள் தங்கியிருந்தார்.

9. பிறந்தநாட்டில் நடந்தவை

நீ போகலாம்

அதன்பின் இயேசு கலிலேயாவுக்குத் திரும்பினர். அங்கு அவர் ஒருநாள் கானவூரில் தங்கியிருந்த போது அதன் அருகிலுள்ள கப்பர் நாவூம் என்ற ஊரின் தலைவனாகிய சிற்றரசன் ஒருவனது மகன் நோய்வாய்ப்பட்டு இறக்குந் தறுவாயிலிருந்தான். அவ்வமயம் அச்சிற்றரசன் இயேசுகிறிஸ்துவையும், அவரது தெய்வீக மகிமையையும் கேள்விப்பட்டிருந்தான். ஓடோடியும் சென்று கிறிஸ்துவைக் கண்டான். தன்மகன் பிழைக்க அருள் செய்யவேண்டுமென்று கெஞ்சிக்கேட்டுக்கொண்டான். இயேசு தாம் இருந்த இடத்திலிருந்தே 'நீ போகலாம் உன் மகன் பிழைத்திருக்கிறன்' என்றுகூறினர். அதனல் சாகவிருந்த அம்மன்னனது மகன் நோய் நீங்கி நலம் பெற்றான்.

பிறந்தவூரில்

நாசரேத்தூரில் ஒரு ஓய்வுநாளில் இயேசுநாதர் ஆலயத்துக்குச் சென்றார். அங்கு பற்பல நல்லு

ரைகள் போதிக்கப்படுவதோடு அந்தந்த கிழமைக் குரிய தீர்க்கதரிசன வசனங்களைப் படித்தும் பொருள் கூறுவார்கள். இயேசுநாதரின் புகழ் நாடெங்கும் பரவிவருவதை அவர்கள் அறிந்திருந் தனர். ஆகையால் அவர் கோவிலுக்கு வந்திருந்த தைப்பற்றிப் பலர் மகிழ்ந்தனர். ஆயினும் சிலர் காரணமின்றி அவர் மீது பொறாமைப்பட்டனர். இயேசுநாதர் அடக்கத்தோடு ஏழைகள் அமர்ந் திருந்த இடத்திற்குச் சென்று முழந்தாட்படியிட்டு வணங்கினர். அதுவேளை அக்கோயிற்பூசாரி பெட் டகத்திலிருந்த பெரியதொரு ஓலைச்சுருளை எடுத்து மேடையின்மீது கொண்டுவந்து யாராவது இதைப் படித்துப் பொருள்கூறுகின்றீர்களா? என்று கேட் டார். உடனே இயேசுநாதர் எழுந்து அச்சுருளை வாங்கிச்சில தீர்க்கதரிசன வசனங்களைப்படித்தார். அதன்பின் அத்தீர்க்கதரிசன உரைகளில் கூறப் பட்டவர் தாமே என்பதையும்; உலகஇரட்சகத்திற் காக இறைவன் தன்னை அனுப்பியிருக்கிறார் என் பதையும் எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் வெளிப்படையாகக் கூறினர். அதுகேட்ட பொறா மைக்காரரில் சிலர் புழுங்கினர். நமது ஊரில் கல் லாது, தச்சுவேலை செய்து நம்மிடம் கூலிவாங்கிப் பிழைத்த இவன் நமக்குப் போதகன் ஆவதா? என்று கூறிப்பழித்தனர். மேலும் மேலும் அவ் வெறுப்பைப் பரிசேயர்கள் நன்குதூண்டிவிட்டனர். இறுதியாக அவ்வூரார் இயேசுவை ஊருக்குப்புறம்பே

தள்ளித் தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த மலையின் உச்சியிலிருந்து அவரைத் தலைகீழாகத்தள்ளி விடுவதற்காக அவ்வரை மட்டும் கொண்டுபோனார்கள். அன்று நாசரேத்தூர் மக்கள் தம் ஊரில் பிறந்த பெருமகனை அளவின்றி அவமானப்படுத்தி இகழ்ந்தனர். ஆனால் இயேசு அவர்கள் கையில் பிடிபடாமல் தப்பிவிட்டார். அதிலிருந்து இயேசுநாதர் மீண்டும் நாசரேத்தூர் திரும்பவேயில்லை.

ஒருநாள் தமது சீடர்களில் ஒருவராகிய சீமோனுடைய மாமி காய்ச்சலால் படுத்திருந்தாள். இயேசு அவளது கையைத்தொட்டுக் குணப்படுத்தினர். பாயும் படுக்கையுமாய் இருந்த அவள் உடனே எழுந்து இயேசுவுக்கு மிகுதியான பணிவிடைகள் செய்தாள். அத்துடன் இயேசுநாதர் பற்பல நோயாளிகளைக் குணப்படுத்தினர். அவ்வதிசயச் செயல்களைக் கேட்ட அவ்வூர் நோயாளிகள் அனைவரும் தாம் தாம் நலமடைய வேண்டி இயேசுநாதர் தங்கியிருந்த இராயப்பர் வீட்டின் முன் கூட்டம் போட்டுவிட்டனர். பிணியாளர்களது படுக்கைகள் தெருவையே அடைத்து விட்டன. இயேசு இன்முகத்தோடு நோயாளிகளின் நடுவில் நுழைந்து அனைவருக்கும் நோய்நீக்கம் அளித்தருளினர். அதன்பின்னும் அவர்பல ஊர்களுக்குச்சென்று பற்பல நற்போதகங்களை வழங்கினர்.

மனிதரைப் பிடிப்பவனாவாய்

பின்னும் ஓர் நாள் இயேசுநாதர் கலிலேயாக் கடலருகே படகில் அமர்ந்து மக்களுக்குப் போதித்துக்கொண்டிருந்தார். அதன்பின் அவர் சீமோனை நோக்கிப் 'படகை ஆழத்திலே தள்ளிக்கொண்டு போய் மீன் பிடிப்பதற்கு உங்கள் வலைகளை வீசுங்கள்' என்று கூறினர். அவர்கள் நெடுநேரம் வலை வீசியும் மீன்கள் கிடைக்கவில்லை. நண்பர்கள் யாவரும் வலைவீசிக் கையோய்ந்தனர். எனினும் சீமோன் மட்டும் 'போதகரே நாங்கள் இரவெல்லாம் பிரயாசைப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. எனினும் தேவரீரது வார்த்தையின்படியே வலையை வீசுவேன்' என்றார். அப்படிச் சொல்லி அவர்வலை வீசியவுடனே வலைகிழிந்து போகுமளவுக்கு ஏராளமான மீன்கள் பிடிபட்டன. அதுகண்டு இராயப்பர் வியந்து இயேசுவுக்கு வணக்கம் செலுத்தினர். மற்றையோரும் பேரதிசயம் அடைந்தனர். அதுபோது இயேசு இராயப்பரை நோக்கி 'பயப்படாதே! நீ! இன்று முதல் மனிதரைப்பிடிப்பவனாவாய்' என்று கூறினர்.

அற்புத மருத்துவர்

வேறு ஒருநாள் இயேசு ஒரு பட்டினத்தருகே சென்றுகொண்டிருந்தபோது தொழுநோயாளன் ஒருவன் மண்டியிட்டுக்கெஞ்சினன். அவனை இயேசு

குணப்படுத்தினர். மற்றொருநாள் கப்பர் நாஹூம் என்றவூரில் ஒருவீட்டில் அமர்ந்திருந்தார். அது போது நோய் நீக்கம் பெறுவதற்காகவும்; அவரது உபதேசங்களைக் கேட்பதற்காகவும் ஏராளமான மக்கள் அங்கு கூடியிருந்தார்கள். அப்போது பரிதாபத்திற்குரிய திமிர்வாத நோயுள்ள ஒருவனை அவனது நண்பர்கள் இயேசுவினிடம்காட்டி நலம்பெற முயன்றனர். ஆனல் அவர்கள் எவ்வளவு முயன்றும் நோயாளியை இயேசுவின்முன் கொண்டு போகமுடியவில்லை.

இறுதியாக அவர்கள் தமது நோயாளி நண்பனைப் படுக்கையில் வைத்துக்கட்டி வீட்டின்மேலே யேற்றி ஓட்டைப்பிரித்துக் கயிற்றின் உதவியால் இயேசுநாதரின் காலடிக்குமுன் வருமாறு இறக்கினர். அவ்வதிசயத்தை இயேசுநாதர் உட்பட அனைவரும் கண்டனர். இயேசுநாதர் அந்நோயாளியையும் மலர்ந்த முகத்தோடு நோக்கிக் குணப்படுத்தினர். இத்தகைய அதிசயச் செயல்களைப் பரிசேயரும் வேதபாரகரும் மிகவும் வெறுத்தனர். இயேசுநாதர் மீது அளவுகடந்த பொறாமை கொண்டனர்.

என்னைப்பின்பற்றிவா

அதன்பின் ஒருநாள் வழக்கம்போல் பல மக்கள் தொடரக் கப்பர் நாஹூமிலிருந்து கலிலேயாவுக்குச் செல்லும் வழியில் போய்க்கொண்டிருந்தார். அது

போது கப்பலின் ஏற்றுமதி இறக்குமதிகளுச்கு வரி தீர்த்துப் பணம் வசூலிக்கும் ஆயக்காருருள் ஒருவனு கிய மத்தேயுவைக்கண்டார். அவன் தன் எதிரில் பெரும் பணக் குவியலுடன் அமர்ந்திருந்தான். மக்கள் கூட்டம் பின்தொடரவந்த இயேசுநாதர் மத்தேயுவின்பால் சென்று 'என்னைப்பின்பற்றிவா!' என்று கட்டளையிட்டார். உடனே மத்தேயு திரும்பிப்பார்த்தார். இயேசுநாதர் தனக்குக் கட்டளையிடுகிருர் என்பதை அறிந்தார். உடனே தன் முன்னிருந்த பெரும் பணக் குவியலை விட்டு விட்டு இயேசுநாதரைப்பின்பற்றினுர். மத்தேயு தாம் இயேசுவுக்கு அடியவரானதைப்பற்றிப் பெரிதும் மகிழ்ந்தார். தான் பெற்ற பெருமையைப் பலருக்கும் அறிவிக்கவும், கொண்டாடவுமாகப் பெரியதொருவிருந்து வைத்தார். அவ்விருந்தில் இயேசுநாதர் வந்திருந்து விருந்துண்டு மத்தேயுவைப் பெருமைப்படுத்தினுர்.

10. பன்னிரண்டு சீடர்கள்

ஓய்வு நாள்

இயேசுநாதர் வெளிப்படையாக உபதேசம் செய்யத் தொடங்கி ஆண்டு இரண்டாயிற்று. நாடெங்கும் இயேசுவின் புகழ் பரவிற்று. பெரும் மன்னர் மனைகளிலும், ஏழைக் குடிசைகளிலும் இயேசு பேசப்பட்டார். இயேசுநாதர் ஒரு ஓய்வு நாளில் புரோதிபாதிகா என்னும் குளக்கரையில் நாற்பது

ஆண்டு காலமாக நோய்வாய்ப்பட்டுக்கிடந்த ஒரு வனைக் குணப்படுத்தினர். அவன் இயேசுவுக்கு நன்றி கூறிவிட்டுத் தனது படுக்கையைச் சுமந்து கொண்டு வீடு திரும்பினன். ஓய்வுநாளில் அவன் படுக்கையைச் சுமந்து செல்வதைக் கண்ட பரிசேயர் கள் அவனைக் கண்டித்தார்கள். கிறிஸ்துவின் காலத் தில் பாலஸ்தீன நாட்டில் ஓய்வு நாளில் எத்தகைய சிறிய வேலையும் செய்யலாகாதென்ற கொள்கை யிருந்தது. காரணம் ஓய்வு நாளில் மக்கள் உழைப் பின்றி மகிழ்ச்சியாக இருந்து இறைவனை வணங்கு வதற்காகவே கிழமைக்கு ஒரு நாளை ஓய்வு நாளாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வகையி லாவது இயேசுவின்மீது குற்றம் சுமத்தவேண்டு மென விரும்பிய பரிசேயர்கள் இப்பொதுவிதியைத் தமக்கு ஆதாரமாக வைத்துக்கொண்டு இயேசுவைக் கண்டிக்க முற்பட்டார்கள்.

வேறு ஒரு ஓய்வு நாளில் இயேசுநாதர் சூம்பிய கரமுடைய ஒருவனுக்கு நன்மை செய்ய இருந்தார். அதுபோது சில பரிசேயர்கள் 'ஓய்வு நாளில் ஒன் றும் செய்யலாகாதென்பது முறையல்லவா? தாங் கள் அம்முறையை மீறுவதேன்? என்று கண்டித் துக் கூறக் கருதியிருந்தார்கள். அங்ஙனம் கருதி யிருந்த பரிசேயர்களை நோக்கி 'உங்களில் எந்த மனிதனவது ஓய்வு நாட்களில் தன் ஆடு குழியில் விழுந்தால் அதைத் தூக்கிவிடாதிருப்பானே'

ஆட்டைப் பார்க்கிலும் மனிதன் எவ்வளவோ மேலானவன் ஆதலினல் ஓய்வு நாட்களில் மக்களுக்கு நன்மை செய்வது தகும்' என்று கூறினர். அது கேட்ட பரிசேயர்கள் பதில் கூற முடியாமல் விழித்தனர். உடனே இயேசுநாதர் சூம்பிய கரமுடையவனை கையை நீட்டுமாறு அவனது கையைக் குணப்படுத்தினர்

திருச்சபை துவக்கம்

இவ்வாறு இரண்டு ஆண்டுகள் உபதேசமும், நோய் நீக்கமும் செய்துகொண்டுவந்த இயேசு தமக்குப்பின்னும் இத்தகைய தொண்டு உலகில் நடைபெற்றுக்கொண்டே இருக்கவேண்டுமென்று விரும்பினர். அதற்காகத் தன்பால் அன்புள்ள பன்னிருவரை 'அனுப்பப்பட்ட தூதுவர்கள்' என்னும் பொருளுள்ள அப்போஸ்தலராக நியமித்தார். அப்போஸ்தலராகப் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கல்வி கேள்விகள் சிறிதும் அறியாது, மீன் பிடித்து எளிய வாழ்க்கை நடத்தும் அறிவற்ற செம்படவர்களே. ஆயினும் இயேசு தமது அப்போஸ்தலர்களை மிகவும் பெருமைப்படுத்தினர். அவர் உங்கள் வார்த்தைகளைக் கேட்கிறவன் என் வார்த்தைகளைக் கேட்கிறவன் ஆகிறன்' 'உங்கள் வார்த்தைகளை அலட்சியம் பண்ணுகிறவன் என் வார்த்தைகளை அலட்சியம் பண்ணுகிறவன் ஆகிறன். உங்களை இகழுகிறவர்கள் என்னை இகழுகிறர்கள்.

உங்களைப் புகழுகிறவர்கள் என்னைப் புகழுகிறார்கள்' உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பியவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று கூறினார்,

அப்போஸ்தலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் பின்வருமாறு :—

சீமோன் என்கிற **இராயப்பர் (1), பிலவேந்திரர் (2),** செபதேயுவின் மகனாகிய **யாகப்பர் (3), அருளப்பர் (4), பிலிப்பு (5), பார்த்தலோமையர் (6), தோமையர் (7), மத்தேயு (8),** அல்பேயின் குமாரராகிய **யாகப்பர் (9), ததேயு (10),** கனானேய **சீமோன் (11), யூதாஸ் இஸ்காரியோத்து (12)** எனப் பன்னிருவராவர்.

இப்பன்னிருவருள் முதன்மையானவர் இராயப்பரே யாவார்.

1. இராயப்பர் :—சற்று படபடப்பும், தீவிரமும் வாய்ந்த இயல்புடையவர். தமது தலைவர்பால் அளவற்ற அன்புகொண்டவர். நீரோசக்கரவர்த்தியின் காலத்தில் நடந்த தொல்லையில் கிறிஸ்துவின் கொள்கைகளுக்காகத் தம் உயிர் கொடுக்க நேரிட்டபோது கிறிஸ்துவைப்போலத் தம்மைச் சிலுவையில் அறைந்து கொல்லாமல், தலைகீழாகச் சிலுவையில் அறைந்துவிடும்படிக் கேட்டுக்கொண்டவர்.

2. **பிலவேந்திரர்:**—இவர் இராயப்பருடைய சகோதரர். இராயப்பரை கிறிஸ்துவினிடம் அழைத்துக் கொண்டுவந்தவர். முதன்முதலில் அப்போஸ்தலர் என்ற பட்டத்தைப் பெற்றவர். எல்லோரினும் வயதில் முதிர்ந்தவர்.

3. செபதேயுவின் குமாரராகிய **யாகப்பர்**:—தம் தலைவருக்காக முதன் முதலாக உயிர் கொடுத்த உத்தமர்.

4. **அருளப்பர்**:—அப்போஸ்தலருக்குள் மிகவும் இளையவர். இவர் இயேசுநாதரால் மிகவும் நேசிக்கப்பட்ட சீடராவார்.

5. **பிலிப்பு**:—இயேசுவினிடம் கடவுளை நேரில் காட்டும்படி வற்புறுத்தியவர்.

6. **பார்த்தலோமையர்:**—ஆராயும் இயல்புள்ளவர். உண்மை என அறிந்ததை நம்புபவர். இயேசுவால் கபடமற்ற உத்தம இஸ்ராயேலன் என்று அழைக்கப்பட்டவர்.

7. **தோமையர்**:—இயேசுவின் விருப்பத்தையே தமது கடைப்பிடியாகக்கொண்டவர். இயேசுவுக்கு அபாயம் நேரிடும்போதும் பிரியாதிருக்கவேண்டுமென்ற கொள்கை யுடையவர்.

8. **மத்தேயு**.—இயேசுநாதர் 'தோன்ற இருந்த மெசையாவே' என்பதை மெய்ப்பிக்க தீர்க்க தரிசன மொழிகளோடு இயேசுவின் வாழ்க்கையை ஒப்பிட்டுக் காட்டி இயேசுவின் வரலாற்றை முதன் முதலில் வரைந்தவர்.

9. **அல்பேயின் குமாரரான சின்னயாகப்பர்**:—பிற்காலத்தில் செருசலேம் நகரில் முதல் மேற்றிராணியார் என்னும் பதவிப் பொறுப்பை ஏற்று நடத்தியவர்.

10. **ததேயு**:—கிறித்தவர்கள் அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்டவைகளை உறுதியாகக் கடைப்பிடிக்கவேண்டுமென்று கண்டிப்பானகடிதம் எழுதியவர்.

11. **சீமோன்**:—நாட்டுப் பற்றுடையவர்.

12. **யூதாஸ் இஸ்காரியோத்து**:—'முப்பது வெள்ளிக் காசுகளுக்காக இயேசுவை எதிரிகளிடம் காட்டிக் கொடுத்த கயவன்' என்று உலகத்தாரால் பழிக்கப் பெற்றவன். இறுதியாக இயேசு மரண தண்டனை அடைந்தார் என்று அறிந்தவுடன் பெற்ற பணத்தை எதிரிகளிடத்தில் வீசி எறிந்துவிட்டுத் தான் செய்த தவற்றை உணர்ந்து நான்றுகொண்டு இறந்து தன் பாவத்திற்குக் கழுவாய் தேடியவன்.

இத்தகைய குணநலன்கள் கொண்ட பன்னிருவர்தான் இயேசுவோடு கூடியிருந்த முக்கியமான சீடர்கள் ஆவார்கள்.

11. மலைச் சொற்பொழிவு

பேறுடையவர்கள்

ஒருநாள் பெரிய மக்கள் கூட்டம் இயேசு நாதரைப் பின் தொடர்ந்து சென்றது. இயேசு நாதர் அருகேயிருந்த குன்றொன்றின்மேல் ஏறிச் சென்றார். அவரைத் தொடர்ந்து மக்களும் மலை மீது ஏறினர். மலையில் சமப்பாங்குள்ள ஒரு சார லில் இருந்த ஒரு மேட்டின்மீது இயேசுநாதர் ஏறி நின்று ஒரு சொற்பொழிவு செய்தார். இச்சொற் பொழிவுதான் அவரது போதனைகளில் மிகவும் முக் கியமானதாகக் கருதப்படுகிற மலைச் சொற்பொழி வாகும். இச்சொற்பொழிவில் உலக மக்கள் அனை வருக்கும் பொதுவான பற்பல செய்திகள் கூறப்பட் டுள்ளன. அவற்றுள் முக்கியமான சில தொடர்கள் பின் வருமாறு.

"மனத்தரித்திரர் பேறுடையவர்கள். ஏனெ னில் வீடு பேறு அவர்களுடையதாகும்"

இதன்பொருள்:— உலகப்பொருள்களுக்காகப் பேராசைப்படாமல் இறைவன் அளித்தனபோதும் என்று கருதியும், பெருஞ்செல்வரைக்கண்டு பொறா மைப்படாமலும் தம்மிடம் உள்ள சிறு பொருளை இழக்க நேரிடும் போதும் மனம் வருந்தாமலும் உள்ள பொருளில் தம்மால் இயன்ற அளவு வறி ஞர்க்கு உதவும் இயல்புள்ளவர்களே மனத்தரித்திரர்

எனப்படுவார் என்று குறிப்பிடப்படுகிறது. இத்தகையர் பொருளாசையற்று நற்செயல்களில் ஈடுபடுவதால் உறுதியாக வீடு பேறடைவர். ஆகலின், அவர்களைப் பேறுடையார் என்பது.

" சாந்தகுணம் உள்ளவர்கள் பேறுடையவர்கள். ஏனெனில், அவர்கள் உலகைப் பெற்றுக் கொள்வார்கள் ".

இதன்பொருள்:— சாந்த குணமுள்ளவர்கள் கோபங்கொள்ளுதலும் பழிவாங்குதலும் செய்யார். அதனால், அவர்கள் உலக மக்களுடைய மனத்தில் இன்பத்தை வளர்ப்பவர்களாக இருக்கிறார்கள். அதனால், உலகம் தானே அவர்களுக்கு வசப்பட்டு நிற்கும். எனவே, அவர்கள் உலகைப் பெற்றவர்கள் ஆவார்கள் என்பது.

" அழுகிறவர்கள் பேறுடையவர்கள். ஏனெனில், அவர்கள் ஆறுதல் அடைவார்கள் "

இதன்பொருள்:— தாங்கள் செய்த தவறுகளுக்காக மனம்வருந்தி அழுகிறவர்கள் — மிகவும் வருந்துகிறவர்கள்—மீண்டும் தவறுகளைச் செய்யார். குற்றமுடையவர்கள் ஆயினும் விரைவில் நல்லவர்கள் ஆவார்கள். ஆகையால், அவர்கள் ஆறுதல் பெறுவது உறுதி என்பது.

"நீதியின் மேல் பசிதாகம் உடையவர்கள் பேறுடையவர்கள் ஏனெனில், அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்."

இதன்பொருள்:— பசிக்கும் பொழுது உணவு உண்ணற்கு எழும் விருப்பம் போலவும், நீர் வேட்கையின்போது நீரருந்த எழும் விருப்பம் போலவும் நேர்மையான செய்திகளைக் கைக்கொண்டு நடப்பதில் இயற்கையாகவே மிகுந்த விருப்பமுடையவர்கள் ஒருபோதும் தவறு செய்யமாட்டார்கள். தவறு செய்யாத அவர்களுக்கு எப்பொழுதும் துன்பம் அணுகாது. எனவே அவர்கள் இன்பமாக வாழ்வார்கள் என்பது.

"இரக்கமுடையவர்கள், பேறுடையவர்கள், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்."

இதன்பொருள்:— நாம் உயிர்கள்மீது இரக்கம் காட்டினுல் இறைவன் நம்மீது இரக்கம் காட்டுவார். அதனுல் நாம் பெரிய நன்மைகளை அடையலாம். ஆகையால், நாம் இரக்கமுடையவர்களாக இருப்பது நல்லது என்பது.

"தூய இருதயம் உடையவர்கள் பேறுடையவர்கள். ஏனெனில் அவர்கள் இறைவனைக் காணுவார்கள்."

இதன் பொருள்:—தூய மனம் உள்ளவர்கள் தூய்மையாக வாழ்வார்கள். தூய்மையான மனத்தில்

இறைவன் வெளிப்பட்டுத் தோன்றுவார். அஃதனால் அங்கு அவர்கள் இறைவனைக் கண்ணாரக் கண்டு மகிழ்வார்கள். வீடுபேறடைவார்கள் என்பது.

"சமாதானம் பண்ணுகிறவர்கள் பேறுடையவர்கள் ஏனெனில், அவர்கள் தெய்வத்தின் மக்கள் எனப்படுவார்கள்."

இதன் பொருள்:—தாங்களும் சமாதானமுடையவர்களாக வாழ்ந்து மற்றையோர் அறியாமையால் கலகம் செய்துகொண்டு துன்பமடையும்போது அத் துன்ப நீக்கத்திற்காக அவர்களுக்கு சமாதானம் செய்துவைத்து உலகில் நன்மையைப் பெருக்குவோரை இறைவன் தனது சொந்த மகனைப்போல பெருமைப்படுத்துவார் என்பது.

"நீதியின் நிமித்தம் துன்பமுறுகிறவர்கள் பேறுடையவர்கள் ஏனெனில், வீடுபேறு அவர்களுடையது."

இதன் பொருள்:—நீதியை நிலைநிறுத்துவதற்காகத் தமது உடலின் நோவையும், சாவையும் பொருட்படுத்தாது துன்பமடைபவர்களால் உலகில் நீதி நிலைநிறுத்தப்படுகிறது. அதனால் உலக மக்கள் அனைவரும் நலமடைகிறார்கள். பலருக்கும் நன்மை செய்யும் அவனுக்கு இறைவன் உறுதியாக வீடுபேற்றைக் கொடுப்பார் என்பது.

இங்ஙனம் மலைமீது பல அருங் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைத்துப் பின் மலையை விட்டிறங்கினார். மக்கள் திரளும் அவரைப் பின் தொடர்ந்து திரும்பியது.

12. அற்புத நன்மைகள்

நடக்கவேண்டுமோ!

ஒருநாள் கப்பர் நாவூமிலிருந்த செந்தூரியனாகிய உரோமப் படைத்தலைவன் ஒருவன் (செந்தூரியன்—நூறு உரோமப் போர்வீரர்களின் தலைவன்) தனது ஊழியக்காரர்களில் ஒருவன் நோய்வாய்ப்பட்டு இறக்கக் கிடப்பதை அறிந்து வருந்தினான். இயேசு நாதரின் உதவிபெற்றால் அவனைப் பிழைப்பிக்கலாம் என்று நம்பினான். தான் புறமதத்தவனா யிருந்ததால் வேறுபல யூதர்களின் துணைகொண்டு இயேசுவை அணுகினான். உடனே இயேசு அவ்வூழியக்காரனது நோயை நீக்க அவனிருக்கும் இடம் நோக்கி எழுந்து நடந்தார். அது கண்ட அவ்வுரோமையர் தலைவன் இயேசுவின் பாதத்தில் விழுந்து 'அன்புமிக்க ஐயனே! நான் ஒரு வீரனைப்பார்த்து போ! வென்றால் போகிறான். வா! வென்றால் வருகிறான். அப்படியிருக்கத் தாங்கள் கால்கள் வருந்த நடக்கவேண்டுமோ! இங்கிருந்தே கட்டளையிடுங்கள். நீர் என்னில்லத்தில் நுழையுமளவு நான்

பேறு பேற்றவனல்லேன்' என்று கூறினன். உடனே இயேசு நீ போகலாம். உன்விருப்பப்படியே நடக்கும் என்று கூறினர். உடனே அத்தலைவனது ஊழியக்காரன் உடல் நலமடைந்தான்.

மரியமக்தலேன்

மற்ருெரு நாள் நயீம் என்னும் சிற்றூரில் ஒரு சிறுவன் இறந்துவிட்டான். அவனைப் பாடையில் கிடத்தி இடுகாட்டிற்கு எடுத்துக்கொண்டு போஞர்கள். அதுசமயம் அந்த ஒரே மகனது விதவைத்தாய் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு மிகவும் வருந்தியழுதாள். அவள் அவ்வழியாக இயேசுநாதர் வருவதைக்கண்டு அவரது பாதத்தில் விழுந்து தன் மகனைப் பிழைப்பிக்குமாறு கெஞ்சினள். அவளது வேண்டுதலுக்கு மனமிரங்கிய இயேசு அச்சிறுவனை எழுப்பிக்கொடுத்தார். சிறுவன் எழுந்த வியப்பைக் கண்டு அனைவரும் ஆச்சரியமுற்றனர். அவ்வமயம் அம்மக்களுக்கு இயேசு பற்பல நல்லுரைகள் கூறினர். இந்த அதிசயத்தைக் காணக் கூடியிருந்த கூட்டத்திலிருந்த ஒழுக்கம் கெட்ட பெண்ணான மரியமக்தலேன் அன்றிலிருந்து இயேசுவின்பால் அன்புகொண்டாள்.

இயேசுவால் மனம்மாறிய மரியமக்தலேனம்மாள் தனது உயர்ந்த ஆடையணிகளையெல்லாம் கழற்றி எறிந்துவிட்டு முரட்டு ஆடையணிந்தாள்.

இயேசு உயர்ந்த குலத்தவனான சீமோன் என்ற பரி சேயனது வேண்டுகோளின்படி அவனது மனைக்கு விருந்துண்ணப் போவதை அறிந்திருந்தமையால் அவளும் சீமோன் மனைக்குச் சென்றாள். அங்கு இயேசுவைக் கண்டு தன் குற்றங்களுக்காக அவர் பாதத்தின்மீது விழுந்து அழுதாள். அவளது கண் ணீர் இயேசுவின் பாதத்தின்மீது பட்டு வழிந்தது. மக்தலேன் தன் கண்ணீர் பட்ட பாதத்தை தன் தலைக்குடுமியால் துடைத்தாள். கொண்டுவந்திருந்த வாசனைத் தைலத்தை அவரது பாதத்தின்மீது பூசி பெரியோரை வரவேற்கும் அடையாளமாக அவரது பாதத்தில் அநேக முத்தங்கள் செய்தாள். அது கண்டு அம்மனைத் தலைவனாகிய சீமோன் ஒழுக்கங் கெட்ட மக்தலேன் தன் மனையில் நுழைந்தமை தன் பெருமைக்கு இழுக்கு எனவும் இழிமகளாகிய மக்த லேனுக்கு இயேசு அன்புகாட்டுவது தவறு என்றும் கருதினான்.

அவனது கருத்தையுணர்ந்த இயேசு சீமோனே' நான் உனக்கொன்று சொல்ல வேண்டும். ஒரு கடன்காரனிடத்தில் இரண்டு பேர் கடன்பட்டிருந்தார்கள். ஒருவன் அவனுக்கு ஐம்பது ரூபாயும் மற்றொருவன் ஐநூறு ரூபாயும் கொடுக்கவேண்டும். அவர்கள் கடனை திருப்ப வகை யில்லாததனால் அவன் இருவருக்கும் மன்னிப் பளித்துவிட்டான். அவ்விருவரில் எவன் அவரை

மிகுதியாக நேசிப்பான் என்று கேட்டார். அது கேட்ட சீமோன் யாருக்கு அதிகம் மன்னித்தாரோ அவனே அவனை அதிகம் நேசிப்பான் என்று கூறினன். உடனே இயேசு அப்பெண்பிள்ளையைக் காட்டி இப்பெண் என்னைக் கண்டதிலிருந்து கண்ணீரால் பாதத்தைக் கழுவி வாசனைத் தைலம் பூசிப் பாராட்டுகிருள். நீ அவ்வாறு செய்யவில்லையே. அவள் மிகுதியாக அன்பு பாராட்டுவதால் அவளுக்கு அதிக பாவங்கள் மன்னிக்கப் படுகின்றன. 'உன் அன்பு உன்னைக்காத்தது நீ சமாதானத்தோடு போ' என்று மக்தலேனுக்குக் கூறி அனுப்பிவைத்தார்.

அற்புதப் போதகர்

இயேசுநாதர் பற்பல இடங்களிலும் போதனைகள் செய்வதையும், நோய் நீக்கம் செய்வதையும் நாடெங்கிலுமுள்ள மக்கள் கேள்வியுற்றனர் மிகுதியான மக்கள். இயேசுநாதரை எப்பொழுதும் பெருங்கூட்டமாகச் சூழ்ந்திருந்தனர். அதனல் அவர் உண்பதற்கும் உறங்குவதற்குங்கூட முடியாமலிருந்தது. சிறுவரும், பெரியவரும், ஆண்களும், பெண்களும், செல்வரும், வறியரும், அதிகாரிகளும், பிறருமாக எல்லா வகையான மக்களும் இரவும்; பகலும் இயேசுவை தொடர்ந்து சென்றனர். இயேசுநாதர் ஓரிடத்தில் தங்காமல் போதனைகள் செய்து கொண்டே பல்வேறிடங்களும் சென்றுகொண்டிருக்

தார். இயேசுநாதரால் தமது புரட்டு வெளிப்பட்டு வாழ்வழிந்து விடுமோ என்று அஞ்சிய பரிசேயரும், வேதபாரகருங்கூட இயேசுவின் சொற்பொழிவின் இனிமையிலே மயங்கிப் பின் தொடர்ந்தனர். இயேசுநாதரின் போதனைகளில் அடிக்கடி இனிய உபமானக் கதைகள் கூறப்பட்டுவந்தன.

"உயிர் பிழைக்க எதை உண்போம் என்றும் உடலை மூட எதை உடுப்போம் என்றும் ஏக்கமாய் இராதேயுங்கள். உணவை விட உயிரும் உடையை விட உடலும் மேன்மையானவை அல்லவா? ஆகாயப்பறவைகளைக் கவனியுங்கள். அவை விதைக்கிறதுமில்லை; அறுக்கிறதுமில்லை. களங்களில் குவிக்கிறதுமில்லை. ஆகிலும் இறைவன் அவைகளைக்காத்து வருகிறாரே. நீங்கள் அவைகளிலும் மேன்மையுள்ளவர்கள் அல்லரோ! வயலில் உள்ள லில்லி புட்பங்களைப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை. ஆகிலும் சாலமோன் மன்னன் காலம் முதலாய்த் தன் முழு வல்லமையிலும் அவைகளில் ஒன்றைப் போலென்றாகிலும் உடை பூண்டதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

பிள்ளைகளைக் கையிலேந்தி நிற்கும் தந்தைமார்களை நோக்கி 'உங்களுக்குள் எந்தமனிதனாகிலும் தன்மகன் அப்பத்தைக் கேட்டால் அவனுக்குக் கல்லை நீட்டுவானா? மச்சத்தைக் கேட்டால் பாம்பை நீட்டுவானா? நீங்கள் தீயோராக இருப்பினும் உம்

மக்களுக்கு நல்லனகொடுக்க அறிந்திருக்கும்போது எல்லோர்க்கும் தந்தையாகிய இறைவன் தம்மை வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு மிகுதியான நன்மைகளையே தந்தருளுவார்.

இங்ஙனம் பல அரிய உபமானங்கள் காட்டி விளக்கிப் பேசுவார். ஒருநாள் அரசாங்க அதிகாரிகள் இருவர் இயேசுவைப்பிடித்துச் செல்லவந்தனர். அவர்கள் இச்சொற்பொழிவின் இனிமையில் மூழ்கி வந்த வேலையை மறந்தனர். அவரது தலைவர் 'ஏன் நீங்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு வரவில்லை' என்று கேட்டதற்கு 'எந்தமனிதனும் இவரைப்போல் பேசினதில்லை. அவைகளைக் கேட்டு நாங்கள் சென்ற வேலையை மறந்து விட்டோம்' என்று கூறினார்கள். வேதபாரகர்களால் பரிசேயர்கள் மிகவும் இகழ்ந்து ஒதுக்கப்பட்டனர். எளியமக்களை இயேசுநாதர் மிகவும் அன்பாக நேசித்தார். எங்கும் வெறுப்பைக் கண்ட அம்மக்கள் இயேசுநாதரின் பேரன்பைக் கண்டு அவரைவிடாது பின்பற்றினர்.

காற்றும் கடலும்

ஒருநாள் ஏரிக்கரையருகே போதகம் செய்து கொண்டிருந்த இயேசுநாதர் இரவுநேரம் வந்தும் தம்கூட இருப்பவர்கள் பிரியாது இருப்பதுகண்டு தம் சீடர்களை நோக்கி "நாம் ஏரியைக்கடந்து எதிர் கரைக்குப் போவோம்" என்று கூறினர். அவர்

களும் படகின் மூலம் ஏரியைக்கடக்கலானர். சீடர்கள் இயேசுநாதர் கூறிய மொழிகளில் உள்ள ஐயங்களைத் தனித்திருக்கும்போது வினவுவது வழக்கம். இயேசுநாதர் ஓய்வின்றி அலுத்துப்போயிருந்தமையால் படகின் ஒரு ஓரத்தில் தலைசாய்த்து உறங்கினர். அதுசமயம் எங்கிருந்தோ பெருங்காற்றும் பெரும்புயலும் தோன்றிப் படகு கவிழுமளவு பெருங்கொந்தளிப்பு உண்டாயிற்று. அக்கொந்தளிப்பைக்கண்டு அவரது சீடர்கள் அஞ்சி நடுங்கினர்கள். படகை நிலை நிறுத்த அரும்பாடு பட்டார்கள். இறுதியில் படகு கவிழ்ந்து விடுமோ என்று அஞ்சினர்கள். "சுவாமி நாங்கள் சாகிறோம் எங்களைக் காப்பாற்றும்" என்று கூச்சலிட்டார்கள். கண்விழித்து நோக்கிய இயேசுநாதர் 'ஏன் பயப்படுகிறீர்கள்,' என்று காற்றையும் கடலையும் அதட்டினர். எங்கும் அமைதி குடிகொண்டது. உடனே சீடர்கள், காற்றையும் கடலையும் அதட்டிப் பணிகொள்ளும் ஆற்றல் தமது தலைவராகிய இயேசுநாதருக்கு இருப்பதுகண்டு ஆச்சரியமும் அன்பும் கொண்டு இவரே காற்றையும் கடலையும் ஆளும் கடவுள் என்று நம்பினர்.

தலீத்தாகூமி

மறுநாள் இயேசுநாதர், மீண்டும் முதல்நாள் சொற்பொழிவு செய்த ஏரிக்கரைக்கே வந்தார். அங்கு ஏராளமான மக்கள் அவரது வருகைக்காகக் காத்திருந்தனர். அதுபோது அக்கூட்டத்

தில் இருந்த ஜெபாலயத்தலைவன் ஜாயிர் என்பவன் தன் பன்னிரண்டு வயதுள்ள ஒரேமகள் இறக்கும் நிலையிலிருப்பதைச் சொல்லிக் காப்பாற்றுமாறு கெஞ்சினன். இயேசுநாதரும் அப்பெண்ணைக் காப்பாற்றும் பொருட்டு அவனைப்பின்பற்றிச் சென்றார். அங்ஙனம் பெண்ணின் தந்தையும், இயேசுநாதரும் சென்று கொண்டிருக்கும்போதே வீட்டிலிருந்த ஓர் ஆள் ஓடிவந்து பெண் இறந்து விட்டாள் என்று கூறினன். எனினும் இயேசுநாதர் வீடுசென்று இறந்துகிடந்த சிறுமியைத் ' தலீத்தாகூமி ' என்று அழைத்தார். உடனே அப்பெண் உயிரோடு எழுந்து அமர்ந்தாள். 'தலீத்தாகூமி' என்றால் 'சிறுமங்கையே எழுந்திரு' என்பதாகும். அவ்வியப்பைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர்.

சுயநலத்திற்காக வாழலாகாது

இயேசுநாதர் தாம் பற்பல இடங்களில் போதகம் செய்வதுபோலவே சீடர்களையும் போதகம் செய்ய வேறு வேறிடங்களுக்கு அனுப்பிவைப்பார். ஒரு சமயம் அவரது சீடர்கள் ஊரூராகச் சென்று சொற்பொழிவு செய்துவிட்டு ஒரு ஓய்வு நாளிலே வந்து கூடியிருந்தனர். அவர்களது களைப்படைந்த நிலையை உணர்ந்த இயேசுநாதர் வனாந்தரமான ஓரிடம் சென்று இளைப்பாறுங்கள் என்றார். உடனே அனைவரும் கப்பர் நாவூமுக்கு அருகிலுள்ள பெத்செய்தாவுக்குப் படகின் மூலம் சென்று அங்குள்ள

ஒரு குன்றின்மீது ஓய்வுக்காகச் சென்றனர் இங்ஙனம் இயேசுநாதர் தம் சீடர்களோடு பெத் செய்தா சென்றமை அறிந்த மக்கள் பெருந் திரளா கச்சென்று அங்கு கூடிவிட்டனர். மக்கள் கூட்டம் அரைக்கணமும் இயேசுவையும் அவரது சீடர்களை யும் விட்டுப்பிரியவில்லை. சீடர்கள் தமக்குச் சிறிதும் ஓய்வு கொடுக்காமல் மக்கள் சூழ்ந்திருப்பதைச் சற்று வெறுத்தனர். இயேசுநாதரோ நாம் சுயநலத்திற் காக வாழலாகாது என்று சீடர்களுக்கு அறிவுரை கூறினர்.

பிட்டுவழங்குங்கள்

அன்று தம்மை வந்து சூழ்ந்த கூட்டத்திற்குப் போதகம் செய்வதும் நோய் நீக்கம் செய்வதுமாக இயேசுநாதர் தொண்டு புரிந்தார். மாலைப்பொழுதும் வந்துவிட்டது. மக்கள் கூட்டம் பெருகிக் கொண் டிருந்ததே ஒழிய குறையவில்லை. சீடர்களில் சிலர் இயேசுநாதரிடம் சென்று "ஆண்டவரே! இடமோ வனமாக இருக்கின்றது. நேரமோ மாலையாகி விட் டது. இத்துணை மக்களுக்கும் உண்ண உணவும் இருக்க இடமும் வேண்டும். ஆகையால் அருள் கூர்ந்து அனைவரையும் திருப்பி அனுப்பிவிடுங்கள்" என்றார்கள். அதுகேட்ட இயேசுநாதர் "அவர்கள் போகவேண்டிய அவசியமில்லை. நீங்களே அவர்க ளுக்குச் சாப்பிடக்கொடுங்கள்" என்றார். அதுகேட்ட சீடரில் ஒருவர் "ஐயா! நாங்கள் இத்துணை மக்களுக்

கும் உண்ணக் கொடுத்தல் எங்ஙனம்? நாங்கள் சென்று இருநூறு பணத்துக்கு அப்பம் வாங்கிக் கொடுக்கவா?" என்று வினவினர். அதற்கு இயேசு நாதர் 'உங்கள் வசத்தில் எத்தனை அப்பங்கள் இருக் கின்றன போய்ப் பாருங்கள்' என்றார். 'ஐந்து அப்பங் களும் இரண்டு மச்சங்களும் இருக்கின்றன" என்று பதில் கூறினர்கள். "அவற்றை என்னிடம் கொண்டு வாருங்கள்" என்று கூறினர். சீடர்களும் அவற்றை இயேசுநாதர் முன் கொண்டுவந்து வைத்தனர். இயேசுநாதர் அவற்றைக் கையிலெடுத்து இறைவனை வணங்கி 'இனி மக்களுக்குப் பிட்டுவழங்குங்கள்' என்று கூறினர். மக்களும் பசும்புல்லின்மீது நூறு நூறகப் பந்திவரிசையமர்ந்தார்கள். அப்போஸ்தலர் கள் அப்பங்களைப் பிட்டுப் பந்தி பரிமாறினர்கள். மக்கள் யாவரும் வயிறுர உண்டு மகிழ்ந்ததை இயேசு நாதர் கண்டு மனம் மகிழ்ந்தார். இறுதியில் இயேசு நாதர் தம் சீடர்களை நோக்கி "மீதமுள்ள துண்டு களை வீண்செய்தல் ஆகாது சேகரியுங்கள்" என்று கூறினர். அங்ஙனம் சேகரித்த துண்டுகள் பன்னி ரண்டு கூடைகள் நிறைந்தன. இவ்வதிசயத்தைக் கண்ணுற்ற மக்கள் "இவரே மெசையா, இவரே ஆண்டவன்" என்று போற்றிப் புகழ்ந்தனர்.

இயேசுநாதர் தமது சீடர்களை நோக்கி நீங்கள் உடனே படகின்மூலம் திரும்புங்கள் நான் இவர்களை அனுப்பிவிட்டு வருகிறேன் என்றார். பிரியமனமற்ற சீடர்கள் கட்டளைக்கு அஞ்சிப் படகிலேறிப் புறப்

பட்டனர். மக்கள் ஆரவாரத்தோடு, 'ஓ ஆண்டவரே! இனித்தாங்கள்தான் இந்நாட்டுக்கு மன்னராக இருத்தல் வேண்டும். அதற்காக நாங்கள் எங்கள் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம்' என்று கூறினார்கள். அதுகேட்ட இயேசு தமக்குப் பூலோக வேந்தனயிருக்க மனமில்லையென்றும், அமைதியாக வீடுதிரும்பித் தாம் கற்பித்தவைகளைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்றும் கூறினர். உடனே மக்கள் அனைவரும் இயேசுநாதரின் கட்டளைப்படி வீடு திரும்பினர். இயேசுநாதர் மட்டும் அங்கேயே நின்றுவிட்டார். சற்று ஓய்வு எடுத்துக்கொண்டு இறைவனைச் சிந்தித்து வழிபாடுசெய்தார்.

கடலின்மீது நடந்தார்

இயேசுநாதரால் அனுப்பப்பட்ட சீடர்கள் அனைவரும் இயேசுவைப் பிரியமனமின்றிருந்தும் கட்டளைக்கு இணங்கிப் படகில் புறப்பட்டார்கள் என்பதை அறிந்தோம். அவர்கள் அவ்வாறு ஏரியில் போய்க்கொண்டிருக்கும்போது மீண்டும் கடும் புயலும் கடல் கொந்தளிப்புந் தோன்றி அவர்களைமிகவும் அச்சத்திற்குள்ளாக்கியது. அனைவரும் இறந்து போவோம் என்று பயந்து கடுங்கூச்சலிட்டார்கள். அதுபோது கொந்தளிக்கும் கடலின்மேல் யாரோ நடந்து தம் அருகில் வருவதைக் கண்டார்கள். அவர்கள் முதலில் அவரைக்கண்டு அஞ்சினலும் இறுதியில் தமது தலைவரே என்பதை உணர்ந்து அச்சம்

நீங்கினர். அப்போது இராயப்பர் 'தலைவரே! தாங்கள் தண்ணீரின்மீது நடக்கும்படி எனக்குக் கட்டளையிடும்' என்றார். உடனே 'வா' என்றார் இயேசுநாதர். இராயப்பர் கடலின்மீது நடந்தார். கடல் அவர் பாதத்திற்கு கடினமாகவே இருந்தது. இயேசுநாதர் இராயப்பரையும் படகிலேற்றிக்கொண்டுத் தாமும் படகிலேறினர். அவர்கள் எங்கு சேரவேண்டுமோ அவ்விடத்திற்கு உடனே படகுவந்து சேர்ந்தது. அவ்வதிசயத்தைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர்.

போய்ச் சொல்லுங்கள்

இயேசுநாதருக்கு நாளடைவில் அளவுக்கு மிஞ்சிய செல்வாக்கு வளருவதையும், எல்லோரும் அவரது கட்டளைகளைச் சிரமேற்கொள்வதையும் கண்டு அரசனாகிய எரோதனும் பரிசேயர், வேதபாரகர் முதலிய உயர்குலத்தோரும் அவரை அழித்துவிடக் கருதினர்கள். சிலர் இயேசுவே! தங்களைக் கொன்றுவிட எரோதனும் மற்றும் பலரும் எண்ணியிருக்கிறார்கள். ஆகையால் தாங்கள் இவ்விடத்தை விட்டுப் போய்விடுங்கள் என்று கூறினர். அதுகேட்ட இயேசு 'இதோ இன்னும் நான் நோயாளிகளைக் குணமாக்குகின்றேன். மூன்றாம் நாளில் சமாதியடைகின்றேன் என்று அந்த நரியிடம் போய்ச் சொல்லுங்கள். என் உயிரை என்னிடமிருந்து எவனும் எடுக்கிறதில்லை. ஆனால் அதை நானே கொடுக்

கின்றேன். என்னுயிரைக் கொடுக்கவும், மீண்டும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு வல்லமையுண்டு என்று கூறினர்.

நாய்க்குட்டி

இயேசுநாதர் ஒருசமயம் பாலஸ்தீன நாட்டை விட்டு வெளிநாடாகிய பெனீசியா சென்று மறைந்திருக்க விரும்பியும் முடியாமற்போய்விட்டது. அங்கு இருந்த பெண்ணொருத்தி தன் மகளைத் தீய ஆவிபற்றியிருக்கிறதென்றும், அதை விலக்கித் தம்மகளுக்கு நலம் அளிக்க வேண்டுமென்றும் வேண்டினுள். இயேசுநாதர் முதலில் அவளது வேண்டுதலுக்குச் செவிசாய்க்கவில்லை. இறுதியாக 'இஸ்ராயேல்' மக்களுக்காக நான் வந்தேனேயன்றி வேறில்லை 'பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்களுக்குப் போடுவது நல்லதல்லவே' என்று கூறினர். இதன் பொருள் யூதர்களுக்குச் செய்யும் நன்மையைப் பிறருக்குச் செய்தல் தகாதென்பது. அதுகேட்ட அம்மங்கை 'ஆண்டவரே! நாய்க்குட்டிகளும் பிள்ளைகளின் மேசையிலிருந்து விழுகிற அப்பத்துண்டுகளைத் தின்கின்றனவே? மேசையிலிருந்து விழும் அப்பத்துண்டுகளுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் நாய்க்குட்டிகளுக்கு அவற்றைப் போடுவதும் சரிதானே! அதனல் பிள்ளைகளுக்கு ஒன்றும் தீங்கு நேராதே! நான் ஓர் ஏழை நாய்க்குட்டியாயினும் என்மேல் இரக்கம் வைத்துச் சில துண்டுகளை எறிந்

தால் போதுமானது' என்று சொன்னாள். இத்திற மையான உரையைக் கூறிய அப்பெண்ணின்மீது இரக்கம் கொண்டு இயேசுநாதர் அவளது மகளைக் குணப்படுத்தினர்.

13. எடுத்துக் காட்டுக் கதைகள்

தீய மகன் திருந்தியது

இயேசுநாதர் தமது சொற்பொழிவில் மிகப்பல எடுத்துக் காட்டுக் கதைகள் கூறியுள்ளார். அவற்றுள் மிகச்சிறந்தவற்றில் நான்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன:—

ஒரு செல்வனுக்கு இரண்டு மக்கள் இருந்தனர்: ஒருநாள் இளையவன் தனது தந்தையை நோக்கித் தனக்குரிய பங்கைப் பிரித்துக் கொடுக்கும்படிக் கேட்டான். தந்தை தனது செல்வத்தைப் பிரித்து அவனுடைய பங்கைக் கொடுத்துவிட்டார். இளையவன் தன் பங்குக்கு வந்த செல்வங்களையெல்லாம் திரட்டிக்கொண்டு வேற்றூர் சென்று ஊதாரித்தனமாகச் செலவழித்து வறியவனாகிவிட்டான். அச்சமயம் அந்நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அவன் வேறு வழியின்றி ஓர் குடியானவனிடம் பன்றி மேய்க்கும் வேலைக்கமர்ந்தான். பன்றிகளுக்குப் போடும் தவிடு முதலிய உணவுப்பொருள்கூட அவனுக்குக் கிடைப்பது அரிதாகிவிட்டது. அப்போது அவன் தன் தவற்றை உணர்ந்து என் தந்தையின் வீட்டில் எத்

தனையோ வேலையாட்கள் வயிறார நல்லுணவு உண்கின்றனர். ஆனால் நானோ! இங்கு பட்டினியால் அழிகிறேன். நான் என் தந்தையிடம் சென்று என் தவறுகளைக்கூறி அவர் வேலையாட்களுள் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ளக்கேட்கிறேன். அவரது மகன் என்று கூறிக் கொள்வதற் கேற்ற தகுதி கூட என்னிடம் கிடையாது என்று எண்ணினான். தந்தை இருக்குமிடம் வந்தான். அவன் வருகையை வெகு தூரத்திலிருக்கும்போதே அறிந்த அவனது தந்தை அவன்மீது இரக்கம்கொண்டு ஓடிவந்து மார்புறத் தழுவிக்கொண்டார். 'அப்பா நான் மிகவும் தவறு செய்து விட்டேன் தங்கள் மகன் என்று கூறிக் கொள்ளவும் தகுதியற்றவனாகி விட்டேன்' என்று கூறினான்.

உடனே தகப்பன் வேலையாட்களை அழைத்து நல்ல உடையும் ஆபரணங்களும் கொண்டுவந்து அணிவியுங்கள். நல்ல விருந்து சமையுங்கள். எல்லோரும் உண்டு மகிழ்ச்சியாயிருப்போம். ஏனெனில் மாண்டுபோன என் மகன் மீண்டும் உயிருடன் வந்திருக்கிறான். காணமற்போன என்மகன் மீண்டும் கிடைத்துவிட்டான் என்று கூறினார். எல்லோரும் மகிழ்ச்சியாக விருந்துண்டனர். அதுசமயம் மூத்தவன் வயலிலிருந்தான் அவன் திரும்பி வீட்டருகே வந்ததும் விருந்து ஆடல், பாடல் முதலிய கொண்டாட்டத்தைக் கண்டான். அருகேயிருந்த வேலையாளை அழைத்து அம்மகிழ்ச்சிக்குரிய காரணத்தை

வினவினன். வேலையாள் உன் தம்பி திரும்பிவந்தது பற்றி இக்கொண்டாட்டம் நடைபெறுகிறது என்று கூறினன். இதை அறிந்த மூத்தவன் கோபங் கொண்டு வீட்டினுள் நுழைய விரும்பாமல் வெளியி லேயே நின்றான். அதுதெரிந்த அவனது தந்தை அவனை உள்ளே வரும்படி அழைத்தார். அதற்கு அவன், தந்தையே! இத்தனை வருடகாலம் உங்களுக்கு நான் பணிந்து நடந்து வந்திருக்கிறேன்! உங்கள் கட்டளையை ஒருபோதும் மீறியதில்லை. அப்படியிருந்தும் நீர்! நான், என் நண்பர்களுடன் கலந்து மகிழ்ச்சியுடன் இருக்கச் சிறிதளவு பொருளேனும் கொடுத்ததில்லை; ஆனல் பெருஞ் செலவு செய்து வெறுங்கையனய் திரும்பிவந்துள்ள உம் இளைய மகனுக்கு இத்துணைப்பெருவிருந்து செய்கின்றீரே! இது முறையாகுமா? என்று கேட்டான்.

அது கேட்ட அத்தந்தை, மகனே! நீ! எப்போதும் என்னுடனேயே இருக்கிறாய்! அதனல் என்னுடையதெல்லாம் உன்னுடையதே. ஆனல் உன் தம்பியோ இறந்துபோய் மீண்டும் உயிர் பெற்று எழுந்திருக்கிறான். காணமற்போன அவன் மீண்டும் கிடைத்திருக்கிறான். எனவே அவன் வருகைக்கு மகிழ்ந்து விருந்து செய்வது முறையே ஆகும் என்று கூறினர்.

நல்ல சமாரித்தன்

ஒருவன் செருசலேத்திலிருந்து ஜெரிக்கோவுக்குச் சென்றுகொண்டிருக்கையில் திருடர்கள்கையில் அகப்பட்டுக்கொண்டான். அவர்கள் அவனது உடைமைகளை யெல்லாம் கவர்ந்து கொண்டதோடு அவனைப் படுகாயப்படுத்திக் குற்றுயிராகப் போட்டு விட்டுச் சென்றனர். அவ்வழியாக ஒரு துறவி சென்றார். அதுபோலவே அவ்வழியாக வந்த ஓர் கோவில் குருக்களாகிய லெவித்தன் அவனை நெருங்கிப் பார்த்துவிட்டு அடுத்த பக்கம் ஒதுங்கிப்போய்விட்டான். ஆனல் அவ்வழியாகப் பிரயாணம் செய்து வந்த தாழ்குல மகனுகிய சமாரித்தன் அவனைக் கண்டவுடன் அவன்மீது இரக்கம் கொண்டு அவனருகே சென்று அவனது காயங்களுக்கு மருந்திட்டுக் கட்டித் தன் வாகனத்தின்மீது அவனை ஏற்றி ஓர் சத்திரத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தான். மறு நாள் அவன் அவ்விடத்தை விட்டு நீங்கும் சமயம் இரண்டு ரூபாய் எடுத்து சத்திரக்காரனிடம் கொடுத்து இவனை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள், இதற்கு மேலும் இவனுக்காகச் செலவழிக்க நேர்ந்தால் நான் திரும்பி வரும்போது கொடுத்து விடுகிறேன் என்று கூறிச் சென்ருன். இவர்களில் எவன் திருடனிடம் அகப்பட்ட வழிப்போக்கனுக்கு உண்மையான சுற்றத்தவன் கூறுங்கள்.

குடியானவன்

ஒரு குடியானவன் விதைக்கச் சென்றான். அவன் விதைத்த விதைகளில் சில பாதைகளிலே விழுந்துவிட்டன. அவற்றைப் பறவைகள் பொருக்கி விட்டன. சில பாறையில் விழுந்தன. அவை முளைத்தும் வேர்விடப் போதுமான மண்ணில்லாமையால் கருகிவிட்டன. சில முட்செடிகளின் இடையில் விழுந்தன. முட்செடிகள் அவைகளை வளரவிடாமல் அழித்துவிட்டன. மற்றவை நல்ல நிலத்தில் விழுந்து வளர்ந்து முப்பது மடங்கும், அறுபது மடங்கும், நூறு மடங்குமாகப் பயன் தந்தன. அதுபோலவே நல்லுரைகள் கேட்போரில் சிலரிடத்தில் சிறந்த பயனையும், சிலரிடத்தில் ஒரு பயனையும் தராது வீணாகின்றன.

தாழ்மை

ஒரு கலியாணத்திற்கு உன்னை அழைத்தால் அவன் நீ உயர்ந்த ஆசனத்தில் அமரலாகாது. உன்னிலும் பெருமையுடைய மனிதர் அங்கு இருக்கலாம். உன்னையும் அவனையும் அழைத்த மனிதன் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருக்கும் உன்னிடம் வந்து இருவருக்கு இடம்கொடு என்றுசொன்னால் வெட்கத்துடன் தாழ்ந்த இடத்திற்குச் சென்று அமர வேண்டிவரும். ஆனால் நீ! தாழ்ந்த இடத்தில் உட்கார்ந்திருந்தால் உன்னை அழைத்தவன் வந்து

நண்பனே! நீ மேலே வந்து உட்கார் என்று சொல்லும்படி நேரும். அப்பொழுது விருந்துண்ண வந்தவர்கள் மதிப்புக்கு நீ! பாத்திரனுவாய்! எவன் தன்னை உயர்த்திக்கொள்கிருனே! அவன் தாழ்த் தப்படுகிருன். எவன் தாழ்த்திக்கொள்கிருனே! அவன் உயர்த்தப்படுகிருன், என்று கூறினுர்.

நல்ல ஆயன்

வாசல் வழியாக ஆட்டுக்கிடைக்குள் நுழையாமல் வேறு வழியாய் நுழைபவன் கள்ளனும் கொலைகாரனுமா யிருக்கிருன். வாசல் வழியாய் பிரவேசிக்கிறவனே ஆடுகளின் ஆயனுயிருக்கிருன். வாயிலைக் காக்கிறவன் அவனுக்குத் திறந்து விடுகிருன். ஆடுகளும் அவனுடைய குரல் சத்தத்திற்குச் செவிகொடுக்கின்றன. அவனும் தன் சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு வெளியே ஓட்டிக்கொண்டு போகிருன். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்ட பிறகு அவைகளுக்கு முன் நடந்துபோக ஆடுகள் குரலை அறிந்திருக்கிறதினுல் அவன் பிறகே செல்லுகின்றன. ஆனுல் அன்னியருடைய குரலை ஆடுகள் அறியாதபடியினுலே அவைகள் அன்னியன் பிறகே செல்லாமல் அவனைவிட்டு ஓடிப்போம். நானே நல்ல ஆயன். நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காகத் தன் உயிரையும் கொடுக்கிருன். மேய்ப்பவனுக இல்லாத கூலியாளோ! ஆடுகள்

தனக்குச் சொந்தமல்லாமையினுல், ஓநாய் வருவதைக் கண்டும் ஆடுகளை விட்டுவிட்டு தப்பி ஓடிப் போகிறுன். அப்பொழுது ஓநாய் ஆடுகளின்மீது பாய்ந்து கொன்று குவிக்கும். கூலியாள் ஆடு தனக்குச் சொந்தமில்லாமையை அறிந்து அக்கரைப் படாமல் ஓடிப்போகிறுன்.

நூறு ஆடுகளையுடைய ஒருவன் அவைகளில் ஒன்று காணுமற்போனுல் மற்றைத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனத்தில் விட்டுவிட்டு காணுமற்போன ஆட்டைக்காணுமளவும் தேடித் திரிகிறுன். அதைக் கண்டு பிடித்த பின் தன் தோளின்மீது போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்து தன் நண்பர்களையும், அயலகத்தாரையும் அழைத்து காணுமற்போன ஆட்டைக் கண்டு பிடித்தேன். என்னேடு நீங்களும் மகிழ்ச்சியடையுங்கள் என்று கூறுவானல்லவா? அதுபோலவே நல்ல மனிதராக இருக்கும் நூறு மனிதரைக் காட்டிலும் தீயவன் ஒருவன் திருந்தி நல்லவனுவதே இறைவனுக்கு விருப்பமான செயலாகும்.

14. இயேசு சபை

திருச்சபை

இயேசுநாதர் சிலுவையில் இறக்கப் பத்து மாதங்கள் இருக்கும்பொழுது, தமக்குப் பின்னும் உலகிற்கு அருளுரை வழங்கும் ஒரு திருச்சபையை

ஏற்படுத்திவிடக் கருதினர். அதுபோது அப்போஸ் தலர்கள் இயேசுவோடு கூடி மூன்று ஆண்டுகள் ஆயின. அவரிடம்கண்ட புதுமையால் அவர்கள் இயேசுவைத் தேவகுமாரன் என்று உறுதியாக நம்பினர்கள்.

ஒருநாள் பாலஸ்தீனத்தின் வடபகுதியில் எர்மன் மலையடிவாரத்திலுள்ள பிலிப்பி என்ற நகரில் தங்கியிருந்தபோது இராயப்பரை நோக்கி நீ இரா யாயிருக்கிருய் (கற்பாறையாய்) இந்த இராயின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்; மோட்சத்தின் திறவுகோல்களைக் கொடுப்பேன். பூவுலகில் நீ எதைக் கட்டுவாயோ! அது பரலோகத்திலும் கட்டப் படும்' என்று கூறித் திருச்சபையின் தலைமையை அவருக்கு வழங்கினர். கட்டளையிடவும் சட்டங்கள் விதிக்கவுமான எல்லா அதிகாரங்களும் இராயப் பருக்கு வழங்கப் பட்டன. இக் காலத்தில்தான் இயேசுநாதர் தமது கொள்கையில் பற்றுள்ள அன்பரில் எழுபத்திரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து இருவர் இருவராக நாடெங்கும் போதனைகள் செய்ய அனுப்பிவைத்தார்.

முன்னறிவிப்பு

அதன்பின் இயேசுநாதர் துன்பத்தாலும் மரணத்தாலுமே உலக இரட்சகம் நடக்குமென்றும் சிலதினங்களில் தேவகுமாரன் மனிதர்களிடம்

ஒப்படைக்கப் படுவானென்றும், அப்போது மக்கள் அவரைக் கொலை செய்வார்கள் என்றும், (தம்மையே குறித்துக் கூறினர்) அதன் பின் மூன்றும் நாளில் உயிர்த்தெழுவாரென்றும், கூறினர். அதுகேட்டு அவர்கள் வருந்தினர்கள். இராயப்பர் ஆ! ஆண்டவரே தங்களுக்கு அத்தகைய தீங்கு ஒன்றும் வரலாகாது என்று கூறினர். அது கேட்டு அவரை மிகவும் கண்டித்தார். 'யாதொருவன் என்பின்னே வர மனதாயிருந்தால் தன்னைத்தானே தியாகம் செய்து தன் (மரணத்தை) சிலுவையை அனுதினமும் சுமந்து கொண்டு என் பின்னே வரக் கடவன்' என்று திட்டமாக மொழிந்தார்.

இயேசு காதருக்கு எப்போதும் மலை என்றால் பிரியமானதாக இருந்தது. ஒருசமயம் அவர் இராயப்பர், யாகப்பர், அருளப்பர் என்ற மூவருடனும் தபோர் என்ற மலைமீது ஏறிச்சென்றார். அவர்கள் உச்சிக்குச் சென்றபோது இருட்டி விட்டது. அங்கு சென்றவுடன் இயேசு ஜெபத்தியானத்தில் அமர்ந்தார். மற்றையோர்கள் உறங்கத் தொடங்கினர். அதுபோது அங்கு பேரொளி உண்டாயிற்று. அதனை அனைவரும் எழுந்து பார்த்தனர். அங்கு மோயீசன், எலியாசு என்ற இரண்டு தீர்க்க தரிசிகள் தோன்றி இயேசுவுக்கு வரும் துன்பப்பாடுகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அதுகண்ட சீடர்கள் சற்று அச்சமாக இருந்ததோடு தங்கள்

தலைவர் தேவரே என்று கருதி மிகவும் நேசித்தார்கள். சற்று நேரத்திற்குப்பின் தீர்க்க தரிசிகள் மறைந்தனர். அதுபோது இயேசுநாதர் தம் சீடர்களை நோக்கி நீங்கள் செருசலேமில் நடக்கவேண்டுவன நடப்பதற்குள் இக்காட்சியைப்பற்றி யாரிடமும் கூறலாகாதெனக் கட்டளையிட்டார்.

குழந்தைகளை வரவிடுங்கள்

ஒருசமயம் இயேசுநாதரின் சீடர்கள் பன்னிருவரில் எவர் மேலானவர் என்ற வழக்குத் தொடங்கி முதிர்ந்து விட்டது. அதை இயேசுநாதர் அறிந்தார். அவர் ஒருசமயம் அமர்ந்திருந்தபோது பல சிறு பிள்ளைகள் அவரைக் காண வந்தனர். சீடர்களோ இயேசுநாதர் களைத்திருக்கிறார். அவரருகில் செல்லாதேயுங்கள் என்று கண்டித்து விரட்டினர். அது கண்ட இயேசு குழந்தைகளை என்னிடத்திலே வரவிடுங்கள் என்று கூறினர். அங்ஙனம் வந்த சிறுவனில் ஒருவனை மார்போடு தழுவிக்கொண்டு தம் சீடர்களை நோக்கி நீங்கள் மனம் திரும்பிப் பாலர்களைப் போல் ஆகாவிட்டால் வீடுபேறு உங்களுக்குக் கிடைக்காதென்று மெய்யாகவே சொல்லுகிறேன். இந்த பாலகனைப்போல் எவன் தன்னைத் தாழ்த்துகிறானே! அவனே உண்மையில் பெரியோனுவான். இச்சிறுவரில் ஒருவரையும் புறக்கணிக்காதபடி எச்சரிக்கையாயிருங்கள் என்று கூறினர். அதுகேட்ட சீடர்கள் தம்கர்வத்தை விட்டு மனந்திருந்தினர்.

சிறுவர்களைக் காண்பதில் இயேசுவுக்குப் பிரியம் அதிகம். அவரது சீடர்கள் பலமுறை சிறுவர்களைப் புறக்கணிக்கும் போதும், குழந்தைகளோடு வரும் தாய்மார்களைப் புறக்கணிக்கும்போதும் அவர்களைத் தடுத்து குழந்தைகளைத் தம்பால் வரவழைத்து ஆசி வழங்குவது அவரது சிறந்த வழக்கமாக இருந்து வந்தது.

ஏழுஎழுபது

சிற்சில சமயங்களில் இயேசுவின் சீடர்கள் தம் கொள்கைக்கு இணங்காதவர்களைப் பழித்தனர். மேலும் அவர்களை அடக்கவும் முற்பட்டனர். அது கண்ட இயேசுநாதர் மனுமகன் (தான்) உயிர்களை அழிப்பதற்காக வரவில்லை. காத்து இரட்சிக்கும் பொருட்டு வந்தார். ஆகையால் பிறரைப் பழிப்பதும் அடக்குவதும் தவறு என்று கூறித் தடுத்தார். ஒருசமயம் இராயப்பர் சுவாமி என் சகோதரன் எனக்கு விரோதமாக பலமுறை குற்றம் செய்துள்ளான். நான் பலதடவை மன்னித்திருக்கிறேன். ஏழு தடவை மன்னிப்பது போதுமல்லவா? என்று கேட்டார். அதுகேட்ட இயேசு ஏழுதடவை மட்டுமல்ல! எழுபது எழுபது தடவை மட்டும் மன்னிக்க வேண்டுமென்று உனக்குச் சொல்லுகிறேன் என்று கூறினர்.

ஊசியின் காதில் ஒட்டகம்

ஒருமுறை ஒரு பணக்கார வாலிபன் வந்து குருவே! நான் நன்மை அடையும் பொருட்டு என்ன செய்யவேண்டும் என்று வினவினன். அதுகேட்ட இயேசுநாதர் அன்பனே 'நீ உன்னிடத்திலிருக்கின்ற எல்லாப் பொருள்களையும் விற்று ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று கூறினர். அது கேட்ட வாலிபன் சற்று திகைப்பும் ஐயுறவும் கொண்டான். அதுபோது சீடர்களை நோக்கி 'செல்வத்தில் பற்று வைத்திருப்பவன் உண்மையாகவே வீடுபேறடையமாட்டான்' என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஒரு செல்வன் வீடுபேறடைவதைக் காட்டிலும் ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிதாயிருக்கும் என்று கூறினர்.

இயேசுநாதரின் சீடர்கள் விரைவில் தமது தலைவர் நாட்டுக்கு அரசராவார்; அதில் தாமும் தக்க பதவி வகிக்கலாம் என்று கருதியிருந்தனர். ஆனல் இயேசுவோ மண்ணுலக ஆட்சியைத் தாம் விரும்பவில்லை என்பதைப் பலமுறை எடுத்துக் கூறினர். சீடர்களில் இராயப்பர், யாகப்பர், அருளப்பர் என்ற மூவரும் இயேசுவை என்னிலையிலும் மிகவும் நேசித்தனர். மற்றையோருக்கு இயேசு அரசை விரும்பவில்லை என்பது சற்று வருத்தந்தான். யூதாஸ் இஸ்காரியோத்துக்கோ அது ஒரு பெருங் குற்றம் போலத் தென்பட்டது. பண ஆசை கொண்ட இஸ்

காரியோத்து இதனாலேயே இயேசுவை எதிரிகளுக்குக் காட்டிக் கொடுத்தான். அக்காலத்தில் பாலஸ்தீன நாட்டில் யூதர்கள் நிலை மிகவும் தாழ்மையாகவே இருந்தது. பரிசேயர், சதுசேயர், வேத பாரகர் முதலியோர் யூதர்களை இகழ்ந்து பரிகசித்து விலக்குவது வழக்கம். இதுகண்டு இயேசு மிகவும் வருந்தினர். பரிகாசம் செய்தல், காரி உமிழ்தல், காட்டிக் கொடுத்தல் ஆகிய மூன்றும் கடுங்குற்றங்கள். அவைகளில் காட்டிக்கொடுத்தல் எல்லாவற்றிலும் மிகக்கொடிய குற்றமாகும் என்றும் இயேசு கூறினர்.

கேளுங்கள் தேடுங்கள் தட்டுங்கள்

இறைவனை நாம் வணங்கும்போது வலிமை மிகுந்தவரே என்றும் மேலானவரே என்றும் வணங்குவதைவிடத் தந்தையே என்று அழைப்பது இனிமையானது; பயனுடையது; அன்புடையது. நீங்கள் எப்போதும் நம்பிக்கையுடையவராக இருங்கள் என்று கூறினர். ஒருமனிதனிடம் " நண்பனே ! எனக்கு மூன்று அப்பங்களைக் கடனாகக் கொடு; ஏனென்றால் என் நண்பன் ஊரிலிருந்து என் வீட்டுக்கு வந்திருக்கிறான் அவனுக்குச் சாப்பிடக் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை என்று சொல்ல மற்றவன் உள்ளே இருந்தபடியே மறு உத்தரமாக நீ என்னை தொந்தரவு செய்யாதே' இப்பொழுது கதவு அடைத்தாயிற்று என் மனைவி மக்கள் படுத்தி

ருக்கிறார்கள், நான் எழுந்து உனக்குக் கொடுப்பதற்கு முடியாது என்றான். ஆயினும் அவன் இடைவிடாது கதவைத் தட்டிக்கொண்டிருந்ததால் தனக்கு நண்பனைக இருப்பதன் காரணமாய் அவன் எழுந்து கொடாதிருந்தாலும் அலட்டலைப் பற்றியாவது எழுந்து தேவைக்கு அளவாக அப்பங்களைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் நீங்களும் நம்பிக்கையோடு கேளுங்கள். உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் திறக்கப்படும்' என்று கூறினர்.

15. எதிர்ப்புக்காரர்கள்

இயேசுநாதருக்கு நாடெங்கும் செல்வாக்கு பெருகிவளர்ந்து கொண்டிருந்தது. அதுகண்ட ஆட்சியாளர்கள் பெரிதும் அஞ்சினர். காரணம் இயற்கையாகவே அந்நிய ஆட்சியை வெறுக்கும் யூதர்கள் உரோமையர்களை எதிர்த்துப் போர்தொடங்கி விடுவார்களோ! என்று அஞ்சினர். பரிசேயர்கள், வேதபாரகர்கள், குருக்கள் முதலியோர் எளிய மக்களை ஏய்த்துப் பிழைக்கும் தம் பிழைப்பு இயேசுவால் நின்றுவிடுமோ! என்று அஞ்சினர். அதனுல் அவர்கள் இயேசுவை எவ்வாருவது கொன்றுவிட விரும்பினர்கள். இயேசுவைக் கொல்வதற்குமுன் மக்களிடையில் தப்பான கருத்தை நுழைத்தால்தான்

இயேசுவுக்கு உள்ள ஆதரவும் தமக்குள்ள எதிர்ப்பும் குறையுமென்றும் அவர்கள் கருதினார்கள். எனவே அதிகாரிகள் மக்களிடையே இயேசுநாதருக்கு எதிராகச் சொற்பொழிவு செய்து மக்கள் மனதைக் கலைத்துக் கலகம் செய்யத் தூண்டினர். இயேசு தன்னைத் தேவகுமாரன் என்று கூறி இறைவனை அவமதிக்கிறார். ஆயக்காரர் முதலியவர்களோடு கூடித் திரிகிறார். தன்னை 'மெசையா' என்று கூறிக்கொண்டு பகல் வேடம் போடுகிறார். இவரால் நாமெல்லாம் உரோமையர்களிடம் துன்பப்பட நேரிடும்; இவர் பசாசின் தலைவனைத் தனக்குத் துணையாகக் கொண்டு புதுமைகள் செய்கிறார்; என்றும் மற்றும் பலவகையாகவும் பொது மக்களிடையே பொய்வதந்திகளைப் பரப்பினான். பொதுமக்கள் இன்னது செய்வதென்று அறியாமல் திகைத்தனர். செல்வர்களும், அதிகாரிகளும், சமயத்தலைவர்களும் இயேசுவை வெறுப்பதைக் கண்டு, தாம் ஆதரவளித்தால் தமக்கு தொல்லை வந்து விடுமோ என்று கருதினர். இயேசுநாதரிடம் காணப்பட்ட உண்மையான செயல்களைத் தாம் மனமார விரும்பியும் அவரை நேசிக்கவோ அவருக்கு உணவளித்துத் தம்மனையில் தங்குமாறு செய்யவோ பொதுமக்கள் தைரியமற்றவர்களாக இருந்தனர். 'சனதெரிம்' என்ற சபை இயேசுவை ஆதரிப்பவரை எதிர்க்கத் தயாராக இருந்தது.

அச்சபை மரணதண்டனை ஒன்றைத்தவிர மற்ற எல்லா தண்டனைகளையும் வழங்குமளவு அதிகாரம் பெற்றதாயிருந்தது.

மார்த்தம்மை மரியம்மை

செருசலேம் பட்டினத்திற்குத் தென்கிழக்கில் ஒலிவேத்து என்றதொரு மலை உண்டு. அம்மலைக்கும் நகருக்கும் இடையே செத்ரோன் என்ற ஆறு ஓடுகிறது. ஒலிவேத்துக்குக் கீழ்பாகத்தில் பெத்தாணியா என்ற ஊர் உண்டு. அவ்வூருக்கும் செருசலேம் நகருக்கும் சுமார் ஒன்றரை மைல் தூரம்தானிருக்கும். அங்கு மார்த்தம்மை, மரியம்மை என்ற இரு சகோதரிகள் தம் சகோதரனாகிய லாசரோடு வாழ்ந்து வந்தனர். அவர்கள் இயேசுவின்பால் அளவிறந்த அன்புடையவர்கள். மார்த்தம்மாள் இயேசுவுக்கு உணவு சமைப்பது முதலிய உபசாரங்கள் செய்வதில் மிகவும் அக்கரை காட்டும் இயல்புள்ளவர். மரியாளோ அவரருகில் இனிய உரையாடுவதையே இன்பமாகக் கருதுபவள். இயேசுநாதர் தமது மனைக்கு வந்து தங்கப்போகிறார் என்பதை அறிந்து அவர்கள் பெரிதும் மகிழ்ந்தனர். இயேசுநாதர் பல சமயங்கள் ஒலிவ மலையிலிருந்து அவரது இல்லத்திற்குத் தம் சீடர்களோடு வருவதும், தனித்து வருவதும் விருந்துண்பதுமாக இருந்தனர். அக்காலத்தில் உத்தியோகஸ்த்தர்களும், பரிசேயர்களும் அவரை எப்படியாவது கண்டுபிடித்துக்

கொலை செய்து விடவேண்டுமென்று கருதித் தேடிக் கொண்டிருந்தனர். இயேசுநாதரை ஆதரிப்பது கடுங் குற்றமாகக் கருதப்பட்ட அச்சமயத்திலும் மார்த்தம்மாளும் மரியாளும் அவருக்கு விருந்து செய்வதைப் பெரும் பேருகக் கருதி வந்தனர்.

லாசர் எழுந்துவா

இங்ஙனமிருக்க ஒருநாள் இவ்விரு சகோதரிகளுக்கும் உடன்பிறந்தாயிருந்த 'லாசர்' உடல் நலமின்றி மரணத்தறுவாயிலிருந்தான். அதுசமயம் இயேசுநாதர் யோர்தான் நதிக்கு அப்பாலுள்ள பெரியா என்னும் ஊரில் இருந்து கொண்டிருந்தார். சகோதரிகள் தம் சகோதரனைப் பிழைப்பிக்க வர வேண்டுமென இயேசுநாதருக்கு ஆட்போக்கவில்லை. ஆனல் சதா இயேசுவின் வருகைக்காகக் காத்திருந்தனர். லாசர் மரணமடைந்தும் இயேசு வரவில்லை. சகோதரிகள் வருத்தத்தோடு லாசரை மயானக் கல்லறையில் வைத்துப் புதைத்துவிட்டு வீடு திரும்பினர். ஆனல் அம்மாதர் இயேசு வேறு பலருக்கு நன்மை செய்தவராயிருந்தும் நம் சகோதரனை மரணத்திலிருந்து காப்பாற்றவில்லையே என்று மனவருத்தம் கொள்ளவில்லை. ஆனல் இரண்டு நாள் கழித்து இயேசு பெத்தானியா வந்தார். அங்கு அவரைக் கல்லால் அடித்துக் கொல்ல யூதர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். ஆயினும் அவர் அதைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. மார்த்தா சகோதரி

களின் இல்லத்திற்குச் சென்றார். முதலில் லாசருக்காகக் கண்ணீர் சிந்தினார். இறுதியாக அவன் புதைக்கப்பட்ட இடத்தைக் கேட்டறிந்து கல்லறைப் பக்கம் சென்று லாசரே! எழுந்துவா என்றார். அவன் எழுந்து வந்தான். இவ்வதிசயத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

நாம் என்ன செய்வோம்

இயேசுநாதர் இத்தகைய புதுமைகள் செய்வதைக்கண்டு அக்கால மதத்தலைவர்கள் அஞ்சினர். 'நாம் என்ன செய்வோம்! இதோ இந்த மனிதன் அநேகம் புதுமைகளைச் செய்கிறானே! நாம் இவனை இப்படியே விட்டுக்கொண்டிருந்தால் எல்லோரும் இவன்பேரில் அன்புகொள்வார்களே! அப்போது உரோமையர்கள் நமது இடத்தையும் மக்களையும் அழித்து விடுவார்களே!' என்றார்கள். அப்போது பெரிய குருவாயிருந்த கைப்பாஸ் என்பவன் "உங்களுக்கு ஒன்றும் தெரியாது; மக்களெல்லாம் சேதமாகாமல் ஒருமனிதன் சாதல் நன்மையென்று தோன்றவில்லையா? என்று கூறினான். இதன் பொருள் இயேசு ஒருவரைக்கொன்று நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்பது. அதிலிருந்து எப்படியாவது இயேசுநாதரைக் கொலை செய்துவிட வேண்டுமென்று பொது மக்கள் முடிவு செய்தனர். அதன்பின் இயேசுநாதரும் யூதர்களுக்குள் வெளிப்

படவாழாமல் வனாந்திரப் பகுதிக்குப் பக்கமாகவுள்ள எபிரேம் என்னும் ஊருக்குச் சென்று சீடர்களோடு தங்கியிருந்தார்.

சக்கேயு

இறுதியாக இயேசுநாதர் பாஸ்கா பண்டிகை கொண்டாட்டத்திற்காக செருசலேம் நகருக்குப் போக முற்பட்டார். வெளியூரிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் பண்டிகை கொண்டாடும்பொருட்டு மிகுதியான மக்கள் செருசலேம் வந்தனர். மக்கள் கூட்டம் இயேசுவைச் சூழ்ந்து கொண்டது. இயேசுநாதர் எரிக்கோ நகரம் வரும்போது கூட்டம் மிகவும் பெரிதாகிவிட்டது. இயேசு கூட்டத்தோடு போய்க் கொண்டிருக்கும்போது அங்கிருந்த காட்டாத்தி மரத்தின்மீது சக்கேயு என்பவன் அமர்ந்திருந்தான் அவன் குட்டையாக இருந்தமையால் இயேசுவைக் காணமுடியாதென்றெண்ணி மரத்தின்மேல் இருந்தாவது காண ஆசைப்பட்டான். இயேசு அம்மரத்தடியில் வந்து நின்று, 'சக்கேயு இறங்கிவா ? இன்று உன்மனையில்தான் எனக்கு உணவு' என்றார். அது கேட்ட சக்கேயு மனம் மகிழ்ந்தான். பொது மக்களில் பலர் பாவியும் ஆயக்காரனுமாகிய சக்கேயுவின் வீட்டில் இயேசு உண்பது ஆச்சரியமே என்று கூறினர். அதன்பின்னர் இயேசு மக்கள் கூட்டத்தோடு பெத்தானியாவுக்குப் புறப்பட்டுப் போனார். அன்று வெள்ளிக்கிழமை பாஸ்காப் பண்டிகை நடக்க இன்

னும் ஆறு நாட்கள் இருந்தன. இயேசுநாதர் தம்மைச் சூழ்ந்துவரும் மக்களை முன்னர் பண்டிகைக்கு அனுப்பிவிட்டுத் தமது சீடர்களோடு ஒரு நண்பர் வீட்டில் தங்கினர்.

இயேசு எங்கேயிருக்கிருர்

செருசலேமில் பெருங் குழப்பம் நிலவியது. எப்படியும் இயேசுநாதர் பாஸ்காப் பண்டிகைக்கு வருவார். அதுசமயம் அவரைப் பிடித்து மரண தண்டனைக்குள்ளாக்க வேண்டுமென்பது அவர்களது விருப்பம். இயேசுவைச் சிறைப்படுத்தினல் பொது மக்கள் எதிர்ப்பார்களோ! என்ற அச்சமும் ஒருபுறம் இருந்து வந்தது. வேதபாரகரும், பரிசேயரும், சதுசேயரும் இயேசு இருக்கிற இடத்தை எவராவது அறிந்திருந்தால் அவரைப் பிடிப்பதற்கு உதவியாகத் தெரிவிக்கவேண்டுமெனக் கட்டளையிட்டிருந்தார்கள். இயேசு எங்கேயிருக்கிருர் என்ற விசாரணை எங்கும் நடைபெற்றது. அதுசமயம் எரிக்கா பட்டினத்தின் வழியாக செருசலேமுக்கு வந்த மக்கள் இயேசு பெத்தானியாவிலிருக்கிருர் என்ற செய்தியைக் கூறினர்கள். அதைக் கேள்விப் பட்டவுடன் ஏராளமான யூதர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு வருவதற்காகச் சென்ருர்கள். இங்ஙனம் சென்றவர்களில் பலர் இயேசுவுக்கு அன்பராகத் திரும்பினர்கள். அச்செய்தியைக்

கேட்ட வேதபாரகர்கள் இம் மனிதன் தனது நற் செய்கையால் நம்மை அழித்து விடுவானே! என மிகவும் அஞ்சினர்கள்.

நறுமண நெய்

சனிக்கிழமை காலை இயேசுநாதர் சீமோன் என்பவன் வீட்டில் போசனம் செய்தார். அங்கு மிகுந்த பணச்செலவில் விருந்துக்கு ஏற்பாடாகி யிருந்தது. தன்னை அதிகாரிகள் கொலை செய்வதற் குச் சதா தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தும் இயேசு சற்றும் மனச்சஞ்சலம் அடைய வில்லை. ஆனால் அன்றைய விருந்து சந்தோஷ ஆரவாரம் இன்றி ஓசைப் படாமல் அமைதியாக நடந்தது. அதுசமயம் மார்த்தம்மாள் தலைமையா யிருந்து பந்தி பரிமாறினாள். எப்பொழுதும்போல் அவள் முகத்தில் மகிழ்ச்சி குடிகொள்ளவில்லை சற்று சஞ்சலமாகவே இருந்தாள். விருந்து நடக் கும்போது மரியம்மாள் விலையேறப்பெற்ற கதிர் இலாமிச்சைத் தைலமுள்ள வெண்கற்சிமிழைத் திறந்து அவரது பாதத்தில் பூசித் தனது கூந்தலால் துடைத்தாள். அதன்பின் மீதமுள்ள தைலத்தை சிரசில் ஊற்றினாள். அத்தைலம் மிக்க நறுமண முள்ளதாக இருந்தது. இயேசுவின்மீது நற்கருத் தற்ற யூதாஸ் என்பவன் இதற்காக மரியம்மாளைக் கடிந்து கொண்டான். "இந்த நறுமண நெய்யை 300 காசுக்கு விற்று ஏழைகளுக்குக் கொடுக்கலாமே

ஏன் வீணாக்கினாய்" என்று கடிந்து கொண்டான் கள்ள மனப்பான்மையையுடைய யூதாஸ் அதிலிருந்துதான் ஓரளவு பணம் களவாடலாம் என்ற கருத்தால் இவ்வாறு கூறினான். அதுகண்ட இயேசுநாதர் இவள் என் சரீரத்தை அடக்கம் செய்வதற்குத் தைலம் பூச முந்திக்கொண்டாள் என்று கூறினார்.

ஊர்வலம்

சீமோன் வீட்டில் விருந்துண்ட மறுநாள் இயேசுநாதர் தமது பன்னிரு சீடர்களுடனும் மக்கள் கூட்டத்துடனும் பெத்தானியாவை விட்டுப் புறப்பட்டார். ஒலிவேத்து மலையிலுள்ள பெத்பாஜ் என்ற ஊரையடைந்ததும் தமது சீடர்களில் ஒருவரையனுப்பி ஒரு கழுதைக் குட்டியைக் கொண்டு வரும்படிச் செய்தார். அதன்மீது சில விரிப்புகள் போர்த்து தாம் அதில் அமர்ந்து நடத்தினார். மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு ஊர்வலமாகச் சென்றார்கள். சிறுவரும் பெரியவருமாகிய ஏழை மக்கள் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டார்கள். இவ்வூர்வலத்தின்போது சிலர் தங்கள் ஆடைகளை வழியில் விரித்தார்கள். சிலர் பசுந்தழைகளை ஒடித்து வழியில் பரப்பினார்கள். இவ்வாறு ஊர்வலம் ஒரு மலை வழியாகச் செல்லும்போது மற்றொரு பெருங் கூட்டமும் இத்துடன் வந்து கலந்துகொண்டது. அப்போது 'ஆண்டவர் பெயரால் வருகிற அரசர் வாழ்க!

தாவீதின் குமாரன் வாழ்க! என்ற வாழ்த்தொலிகள் முழங்கின. அக்கூட்டத்தில் அவருக்கு எதிரான பரிசேயர் கூட்டமும் அவர்மீது குற்றம்காணும் கருத்துடன் வந்து கொண்டிருந்தது. இயேசுவின் அன்பர்கள் பலர் குருத் தோலையைப் பிடித்துக் கொண்டு வந்தனர். ஆனல் நகருக்குள் நுழையும் போது, கண்ணீர் விட்டுக் கொண்டு 'ஏ நகரமே! நீ உன் பகைவர்களால் நிரப்பப்பட்டிருக்கிறாய்! நீ உன் சமாதானத்திற்குரியவைகளை அறியாதிருக்கின்றாய்! இது உனக்குத் தீங்கே' என்று கூறினர். அச்சமயம் அவ்வூர்வலத்திற்குமுன் சிறுவர்கள் ஓடியாடி ஆண்டவரின் பெயரால் வருகிறவர் வாழ்க! என்று கூறி மகிழ்ச்சியோடு துள்ளினார்கள். இப் பெரிய ஊர்வலத்தை நகரமக்கள் அனைவரும் மாளிகையிலிருந்தும், தெருக்களிலிருந்தும் கண்டார்கள். பலர் இவர்தான் 'மெசையா' என்றும், மற்றும் பலர், நாசரேத்தூர் தீர்க்கதரிசி இயேசுநாதர் என்றும் கூறிக் கொண்டார்கள். இங்ஙனம் சென்ற ஊர்வலம் இறுதியாகக் கோயிலை அடைந்தது. அக்கூட்டத்தையும் ஆரவாரத்தையும் கண்ட குருக்களும் அதிகாரிகளும் முறுமுறுத்தனர்.

16. செருசலேம்

ஓடினார்கள்

கோயிலை அடைந்த இயேசுநாதர் தாம் மூன்று ஆண்டுகளுக்குமுன் கண்ட காட்சியை மீண்டும் கண்டார். கோவிலின் உள்ளும் வெளியும் ஏராளமான

மக்கள் பணம் மாற்றுவதும், மற்றும் வாசனைப் பண்டங்கள், பூமாலைகள், பலிப்பொருள்கள் முதலியவைகளை விற்பதும் வாங்குவதுமாகச் சந்தைக் கடையைப்போல பெருங்கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். அக்காட்சி அவரது மனத்தைப் புண்படுத்தியது. அக்கொடிய காட்சியை ஒரு படியின்மேல் நின்று இயேசு நோக்கினர். அப்போது ஒரு பெருங் குரல் 'என்னுடைய வீடு சகலசாதி மக்களுக்கும் செபவீடு என்று அழைக்கப்படும். ஆனால் நீங்களோ அதைக்கள்ளர் குகையாக்கினீர்' என்றது. அதைக் கேட்ட வியாபாரிகளும் மற்றையோரும் மிகவும் அஞ்சினர். தங்கள் தங்கள் பணத்தையும் பொருள்களையும் போட்டுவிட்டு தேவாலயத்தை விட்டு நாலாபக்கங்களிலும் ஓடினர்கள். கோவில் வியாபாரத்தில் பெருங் பங்காளிகளாக இருந்த குருக்கள் வியாபாரிகளுக்கு ஆறுதல் கூறும் வல்லமையற்றவர்களாக இருந்தனர். இச்செய்தி குருக்களுக்குப் பெரிய அவமானத்தையும் ஆத்திரத்தையும் ஊட்டக்கூடியதாயிருந்தது.

விடை கூறுங்கள்

இவற்றையெல்லாம் கண்ட வேதபாரகரும் பிறரும் மனம் புழுங்கினர். அவர்களில் ஒருசிலர் இயேசுவைக் குற்றவாளி என்று ஒப்பத்தக்க சிலமுறைகளை ஏற்படுத்தத் திட்டமிட்டார்கள். அக்காலத்தில் பொது மக்களுக்குப் போதனை செய்பவர்கள் அதிகாரப் பட்டம் பெற்ற கல்வியாளர்களாயிருக்க

வேண்டுமென்பது முறை. கல்வியும் அதிகாரமும் இல்லாத இயேசுநாதரைப் பட்டயம் கேட்டுக் குற்றம் சுமத்த எண்ணினர்; 'உரோமப் பேரரசனுகிய செசாருக்கு வரிகொடுக்கலாமா? என்று கேட்போம், அதற்கு யூதராகிய இயேசு வேற்று நாட்டானுகிய உரோமாபுரி செசாருக்கு வரி கொடுக்கக் கூடாதென்று கூறுவார். அரசாங்கத்துக்கு வரி தரக்கூடாதென்பதே இராசத்துரோகக்' குற்றமாக முடியும்; அப்படிக்கின்றி, வரி கொடுக்கலாம் என்று சொல்வாரானுல் தாய்நாட்டு மக்களை அயல்நாட்டு மன்னனுக்கு அடிமைப் புகுத்தும் துரோகி என்று மக்களிடம் கூறி வெறுப்பை வளர்க்கலாம் என்று கருதினுர்கள். எனவே தாம் விரிக்கும் வலையில் எப்படியும் இயேசுநாதர் சிக்கியே தீரவேண்டும் என்று எண்ணி மனம் மகிழ்ந்தனர்.

இயேசுநாதர் மறுநாள் ஆலயத்தில் நுழைந்து சொற்பொழிவு செய்யும்போது வேதபாரகர் முதலியோர் கூடி நீர் எந்த அதிகாரத்தைக் கொண்டு இங்கே சொற்பொழிவு செய்கிறீர்! இவைகளைச் செய்யும்படி உமக்கு அதிகாரம் கொடுத்தவர் யார்? என்று அதிகாரத்துடன் கேட்டனர். அதற்கு மாறுத்தரமாக 'நான் உங்களை ஒன்று கேட்கிறேன் விடை கூறுங்கள். அருளப்பர் கொடுத்த ஞான முழுக்கு இறைவனிடத்திலிருந்து தோன்றியதோ! மனிதரிடத்தினின்று தோன்றியதோ!' என்று வினவினுர். அதுகேட்ட பாரகர் இறைவனிடத்திலிருந்து

தோன்றியதென்போமாயின் பின் ஏன் நீங்கள் பின்பற்றவில்லை என்றும், மக்களிடத்தினின்று தோன்றியதென்போமாயின் மக்களுக்கு அஞ்சுகிரேம் என்பதும் பெறப்படும், என்று கருதி அது எங்களுக்குத் தெரியாது என்று பதில் கூறினர்கள். அதுகேட்ட இயேசுநாதர் 'நானும் இன்ன அதிகாரத்தைக் கொண்டு இவைகளைச் செய்கிறேன்' என்று சொல்லேன் என்று பதிலளித்தார்.

கள்ள ஞானிகளே

அதன்பின் எரோதியர் சிலர் அவரையணுகி 'போதகரே! நீர் இறைவனுடைய நெறியை உள்ளபடியே கூறுகின்றீர் என்பதை அறிந்தோம். நாங்கள் செசாருக்கு வரி செலுத்தத் தகுமா? தகாதா? உமக்கு தோன்றுவதென்ன? என்பதை எங்களுக்குக் கூறவேண்டும்' என்றனர். அதுகேட்ட இயேசுநாதர் 'கள்ளஞானிகளே! என்னைச் சோதிப்பானேன்! வரிப்பணத்தை எனக்குக் காண்பியுங்கள்' என்றார். அதுபோது செசாரின் நாணயமாகிய 'தெனியரை' ஒருவன் இயேசுவுக்குக் காட்டினன். இயேசுநாதர் 'இந்த உருவமும் மேலெழுத்தும் யாருடையது' என்று கேட்டார். 'செசாருடையது' என்றனர். 'அப்படியானல் செசாருடையதை செசாருக்கும் இறைவனுடையதை இறைவனுக்கும் செலுத்துங்கள்' என்றார்.

பெரிய காணிக்கை

இவ்விடைகளைக் கேட்ட வேதபாரகர், பரிசேயர் சதுசேயர், ஏரோதியர் முதலானவர்கள் இவரைக் குற்றவாளியாக அகப்படுத்துவது நம்மால் முடியாத செயல் என்று மனம் விட்டு விட்டார்கள். இயேசுநாதர் 'கள்ள ஞானிகளாகிய வேதபாரகரே! பரிசேயரே ஐயோ! உங்களுக்குக் கேடாம்' என்று கூறினர். கோவிலின் ஒரு பக்கத்தில் காணிக்கைப் பெட்டியிருந்தது. அதில் பல செல்வர் பெரும் பணத்தைக் காணிக்கை செலுத்தினர். அதுசமயம் ஒரு ஏழைக் கைம்பெண் சில சல்லிகளைக் காணிக்கையாகச் செலுத்தினள். இயேசுநாதர் அவைகளைச் சீடர்களுக்குக் காட்டி 'இப்பெண் போடும் காணிக்கை மற்றவர் செலுத்தியதைக் காட்டிலும் மிகுதியாகும்; ஏனெனில் மற்றவர் தமது மீதப் பொருளிலிருந்து காணிக்கை செலுத்துகின்றனர். இவளோ! தன் வறுமையில் சீவனத்துக்குரிய பொருளிலிருந்தே காணிக்கை செலுத்துகிறள். ஆதலின் இக்காணிக்கையே மற்றையதினும் பெரிதாகும்! என்று கூறினர்.

17. கடைசி இராப் போசனம்

வாக்களித்தான்

இயேசுவின் பகைவர்களாகிய வேதபாரகர் முதலியோர் புதன்கிழமை முடிவாக ஓர் ஏற்பாடு செய்யும்பொருட்டுக் கைப்பாஸ் என்பவன் வீட்டில்

கூடினார்கள். இயேசுநாதரைப் பலவந்தமாகக் கோவிலிலோ வேறிடங்களிலோ பிடித்தால் மக்கள் எதிர்ப்பார்கள் என்றும்; அவரை இரகசியமாகப் பிடித்து உரோமையர் கையில் ஒப்புவிப்பதுதான் கொலைசெய்யும் தமது கருத்து நிறைவேற்ற ஏற்றதாகும் என்றும் கருதினார்கள். இந்த ஏற்பாட்டை எப்படி நிறைவேற்றுவது என்று அவர்கள் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது வெளியில் யாரோ ஒரு மனிதன் காத்திருப்பதைக் கேள்வியுற்று ஒருவன் வெளியே வந்தான். வந்தவன் வேறு யாருமல்ல இயேசுநாதரின் பன்னிரு சீடர்களுள் ஒருவனாகிய யூதாஸ் இஸ்காரியோத்து என்பவனே. பண ஆசைப்பிடித்த அவன் எதிரிகளுக்குத் தனது தலைவரைக் காட்டிக்கொடுத்து பணம் பெறுவதற்காக வந்திருந்தான். அதிகாரிகளைக் கண்டதும் அவர்களுக்கு வணக்கம் செலுத்தி நாசரேத்தூர் இயேசுநாதர் இருக்குமிடத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற அவர்கள் கட்டளையை ஞாபகமூட்டினான். 'நான் அவரை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன். நீங்கள் எனக்கு என்ன் கொடுப்பீர்கள்?' என்று கேட்டான். அவர்கள் அவ்வுதவிக்கு முப்பது வெள்ளிகள் கொடுத்தார்கள். யாரும் உதவிக்கு வரக்கூடாத சமயத்தில் அவர்களிடம் ஒப்புக்கொடுப்பதாக அவன் வாக்களித்தான்.

பாஸ்கா உணவு

வியாழக்கிழமை காலையில் சீடர்கள் இயேசுநாதரிடம் 'பாஸ்காப் பண்டிகையின் உணவு புசிப்பதற்கு நாங்கள் எங்கே ஏற்பாடு செய்யவேண்டும்'

என்று கேட்டனர். கள்ளமனம் படைத்த யூதாஸ் இயேசு என்ன கூறினர் என்பதை அறிந்து எதிரிகளுக்குக் காட்டிக்கொடுக்க எண்ணி இருந்தமையால் மெதுவாக அவரருகிற் சென்றான். இயேசுநாதர் 'நீங்கள் பட்டினத்திற்குப் போங்கள்; அங்கே தண்ணீர்க்குடம் சுமந்து வருகிற ஒரு மனிதன் உங்களுக்கு எதிர்ப்படுவான். நீங்கள் அவனைப் பின்தொடர்ந்து போய் அவன் எந்த வீட்டில் நுழைவானோ அந்த வீட்டுத் தலைவனிடம், 'என் சீடர்களோடு நான் பாஸ்காவைப் புசிக்குமிடமாகிய அசனசாலை எங்கே என்று போதகர் கேட்கிறார்' என்று சொல்லுங்கள்; அவன் காட்டுவான்; அங்கே ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறி அனுப்பினர். யூதாஸ் திகைத்தான். அவன் பொக்கிஷக்காரனயிருந்தும் அவர் அவனை அனுப்பாதது ஏமாற்றமாயிருந்தது. அவன் எண்ணம் வீணாயிற்று.

இராயப்பரும் அருளப்பரும் மிகவும் தொல்லைப்பட்டு நகரத்தின் கீழ்ப்பாகத்தில் சீமோன் குன்றின் மேலிருந்த ஒரு வீட்டை அடைந்தனர். அவ்வீட்டுக்காரன் இயேசுநாதர் கூறியவைகளைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தான். பாஸ்கா உணவுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தான். புளியாத மாவினல் செய்த அப்பங்களும், கசப்பான பூண்டுகளும், தண்ணீர் கலந்த ரசமும், சாரசோத் என்னும் ஒருவகைக் குழம்பும் மேசையின்மீது வைக்கப்பட்டிருந்தன.

இயேசுவின் அருகே ஒருபுறம் அருளப்பரும், மற்றொருபுறம் காட்டிக் கொடுக்கத் தக்க சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த யூதாஸும், எதிரில் இராயப்பரும் மற்றைச் சீடர்களும் அமர்ந்திருந்தனர். அப்போது இயேசு 'இந்த பாஸ்காவை உங்களோடு உண்ண ஆசைமேல் ஆசையாயிருந்தேன்' என்றார்.

கடைசி இரவு

பாஸ்கா இரவு போசனத்தின்போது இயேசுநாதர் இடையில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு தனது சீடர்களின் கால்களை அகன்ற ஒரு பாத்திரத்தில் நீர் வைத்துக்கொண்டு, கழுவித் தமது துண்டால் துடைத்தார். அப்படியே அவர் சீமோன் இராயப்பரிடம் வந்தபோது 'நீரோ என் கால்களைக் கழுவுவது?' என்று கால்களை முடக்கிக் கொண்டார். அதைக்கண்டு இயேசுநாதர் 'நான் உன் கால்களைக் கழுவாவிட்டால் என்னோடு உனக்குப் பங்கில்லை எனறார்.' உடனே இராயப்பர் 'என் கால்களை மட்டுமல்ல கைகளையும், சிரசையும்கூடக் கழுவும் என்றார், குளித்தவனுடைய கால்களையேயன்றி மற்றொன்றையும் கழுவவேண்டியதில்லை என்று கூறிக் கால்களைமட்டும் கழுவித் துண்டால் துடைத்தார். அதன்பின் பந்தியமர்ந்து உண்டார்' ஆண்டவரும் குருவுமாகிய நான் உங்கள் கால்களைக் கழுவினேனாகில் நீங்கள் ஒருவர் ஒருவருடைய கால்களைக் கழுவக்

கடவீர்கள். ஏனெனில் நான் உங்களுக்கு எவ்விதம் செய்தேனே அவ்விதமே நீங்களும் பிறருக்குச் செய்யும்படி மாதிரி காண்பித்தேனே தவிர வேறல்ல என்றார் .மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்றார். சீடர்கள் காட்டிக்கொடுப்பான் என்ற சொல்லைக் கேட்டதும் ஒருவர் ஒருவரை நோக்கி ஐயமுற்றனர். ஆண்டவரே! அவன் யார்? நானா? நானா? என்று ஒவ்வொருவரும் கேட்டார்கள். யூதாசும் நானா? என்று கேட்டான். இயேசுநாதர் மற்றவர்கள் அறியாதவாறு மெல்லிய குரலில் நீயே அதைச்சொன்னாய்! என்று அவன் மட்டும் கேட்கு மாறு கூறினார். அன்றைய விருந்தில் சீடர்களுக்கு அப்பத்தையும் தண்ணீர்கலந்த ரசத்தையும் தம் கையால் வழங்கினார். இறுதியாக இயேசு ஒருதுண்டு அப்பத்தை இரசத்தில் தோய்த்து யூதாசின் கையில் கொடுத்தார். யூதாஸ் உடனே வெளியில் வந்தான்; அக்கீழ்மகன் இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்கு அதுவேதக்க சமயமென்று கருதினான். உடனே எதிரிகள் இருக்குமிடம் புறப்பட்டான். அதன்பின் இயேசுநாதர் ' நான் உங்களை நேசித்ததுபோல் நீங்களும் பிறரை நேசியுங்கள்.' நீங்கள் ஒருவரை ஒருவர் நேசித்தாலல்லவோ ! பிறர் நீங்கள் என் சீடர்கள் என்று அறிந்து கொள்வார்கள் என்று கூறினார். அதன்பின் இயேசுநாதர் தாம் அடிக்கடி செபம் செய்யப்போகும் 'செத்மேனி' என்ற தோட்டத்

திற்குச் சென்று எட்டு சீடர்களை வெளியே நிறுத்தி விட்டு இராயப்பர், அருளப்பர், யாகப்பர் என்ற மூவரைமட்டும் உள்ளே அழைத்துச் சென்றார். அங்கே இயேசு அனைவரையும் செபம் செய்யும்படித் தூண்டினர். ஆனல் அவர்கள் தூங்கினர்கள். இயேசு அவர்களை மீண்டும் மீண்டும் எழுப்பிக்கொண்டிருந் தார். அதுசமயம் இயேசுநாதரின் உடலில் இரத்த வியர்வை ஏற்பட்டது.

18. சிலுவைப்பாடு

காட்டிக் கொடுத்தான்

இரவு நடுச்சாமத்திற்குப்பின் தோட்டத்திற்கு வெளியில் தீவர்த்திகளின் வெளிச்சம் தெரிந்தது. உடனே இயேசுநாதர் மீண்டும் தூங்கிக்கொண்டிருந்த சீடர்களை எழுப்பி எழுந்திருங்கள் போவோம்! இதோ என்னைக் காட்டிக் கொடுப்பவன் நெருங்கி வந்திருக்கிறன் என்று கூறி அவர்களை எழுப்பினர். அப்போது பிரதான வேதபாரகராலும்நாட்டு மூப்பராலும் அனுப்பப்பட்ட ஏராளமான மக்கள் தடி, கத்தி முதலியவைகளை எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

அவர்களுடன் யூதாஸும் வந்தான். வந்த யூதாஸ் பல பக்கங்களிலும் கண்ணைச்செலுத்திப் பரபரப்பாகப் பார்த்தான். இறுதியில் அவன் தலைவராகிய இயேசுவை நோக்கிச் சென்று குருவே

வாழ்க! என்று முத்தமிட்டான். யூதாஸ் எதிரிக ளுக்கு யான்யாரை முத்தமிடுவேனே அவரே இயேசு என்று நீங்கள் அறிந்து பற்றிக்கொள்ளுங் கள் என்று குறிப்பு கொடுத்திருந்தான். அப்போது இயேசு யூதாசே! தேவசுதனை முத்தமிட்டோ காட் டிக் கொடுக்கிறாய்! என்று அன்புடன் வினவினார். இதற்குள் வீரர்கள் பரபரப்புடன் இயேசுவைத் தேடினார்கள். இயேசுநாதர் அவர்களை நோக்கி யாரைத் தேடுகிறீர்கள்! என்றார். அதற்கு அவர்கள் நாசரேசனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றனர். உடனே இயேசு 'நாசரேயனாகிய இயேசு நானே! இவர்களைப் போக விடுங்கள் என்று சீடர்களைச் சுட்டிக் காட்டினார். உடனே வீரர்கள் இயேசுவைப் பிடித்துக் கட்டினார்கள். அதுகண்ட இராயப்பர் வீரன் ஒருவன்மீது பாய்ந்து காதை வெட்டினார். உடனே இயேசுநாதர் அவரைக் கையமர்த்திப் போரிடவேண்டாமெனத் தடுத்தார். மற்றைய சீடர் கள் யாவரும் அவரை விட்டுவிட்டு ஓடிப்போனார்கள்.

கன்னத்தில் அறைந்தான்

இயேசுநாதர் பெரிய குருவாகிய கைப்பாசின் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். கைப் பாஸ் உரோமையரால் நியமிக்கப்பட்டவன். கைப் பாசின் அரண்மனையும் அவனது மாமனாராகிய அன்னாஸ் என்பவனது அரண்மனையும் ஒன்றாகவே மிக அருகில் இருந்தது. அன்னாஸ் மிகவும் கொடிய வன் இயேசுவைக் கொல்லச் சூழ்ச்சி செய்தவர்

களில் அவனே முதன்மை பெற்றவன் ஆவான். இயேசுநாதரை இழிந்த நிலையில் காணவேண்டு மென்று விரும்பிய அன்னாஸ் அவரைத் தன்னிடம் அழைத்து வருமாறு ஏவினான். ஆட்கள் அவரை அன்னாசின் முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அன்னாஸ் சூழ்ச்சிக்காரனாதலால் அவருடைய சொல்லிலிருந்து சில குற்றம் கண்டுபிடிக்கலா மென்று கருதி அவரது போதகத்தைப்பற்றியும், சீடர்களைப்பற்றியும் கேள்விகள் கேட்டான்; அச் சூழ்ச்சியை அறிந்த இயேசு போதங்களைப் பற்றி அறியவிரும்பினால் மக்களைக் கேட்டு அறிந்துகொள் ளும் என்றார். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த சேவ கன் ஒருவன் பெரிய குருவிடம் இவ்வாறோ நடந்துக் கொள்வது! என்று கூறி இயேசுவின் கன்னத்தில் அறைந்தான்.

அடிப்பானேன்

அப்போது இயேசுநாதர் 'நான் தப்பிதமாய்ப் பேசினால் தப்பிதத்தை ருசுப்படுத்து; சரியாய்ப் பேசி யிருந்தால் அடிப்பானேன் என்றார். அதன்பின் இயேசுநாதர் 'கைப்பாசின்முன் குற்றவாளியாக நிறுத்தப்பட்டார். இயேசுவைக் குற்றவாளி எனப் பொய்ச்சாட்சிக் கூறவந்தவர்கள் முன்னுக்குப் பின் முரணைகப் பேசினர். இறுதியாக கைப்பாஸ் மிகவும் ஆத்திரத்தோடு ''உனக்கு விரோதமாய் இவர்கள் சொல்லுகிற சாட்சிக்கு நீ பதிலொன்றும் சொல்லு

கிறதில்லையா ?' என வினவினன், இயேசு அதற்கு யாதொரு பதிலும் கூறவில்லை. உடனே கைப்பாஸ் 'நீ தேவசுதனாகிய கிறிஸ்துதானோவென்று எங்களுக்குச் சொல்லும்படி இறைவன்மீது ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசுநாதர் நீரே அதைச் சொல்லியிருக்கிறீர்! என்று கூறினார். உடனே அன்னாஸ் கடுங்கோபம் கொண்டவன் போல் தன் ஆடையைக் கிழித்துக்கொண்டு 'இவன் தேவ தூஷணம் சொன்னான். இவன் சாவுக்குப் பாத்திரமானவன் என்று கத்தினன். உடனே சேவகர்கள் கண்களைக்கட்டி அவரை முகத்திலும் கன்னத்திலும் அறைந்து உன்னை அடித்தவன் யாரென்று தீர்க்க தரிசனமாய்ச் சொல் என்று கேட்டார்கள்.

கொலைத்தீர்ப்பளிக்க வேண்டும்

மறுநாள் அதிகாலை நான்கு மணிக்கு வேதபாரகர் கூடி ஆலோசனை செய்தனர். எப்படியாவது உரோமப்பதிலரையனாகிய போஞ்சு பிலாத்தினிடம் கூறி இயேசுவைக் கொலைத்தீர்ப்புக்கு ஆளாக்கக் கருதினர். பெரியகுருக்கள் பெருந்திரளான மக்களோடு இயேசுவை அழைத்துக்கொண்டுபோய் போஞ்சு பிலாத்தின்முன் நிறுத்தினார்கள். போஞ்சு பிலாத்து தன் மனைவி கிளாதியோ புரோக்கூலா என்பவளாலும் பொதுமக்களாலும் இயேசு குற்றமற்ற இனியவர் என்பதை அறிந்திருந்தான். ஆகையால் அவன் இயேசுநாதருக்குத் தீங்கு செய்ய

விரும்பவில்லை. உடனே அவன் வேதபாரகரை நோக்கி 'இந்த மனிதன் பேரில் என்ன குற்றம் கொண்டு வருகின்றீர்கள்' என்று கேட்டான். அது கேட்ட எதிரிகள் 'இவன் குற்றவாளியல்லாதிருந்தால் இவனை உமக்குக் கையளிக்கமாட்டோம் இவன் எங்களுடைய மக்களை அடியோடு கலக்குகிறான். தேவதூடணம் செய்கிறான்; செசாருக்கு வரி செலுத்தவேண்டாமென்கிறான்; தன்னைக் கிறிஸ்துவாகிய இராஜா என்று கூறுகிறான். ஆகையால் இவனுக்குக் கொலைத்தீர்ப்பளிக்கவேண்டும் என்று கூறினார்கள். பிலாத்து இயேசுவின் பேரில் கூறப்பட்டவை பொறாமையால் கூறப்படும் பொய்க்குற்றம் என்பதை நன்கு உணர்ந்தான். எனினும் குற்றங்கள் விசாரித்தறிய வேண்டிய அளவு முக்கியமுடையனவாக இருந்தன.

யாதொரு குற்றமும் காணேன்

உடனே பிலாத்து தனது இரு வீரர்களை அனுப்பி இயேசுவைத் தன் முன்னர் வரவழைத்தான். 'நீ இராஜாவோ! என்றான். இயேசுநாதர் அதற்குப்பதிலாக 'நான் இராஜா என்று நீரே சொல்லுகிறீர்! நான் சத்தியத்துக்குச் சாட்சியாகப் பிறந்தேன். என் இராச்சியம் இவ்வுலகத்திற்கு ஏற்றதல்ல' என்று கூறினார். உடனே போஞ்சு பிலாத்து நான் இவரிடத்தில் யாதொரு குற்றமும் காணேன்! என்றான். மீண்டும் வேதபாரகரும் குருக்களும் கூக்குரலிட்டு இயேசுவின்மேல் குற்றத்தின்மேல் குற்றம்

சுமத்திக்கொல்லவேண்டும், கொல்லவேண்டும் என்று கூக்குரலிட்டனர். மீண்டும் போஞ்சு பிலாத்து 'நான் அவனிடத்தில் யாதொரு குற்றமும் காணேன்' என்று உரைத்தான். போஞ்சு பிலாத்து தலைமைக் குருக்களுக்கு அஞ்சினன். தன்னை அரசன் என்று கூறிக்கொள்ளும் குற்றவாளிக்குத் தான் உடந்தையாக இருப்பதாய்த் தனது தலைவனாகிய தைபீரியஸ் செசாருக்கு குருக்கள் புகார் செய்தால் சக்கிரவர்த்தி தன்னை தண்டிப்பதோடு தனது பதவியையும் பறித்து விடுவான் என்று கருதினன். ஆகவே குற்றமற்ற ஒருவனைத் தண்டிப்பதுத்தான் பழிசுமக்காதிருக்கவும் குருக்கள் செய்யும் சிக்கலிலிருந்து தான் தப்பிக்கவும் ஒரு யோசனை செய்தான். இயேசு கலிலேயக் குடிமகனாக இருப்பதால் பண்டிகைக்குச் செருசலேம் வந்திருந்த அந்நாட்டு மன்னன் எரோதரிடம் இயேசுவை விசாரிக்க அனுப்பிவைத்தான்.

எரோதன் நெடுநாளாக இயேசுவைக் காணவேண்டுமென்றிருந்தான். இயேசுமீது குரோதம் உடையவன். ஞானமுழுக்குக் கொடுத்துவந்த அருளப்பரைக் கொன்றவன். எனினும் இயேசுவை மிகவும் மரியாதையோடு வரவேற்று அவருடைய வழக்கில் மிக அக்கரை கொண்டவன்போல் விசாரித்தான். எனினும் இயேசுநாதர் அவனிடம் பதிலொன்றும் கூறவில்லை. இயேசு தன்னை அவமதிக்கிறாரென்று எரோதன் எண்ணிக் கொண்டான். உடனே அவரை அவமதிக்க ஒரு வெள்ளையங்கியைப்

பைத்தியக்காரன்போல் அணிவித்து மீண்டும் இரண்டு மணி நேரத்திற்குள் பிலாத்தினிடம் அனுப்பிவைத்தான். பிலாத்து செய்வதறியாது திகைத்தான். இயேசுநாதரைத் தண்டிப்பதற்கோ மனமில்லை. விடுதலை செய்வதற்கோ துணிவில்லை. வேதபாரகரால் தூண்டப்பட்ட மக்கள் கூட்டம் அடிக்கொருதடவை இயேசுவைக் கொல்லவேண்டும் கொல்லவேண்டும் என்று கூக்குரலிட்டுக்கொண்டேயிருந்தனர். இருதலைக்கொள்ளி எறும்புபோல் தவித்தான். அப்போது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. பாஸ்காப் பண்டிகையின்போது பொதுமக்கள் தமக்கு விருப்பமான ஒரு கைதியை விடுதலை செய்யும் உரிமை பெற்றிருந்தார்கள். அவ்வாய்ப்பைப் பயன்படுத்தி இயேசுவை விடுதலை செய்யலாமென்று பிலாத்து சிந்தித்தான். உடனே பிலாத்து கொடுங்கொலைப் பாதகனும் ஊரறிந்த கள்ளனுமாகிய 'பரபாஸ்' என்பவனையும் இயேசுவையும் இணையாக நிறுத்தி, இவர்களில் ஒருவனை விடுதலை செய்யும் உரிமை உங்களுக்கு உண்டு. யாரை விடுதலை செய்கிறீர்கள் என்று கேட்டான் பிலாத்து. பொதுமக்கள் கள்ளனுக்கு விடுதலையளிக்கமாட்டார்கள்; இயேசுவுக்குத்தான் விடுதலையளிப்பார்கள் என்று கருதினன். ஆனல் அவன் கருத்துக்கு மாருக மக்கள் பரபாசை விடுதலை செய்கிறோம் என்று கூவினர். அப்படியானல் யூதர்களுடைய இராஜாவுக்கு நான் என்ன செய்யவேண்டுமென்று

விரும்புகிறீர்கள் என்று கேட்டான். சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டனர். 'ஏன் இவன் செய்த தீங்கு என்ன?' நான் இவனிடம் ஒரு குற்றத்தையும் காணவில்லையே இவனைத் தண்டித்து விடுதலையாக்குவேன் என்று கூறினன் பிலாத்து. ஆயினும் குருக்களால் தூண்டப்பட்ட மக்கள் 'இவனைச் சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்று ஊளையிட்டார்கள். அதன்பின் பிலாத்து தன் கருத்து முற்றும்பெருதென்று எண்ணியவனுய் தண்ணீரை அள்ளித்தன் கைகளைக் கழுவிக்கொண்டு 'இந்த நீதிமானுடைய இரத்தப்பழியில் நான் குற்றமற்றவனுய் இருக்கிறேன்' என்ருன். மக்கள் 'அவனது இரத்தப்பழி எங்கள்மீதும் எங்கள் மக்கள்மீதும் இருக்கட்டும் என்று கூவினர்கள். கோழை மனமுள்ள பிலாத்து மக்களுக்கு அஞ்சித் தீயவர்பால் இயேசுவை ஒப்புவித்துப் பழி தேடிக்கொண்டான்.

இதோ உங்கள் இராஜா

உடனே சேவகர்கள் இயேசுவை கற்றூணில் சேர்த்துக் கட்டினர்கள். கூரிய ஆணிகள் கட்டிய கொடிய சாட்டையால் உடலெங்கும் புண் தோன்றும்படி அடித்தார்கள். காறி உமிழ்ந்தார்கள். பண்ணுத கொடுமைகளெல்லாம் பண்ணி அவமானப் படுத்தினர்கள். உடலெங்கும் காயம் நிறைந்தது; இரத்தம் சொட்டியது; அடி பொறுக்கமாட்டாமல்

இயேசு மண்ணில் சாய்ந்தார். அக் கொலை பாதகர்கள் மீண்டும் மீண்டும் பலவகையாலும் இயேசுவை அவமானப்படுத்துவதில் முனைந்தார்கள். இயேசு தம்மை யூதர்களின் அரசர் என்று கூறிக்கொண்டதை அவமானப்படுத்த முள்ளால் முடிபோன்ற ஒன்றை அமைத்து அவர் தலையில் வைத்து ஒரு மூங்கில் கழியை வலதுகையில் செங்கோலாகக் கொடுத்தனர். செந்நிற ஆடை ஒன்றை அவர்மேல் போட்டனர். அவருக்குமுன் மண்டியிட்டு யூதராஜாவே வாழ்க! என்று கூறிக் கேலிசெய்தனர். (இங்ஙனம் ஒருவரோடொருவர்) அவரை அதிகமாக அவமானப்படுத்துவதில் முதன்மையானவர் யார் என்பதில் போட்டியிட்டார்கள். இக்கொடுங் காட்சியைக் கண்டு மனம் தாங்காத பிலாத்து மீண்டும் இரத்த கோலத்தோடு பரிதாபமாக நிற்கும் இயேசுவை மக்கள் முன்னிலையில் நிறுத்தி மிகவும் இரக்கமாக 'இதோ இந்த மனிதன்! இவனிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் காணவில்லை. நீங்கள் அறியும்பொருட்டு நான் உங்கள் எதிரில் கொண்டு வந்தேன் என்று கூறி இயேசுவுக்கு விடுதலையளிக்க வேண்டுமென்பதைச் சொல்லாமல் சொன்னான். எனினும் மக்கள் அவனைச் சிலுவையில் அறையும்! சிலுவையில் அறையும்! அவன் தன்னை தேவகுமாரன் என்று கூறிக்கொள்வதால் சாகவேண்டியதே' என்று கூவினர். மீண்டும் பிலாத்து இயேசுவைத் தனியே அழைத்துச் சென்று 'நீ எவ்விடமிருந்து வந்தாய்!'

என்று கேட்டான். அதற்கு இயேசு பதில் கூற வில்லை; என்னிடம் பேசமாட்டாயா? உன்னை விடுதலை செய்யவும், சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரம் உண்டு என்றான். இயேசு அதற்கு 'மேலிடத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால் என்மேல் உமக்கு அதிகாரம் இராது என்றார். பிலாத்து சுமார் பதினொருமணி நேரத்தில் மீண்டும் இயேசுவை அழைத்துக்கொண்டு வந்தான். பிலாத்து இயேசுவின்பால் கருணை காட்டுவதை உணர்ந்த தலைமை குருக்கள் எங்களுக்கு 'செசாரையன்றி வேறு அரசர் இல்லை, தன்னை அரசன் என்று கூறிக் கொள்ளும் இவனை விடுதலை செய்தால் நீர் செசாருக்கு நண்பனல்ல! என்று கூவினார்கள். அதுகேட்ட பிலாத்து உண்மையில் நடுங்கிப் போனான், உடனே இயேசுவைக்காட்டி 'இதோ உங்கள் இராஜா' இவனை உங்கள் வசம் ஒப்புவிக்கிறேன் என்று கையளித்தான்.

அலங்கோல ஊர்வலம்

உடனே குருக்கள் தங்கள் கருத்தை நிறைவேற்றத் தொடங்கினர். ஏற்கனவே இயேசுவுக்காகத் தயாரித்திருந்த சிலுவை மரத்தைக்கொண்டு வந்தனர். அதில் 'நாசரேயனாகிய இயேசு யூதர்களுடைய இராஜா' என்று எழுதப்பட்ட பட்டயம் இருந்தது. இயேசுவின் கொலைத்தீர்ப்புக் கேட்டு பலர் வருத்தமும், சிலர் மகிழ்ச்சியும் கொண்டனர்

இத்திர்ப்பால் பெருங் கலகம் நேரலாமோவென்று பலர் அஞ்சினர். கூட்டத்தில் கலகம் நேராமல் காக்கும்பொருட்டுச் செந்தூரியன் என்ற காவல் தலைவன் முன்னே செல்லவும், ஹக்கார் என்ற ஒருவன் குற்றவாளியின் குற்றத்தை மக்களுக்கு அறிவித்துக் கொண்டு செல்லவும், பாரமான சிலுவையைத் தாங்கமாட்டாமல் தாங்கிக் கொண்டு இயேசுநாதர் செல்லவும், கொலைக்களமாகிய கல்வாரி மலையை நோக்கி ஊர்வலம் புறப்பட்டது. இயேசுவோடு இரு கள்ளர்களும் சிலுவையில் சாக வந்துகொண்டிருந்தனர். சில தினங்களுக்குமுன் வாழ்த்துக் கூறிய பொதுமக்களும் சிறுவர்களும் தற்போது இயேசுவின்மேல் மண்ணை அள்ளிவீசும் அளவுக்கு மனமாறியிருந்தனர். கல்வாரி மலைக்குப் போகும் வழி மேடும் பள்ளமும் நிறைந்து கடுமையானதாக இருந்தது. இயேசுநாதர் சிலுவையைத் தூக்கிச் செல்ல முடியாமல் தள்ளாடித் தள்ளாடி நடந்தார். சிலுவையின் பாரம் தாங்கமாட்டாமல் மும்முறை பாரத்தோடு கீழே விழுந்து விழுந்து எழுந்தார். அதன்பின் சிரேனே ஊராகிய சீமோன் என்பவனைச் சற்று சிலுவையைப் பின்னே தாங்கிப்பிடித்துக் கொள்ளுமாறு ஏவினார்கள். இந்த அலங்கோலக் காட்சிகளைக் கண்ட பெண்களும், பெரியோர்களும் கண்கலங்கிக் கோவெனக்கதறியழுதனர். அங்ஙனம் செல்லும்போது இயேசுநாதர் தம் தாயாகிய மரியம்மையைக்கண்டு கண்கலங்கினர். வார்த்தைகள்

எதுவும் பேசவில்லை. ஊர்வலம் மணி பன்னிரண்டிற்குக் கல்வாரி மலையின் உச்சியை அடைந்தது.

சிலுவை மரணம்

உடனே அங்கு கூடியிருந்த மக்களைத் தூரவிலக்கி இயேசுநாதரை சிலுவையில் அறைந்தனர். அவ்வமயம் இயேசுநாதர் 'தந்தையே!' இவர்கள் தாங்கள் செய்வதை இன்னதென்று அறியார்கள் இவர்களை மன்னியும்! என்று இறைவனை வேண்டிக்கொண்டார் அதன்பின் இரு கள்ளர்களையும் சிலுவையில் அறைந்து அவ்விருகள்ளர்களுக்கும் நடுவே இயேசுவை அறைந்த சிலுவையை நட்டனர். சிலுவையில் அறைந்தபோது இயேசுநாதர் மிகவும் நடுங்கினார். அவர்பட்ட மனவேதனைக்கு ஒரு எல்லையே இல்லை. போர்ச்சேவகர்கள் அவரைச் சிலுவையில் அறைந்த பின், அவரது ஆடைகளைப் பங்கிட்டுக்கொண்டனர். தம் கருத்தனைத்தும் நிறைவேறியது கண்ட குருக்கள் அளவற்ற மகிழ்ச்சி கொண்டனர். இயேசு ! நீ உண்மையாக தேவசுதனாக இருந்தால் சிலுவையிலிருந்து இறங்கிவா! உம்மை வணங்குகிறோம் என்றனர். கூட்டம் கலைந்தது. அவரது அன்னை மரியம்மையும், அவரது இரண்டொரு நண்பர்களும், செந்தூரியனும் தவிர வேறொருவரும் அங்கில்லை. அருளப்பர் மரியம்மையை அழைத்துக்கொண்டு சிலுவையருகில் வந்தார். உடனே இயேசு 'அம்மையே இதோ உம்மகன்' என்று தம்தாயை அருளப்பருக்கு ஒப்புக்கொடுத்து,

அருளப்பரை நோக்கி 'இதோ உன் தாய்' என்று கூறினர். அதுமுதல் அருளப்பர் அன்னை மரியம்மையைத் தமது இல்லத்தில் வைத்து பாதுகாத்து வந்தார். இயேசு நெடுநேரம் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தார். திடீரென இறைவா! இறைவா! நீர் என்னைக் கைவிட்டது ஏன்? என்று கத்றினர். சிலுவை மரணத்தில் இரத்த இழப்பு நேர்ந்தால் கடுந்தாகம் ஏற்படுவது இயற்கை. ஒருமுறை இயேசு நான் தாகமாயிருக்கிறேன் என்றார். உடனே அருகிலிருந்த போர்ச் சேவகன் தன் அருகிலிருந்த காடிப் பாத்திரத்தில் கடற்காளானைத் தோய்த்து ஒருகோலில் வைத்து நீட்டினன். இயேசுநாதர் அதனைக் குடித்தார். மூன்று மணி நேரம் மக்கள் என்றும் அனுபவித்தற்கரிய கடுந்துன்பமுற்ற இயேசு 'எல்லாம் முடிந்தது' என்று கூறி உயிர் துறந்தார். அவரது அன்பு நிறைந்த கண்கள் மூடின. இனியமுகம் மார்பில் தொங்கியது. இங்ஙனம் அவர் இறந்தபோது உலகில் பல உற்பாதங்கள் தோன்றின. பாஸ்காப் பண்டிகை மகிழ்ச்சியிழந்து அலங்கோலமாகக் காட்சியளித்தது. இயேசு இறந்த சற்று நேரத்திற்குள் வேறொரு வீரன் வந்து தனது ஈட்டியால் அவரது விலாவைக் குத்தித்திறந்தான். இயேசுவை சிலுவையில் அறைந்தகாலம் பண்டிகையாயிருந்தமையால் விரைவில் அடக்கம் செய்துவிடக் கருதினர்கள்.

கல்லறை அடக்கம்

யூதர்களுக்கு அதுவரை அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்த அரிமத்தேயா சூசை என்பவர் தைரியமாய் பிலாத்திடம்போய் இயேசுநாதரைத்தன் தோட்டத்தில் அடக்கம் செய்ய உத்தரவு பெற்றுக்கொண்டு வந்தார். முன்பொருநாள் ஊர்மக்களுக்கஞ்சி இராவோடிரவாய் இயேசுவைக் கண்டுவந்த பரிசேயனுகிய நிக்கோதேமு என்பவரும் அவரும்கூடி இயேசுவை சிலுவையினின்று பிரித்தெடுத்து அவரது தாயின் மடியில் கிடத்தினர்கள். அதன்பின் யூதர் குலவழக்கப்படி செய்யவேண்டிய சடங்குகள் செய்து தமது தோட்டத்தில் கற்பாறையில் வெட்டப்பட்டிருந்த ஒரு கல்லறையில் அடக்கம் செய்தனர்.

அதன்பின் இரண்டு நாட்கள் கழித்து சீடர்கள் ஒருவர் ஒருவராக வெளிப்பட்டு இயேசு கடைசி இராப்போசனம் செய்த சீமோன் மனையில் கூடித் துன்ப காலத்தில் தம்தலைவரை விட்டுப்பிரிந்தமைக்காகக் கதறி அழுதனர். காட்டிக்கொடுத்த கயவனுகிய யூதாஸ் கைக்கூலியாகப் பெற்ற முப்பது வெள்ளிக்காசுகளையும் குருக்களிடத்தில் கொண்டு போய் வீசிஎறிந்துவிட்டு இரவில் இயேசு நாதர் தங்கியிருந்த பூங்கா சென்று அங்குள்ள மரமொன்றில் நான்றுகொண்டு செத்தான்.

உயிர்த்தெழுதல்

இயேசு இறந்த மூன்றும்நாள் உயிர்த்தெழுவார் என்ற வதந்தி மக்களிடையே இருந்ததை அறிந்த பெரிய குருக்கள் பிலாத்தின் அனுமதி பெற்று இயேசுவின் கல்லறைமீது முத்திரையிட்டுக் காவல் வைத்தனர்.

எனினும் இயேசுநாதர் மூன்றும்நாள் உலகிற்கு வெளிப்பட்டு தமது அன்னை, மரியமக்தலேனம்மாள், தமது பதினேருசீடர்கள், கலிலேயமக்கள் ஐநூற்றுவர் முதலியோர்க்குக் காட்சியும் அருளுரையும் வழங்கினர். மீண்டும் நாற்பது நாட்கள் உலகில் வாழ்ந்தார். இறுதியாக அவர்ஒலிவமலையின்மீது ஏறிநின்று விண்ணுலகம் புகுந்தார்.

இனிய அன்புள்ளம் படைத்த இயேசுநாதர் தமது முப்பத்து மூன்று ஆண்டு வாழ்க்கையில் ஒரு நல்ல மனிதவாழ்விற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து நிலையற்ற இவ்வுலகில் நிலைத்த புகழை நிலை நிறுத்தினர்.

இயேசுநாதரின் மறைவுக்குப் பின்னும் அவரது கொள்கைகளையும் போதனைகளையும் மக்கள் மறக்கவில்லை. அவரது சீடர்கள் தமது தலைவரின் கொள்கைகளை எங்கும் பரப்பினர். இயேசுகிறிஸ்துவால் போதிக்கப்பட்ட கொள்கைகளைப் பின்பற்றும் மக்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறுகிறோம். இன்று

உலகமக்கள் தொகையில் ஐந்தில் ஒருபங்கினர் கிறிஸ்துவைக் கடவுளாகக் கொண்டு அவரது போதனைகளைப் பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர்.

அன்புநெறி சிறந்ததென அகிலமுணர்ந் துய்ய
ஆண்டவனே என்செய்தாய்! அதைநினைந்தால் அந்தோ!

என்புருகும் உயிருருகும் எண்ணமெலாம் உருகும்
எம்மொழியால் இயம்பவல்லேன்! ஏழைமகன் அப்பா!

மண்ணுலகில் அவதரித்தாய்! மக்களிடை வதிந்தாய்!
மறைமொழிந்தாய்! அவ்வளவில் மனம்நிறைய இலையோ!

பொன்னுடலை வதைக்கவிட்டாய்! பொலியுயிரை நீத்தாய்!
பொறையன்பு நீயென்னும் பொருண்மை தெளிந் தேனே!

திரு. வி. க.

JESUS CHRIST

BY

VIDWAN. V. SUBRAMANIAN

HEAD TAMIL PANDIT

MUNICIPAL HIGH SCHOOL.

THE VENDHAN PUBLISHI

GUGAI, SALEM

Wrapper printed at R. Rama &